சுவனக் பெருகி வருமோ...

ரமணிசந்திரன்

வைகை பெருகி வருமோ!

1

"ஏய்... பிரதீப் என்னய்யா, உன் கார் இவ்வளவு மெது வாகப் போகிறது? அதோ, அந்த ஸ்கூட்டி கூட, உன்னை முந்திக் கொண்டு போகிறது? ஏதேனும் ரிப்பேரா? ரொம்ப போரடிக்கிறாயே! உன் கார் இப்படி என்று முன் னாடியே தெரிந்திருந்தால், நான் சுகேஷ், காரிலேயே போயிருப்பேனே! அவனோட ஸ்கோடா, ரோடில்

பறக்கும்யா! இது நிஜமாகவே, டயோட்டாதானா? ஏதோ கல்யாண ஊர்வலம் போகிற கார் மாதிரி, ஆடி அசை கிறதே!'' என்று உடன் அமர்ந்திருந்த யேஷா எரிச்ச லோடு கேட்கவும், காரை ஓட்டிக் கொண்டிருந்த பிர தீபனும் பொறுமையிழந்தான்.

''இந்தப் போக்குவரத்து நெரிசலில் 'ஃபார்முலா ஒன்' னில் ஓடுகிற காரே என்றாலும், இதற்குமேல், வேகம் போகாது'' என்றான் அவன். பொறுமையை இழுத்துப் பிடித்துச் சொன்னதோடு, அத்துடன் வேகத்தை அதி கரித்து 'சைக்கிள் கேப்' என்று சொல்வார்களே, அது போலச் சிறு இடைவெளிகளில் கூடப் புகுந்து ஓட்டவே, சில பல வண்டிகளை முந்திக்கொண்டு, கார் சற்றே முன்னே சென்றது, கூடவே, சிலரின் திட்டுக்களையும் சேர்த்து வாங்கிக் கொண்டு!

ஆனால், சற்று தூரத்திலேயே இன்னொரு நெரிசலில் சிக்கவே, மறுபடியும் கார் ஊர்கோலம் போனது.

அருகில் இருந்தவள் மீண்டும் பாடலைத் தொடங் கினாள். ''என்னய்யா போர் இது? பார் அந்த சிவப்பு ஸ்கூட்டி, மறுபடியும் உன்னை முந்திவிட்டது! நீ என்றி லிருந்து, இப்படிப் பாடாவதித் தனமாகக் கார் ஓட்டத் தொடங்கினாயோ, தெரியவில்லையே! முதலிலேயே தெரிந்திருந்தால் சுகேஷோடு ஜாலியாக...'' அவள் புலம்ப, 'இனி இவள் கெஞ்சினாலும் காரில் ஏற்றுவது இல்லை' என்று மனதுள் உறுதி செய்த பிரதீப் மறுபடி யும் சந்து பொந்துகளில் சர் சர்ரென்று புகுந்து ஓட்ட லானான்.

முக்கியமாக, அந்த சிவப்பு ஸ்கூட்டியை முந்தியாக வேண்டுமே. என்ன திமிர் இருந்தால், இரண்டாவது

தடவையாக, அவனது காரை முந்திக்கொண்டு போவாள்? அதுவும், இந்த யேஷாப் பிசாசு அருகே அமர்ந்து, எரிச்சலூட்டும் விதமாகக் 'கமென்ட்டரி' கொடுத்துக் கொண்டிருக்கும்போது!

அன்றிருந்த வாகன நெரிசலிலும், அந்த ஸ்கூட்டியைத் தேடிப் பிடித்தான்.

மிகவும் வேகமாக ஓட்டிச் சென்ற அவளை மிரட்டும் பாவனையில் ஹார்னை பலமாக அடித்தவாறு அந்த ஸ்கூட்டியை முந்துகையில் ''யாஹூ...! இப்போதுதான், நீ என் பிரதீப்!'' என்று யேஷா உற்சாகத்துடன் கத்தும் போதே, ஸ்கூட்டிக்காரப் பெண்ணின் துப்பட்டா, காரின் பக்கவாட்டுக் கண்ணாடியில் மாட்டி, நீளக் கிழிவதைக் கண்டான்.

காரை நிறுத்தும் எண்ணம் அவனுக்கு வரவில்லை. சற்று வேகம் குறைத்து ஓட்டியபடியே, பைக்குள் கையை விட்டு, தட்டுப்பட்ட ரூபாய் நோட்டுக்களில் ஒன்றை எடுத்தான்.

பட்டனைத் தட்டி, கார்க் கண்ணாடியை இறக்கியவன், கண்ணாடியில் மாட்டியிருந்த துப்பட்டாவை எடுத்து விட்டதோடு, ஐநூறு ரூபாய் நோட்டை, ஸ்கூட்டிக்காரி மீது வீசி எறிந்தான்.

அத்தோடு முடிந்தது என்று காரை முன்னே செலுத்த லானான்.

ஆனால், விஷயம் அத்தோடு முடியவில்லை!

அடுத்த சிக்னலில் வண்டி நிற்கும்போது, அவனது காரின் பக்கவாட்டுக் கதவு கண்ணாடி தட்டப்பட்டது.

யேஷா பக்கம் பார்த்து, அவள் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தவன் திரும்பிப் பார்த்தால், அதே சிவப்பு ஸ்கூட்டி!

வில்லனைக் கொல்லும் அம்மன் அவதாரம்!

நெறித்த புருவங்களோடு 'திமிராடா' என்பதுபோல ஏதோ சொன்னவாறு கையை வீசினாள் அவள்.

சுக்கு நூறாகக் கிழிக்கப்பட்டிருந்த அந்த ரூபாய் நோட்டுத் துணுக்குகளை, அவன் புறமாக வீசியெறிந்து விட்டு, வண்டியைக் கிளப்பியவள், இண்டு இடுக்குகளில், நுழைந்து, எங்கோ விரைந்து சென்று விட்டாள்.

முகத்திலேயே எறிந்தது போன்ற உணர்வு அவனுக்கு.

ஏசி காரின் கண்ணாடிக் கதவுகள் மூடியிரா விட்டால், அப்படித்தானே ஆகியிருக்கும்?

'என்ன திமிர்' என்று அவன் சினக்கையில், யேஷா ஆத்திரத்துடன் கத்தினாள்.

''ஏய்... என்ன கொழுப்புடீ உனக்கு? அது ஐநூறு ரூபாய் நோட்டுடி! பெரிய கோடீசுவரி மாதிரி, ரூபாய் நோட்டைப் போய்க் கிழித்து எறிந்து விட்ட ராட்சசி! ஐநூறு ரூபாய்க்கு என்னவெல்லாம் செய்யலாம்? ஐயோ! ஒன்றுமில்லாமல் போய்விட்டதே! பிரதீப், எனக்கு மனசே சரியில்லையப்பா! எங்காவது போய்... ஐஸ் ஸ்கேட்டிங் போகலாமா? ப்ளீஸ்யா...'' என்று அவள் கெஞ்சுதலாகக் கேட்டுக் கொண்டிருக்கும்போதே, அவளது செல்போன் பாடத் தொடங்கியது.

எரிச்சலோடு அதை எடுத்து, அழைப்பது யார் என்று பார்த்தவள், ஆத்திரத்துடன், செல்லை ஆஃப் செய்தாள்.

''நம்ம செட் தீனாதான்ப்பா! ஒரு பயனும் இல்லாமல், ஐநூறு ரூபாய் அநியாயமாகப் போய்விட்ட துக்கத்தில் இருக்கிறோம்! அதுவும் கேவலமான இழப்பு! இந்த நேரத்தில் யார் குரலையும் கேட்கவும், பேசவும் எனக்குப் பிடிக்கவில்லை. அடுத்து, உன்னைப் பிடிப்பார்கள்! எங்கே, கொடு, உன்னதையும் அணைத்து வைத்து விடுகிறேன்'' என்று சீட் நடுவே கிடந்த, அவனது செல் போனையும் எடுத்து, ஸ்விட்ச் ஆஃப் செய்து வைத்தாள். ''சொல்லுய்யா, எங்கே போகலாம்?''

பிரதீபனுக்கும் மனது சரியில்லை.

அவன் கொடுத்த பணம்! அதை, ஒருவர் வேண்டாம் என்று திருப்பிக் கொடுப்பதே, கேவலம்! அதிலும், கிழித்து, அவன் முகத்திலேயே வீசி எறிந்துவிட்டுப் போகிறாள் ஒருத்தி! எவ்வளவு பெரிய அவமானம்!

இது, எத்தனை பேர் கண்ணில் பட்டதோ?

பார்த்தவர்கள் என்ன எண்ணியிருப்பார்கள்? எவனோ அயோக்கியன், ஏதோ சில்மிஷம் பண்ணிவிட்டுப் பணத்தை நீட்டியிருக்கிறான். அவள் மானஸ்தி, சரியாகத் திருப்பிக் கொடுத்து விட்டாள் என்றுதானே?

இன்னும் அசிங்கமாகக் கூட கற்பனை பண்ணலாம்! அதுகூட, யாரோ அறியாதவர்கள், என்னமோ எண்ணி விட்டுப் போகட்டும்! அடுத்த நிமிஷமே! வேறு ஒன்று கிடைத்தால் மறந்தும் போகலாம்!

ஆனால், கோபமும் வெறுப்புமாக, அந்த ஆங்கார முகம், அவனுக்கு என்றேனும் மறக்குமா?

மறந்தே ஆக வேண்டும். மறப்பதற்கு வழியா இல்லை?

செலவழிக்க காசுதான் வேண்டும்.

அந்தப் பெண் கிழித்து, அவன் முகத்தை நோக்கி வீசி எறிந்தாளே, அந்தக் காசு! அதைப்போல, எத்தனை எத்தனையோ லட்சம் மடங்கு அதிகம் வைத்திருப்பவனுக்கு, எதை மறப்பதும் கடினமே அல்ல!

யேஷா கேட்டது போல, ஐஸ் கேட்டிங் போனார்கள். உடல் களைக்க ஆடிவிட்டு, கடைசியாக வந்த 'மால்' போனார்கள். கால் வலிக்கச் சுற்றிவிட்டு 'த்ரீடி' திகில் படம் ஒன்று பார்த்தார்கள்.

கடைசியாக, யேஷாவை இன்னொரு நட்புக் கும்பலில் விட்டுவிட்டு, ஒருவாறு வீட்டுக்குக் கிளம்பிச் சென்றான்.

வீடு இருக்கும் தெருவில் வண்டியைச் செலுத்தும் போதே, என்னவோ உறுத்தியது.

இந்த நேரத்தில், இந்த பகுதியில் என்ன இத்தனை கார்கள்?

யார் வீட்டிலும், ஏதேனும்... நல்ல விஷயத்துக்கு உரிய மங்கள சத்தங்கள் எதையும் காணோம்.

கெட்டது என்றால்... ஒருவேளை, பக்கத்து வீட்டில் அந்தத் தாத்தா...

அடைத்துக் கொண்டு நின்ற கார்களின் ஊடே, வண்டியைச் செலுத்த முடியாமல், சாலையின் ஓரமாக நிறுத்திவிட்டு, காரை விட்டு இறங்கி நடக்கலானான்.

எல்லாம் பெரிய பெரிய வீடுகள், மூலை திரும்பினால், இரண்டாவது வீடு, அவர்களது. அந்தப் பக்கம் தான்!

கடைசி வீடு தாண்டி, திருப்பத்தில் காலடி எடுத்து வைத்தவன், அதிர்ந்தான். வாசலில் ஷாமியானா பாட்டு, கூட்டம் அடைத்து நின்றது, அவனது வீட்டில்தான்!

யா...ர்? அப்... அப்பாவா? எப்...படி?

விரைந்தோடிச் சென்று பார்த்தால், பெரிய ஹாலில், கண்ணாடிப் பெட்டியுள் கண் மூடிக் கிடந்தவர், அவனுடைய தந்தையேதான்!

திக்பிரமித்து நின்றவனிடம் ''அண்ணா...'' என்று ஓடி வந்து, அவனது தோளில் முகம் புதைத்து அழுதாள் தங்கை. ''அண்ணா எங்கேண்ணா போனாய்? அப்பா உன்னை, ரொ... ரொம்பத் தேடினாரே! உன்னைக் கூப்பிட்டுக்கொண்டே... கூப்பிட்டபடியே... ஐயோ அண்ணா...'' என்று கதறினாள் மானசி.

கூப்பிட்டிருக்கிறார்! தந்தை, அவரது இறுதி நேரத்தில், அவனைக் கூப்பிட்டிருக்கிறார்!

இறுதி நேரம் என்று தெரிந்திருந்ததா? தெரிந்து, மகனான அவனிடம் ஏதோ சொல்ல விரும்பினாரா? அந்த நேரத்தில், அவன் அருகில் இல்லாமல் போனானே!

தேவநாதனுக்கு ஏற்கனவே ஒரு தரம் லேசாக நெஞ்சு வலி வந்தது. உண்மையே. ஆனால், அது பயப்படக் கூடிய அளவில் இல்லை என்று அவரைப் பார்த்து வந்த மருத்துவரே சொல்லியிருந்தார். உணவு, உடல் பயிற்சிகளில் சில சிறு மாற்றங்களே போதுமானவை என்பது அவரது அபிப்பிராயம். எதற்கும் இருக்கட்டும் என்று, பிரதீபன் பிடிவாதமாக இன்னும் இரு இதயநோய் வல்லுநர்களிடம் தந்தையைக் காட்டியபோது, அவர்களும்

அதையேதான் சொன்னார்கள். அப்போதும் அவ்வப் போது திடீரென்று, தொழிற்சாலைக்குச் சென்று, வேலை செய்யும் சாக்கில், பெற்றவரையும் பார்த்து வரத்தான் செய்தான்.

தேவநாதனும் உடல்நிலை பற்றி அலட்சியமாக இருப்பவரில்லை. மருத்துவரின் ஆலோசனையைக் கடைப்பிடித்ததோடு, எடுபிடி போல எப்போதும் கூடவே இருக்கும்படி, மருத்துவம் அறிந்த ஓர் ஆளை யும் கூடவே வைத்திருந்தார்.

அதன் பிறகுதான், மகன் கவலையற்று நிம்மதியாக பழைய மாதிரி இருக்கலானான்.

எல்லோரையும் ஏமாற்றிவிட்டு, எமன் இப்படி திடு மென வந்து, உயிரைப் பறிப்பான் என்று யாருக்குத் தெரியும்?

'அந்த கடைசி நேரத்தில் தன்னிடம் ஏதோ சொல்லத் துடித்திருக்கிறாரே! அது என்னவாக இருக்கும்? கட வுளே, இனி அதை எப்படி அறிவது?'

நெஞ்சு காந்தியது, அவனுக்கு.

மறுதோளில், ஒரு கை பரிவாகப் படிந்தது.

குடும்ப வக்கீல், அப்பாவுடைய நண்பரும் கூட!

தவிப்புடன் கேட்டான். ''அப்பா கூப்பிட்டாராமே, அங்கிள்? ஏன்? அவருக்கு... அவருக்கு... நிலைமை... நிலைமை தெரியுமா?''

வக்கீல் ஞானசகாயத்தின் கண்களில் இரக்கம் ததும் பியது ''கடைசி நேரத்தில் என்பதா? அது... ஆனால், உன்

பெயரைச் சொல்லிக் கூப்பிட்டுக் கொண்டே இருந்தார். ஏதோ சொல்ல மிகவும் ஆசைப்பட்டார் போல. ஆனால் நீ செல்லைக்கூட, அணைத்து விட்டிருந்தாய் போல, தொடர்பு கொள்ளவே முடியவில்லை, பாவம்!''

யேஷா, அவனது செல்போனை எடுத்து 'ஆஃப்' செய்தது படம் போல, பிரதீபனின் கண் முன்னே ஓடியது.

கூடவே, அந்தத் திமிர்ப் பிடித்தவளின் செய்கை! அல்லது... திமிர் அவனதா? அதனால்தானா...

மேலே யோசிக்க முடியாமல், யார் யாரோ வந்தார்கள், வருத்தம் தெரிவித்தார்கள், சென்றார்கள்.

அழுதழுது ஓய்ந்து கிடந்த தங்கை!

மறுநாள் செய்ய வேண்டிய சாங்கியங்கள்!

வக்கீல் ஞானசகாயம் கூடவே இருந்தார். பலரை, பிறகு பார்ப்போம் என்று, அவரே சமாளித்து அனுப்பினார். அவருடைய மனைவியுமே, மானசியோடு வெகு நேரம் இருந்துவிட்டுத்தான் சென்றாள்.

மறுநாள் எல்லோரும் சென்ற பிறகே, வக்கீல் கிளம்பினார்.

அப்போதும், தந்தையின் பெரிய படத்தைப் பார்த்த படிதான், பிரதீபன் அமர்ந்திருந்தான். 'என்னிடம் என்ன சொல்ல விரும்பினீர்கள். அப்பா? எதை நான் அறிந்து கொள்ள வேண்டியிருந்தது? என்ன விஷயம்?' என்று மனதுக்குள்ளேயே தந்தையைக் கேட்டுக் கொண்டே, திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டே இருந்தான்.

தோளில் படிந்த கையை உணர்ந்து நிமிர்ந்து பார்த்தால், அப்போதும் வக்கீல்தான், பரிவுடன் பார்த்தபடி பக்கத்தில் நின்றார்.

அவரும் கிளம்புகிறார் என்று புரிந்து, பிரதீப் மெல்ல எழுந்தான்.

அவர்களைப் போலப் பலருக்குக் கணக்கு வழக்குப் பார்க்கிற வக்கீல் அவர். அவரை, இங்கேயே பிடித்து வைப்பது, முறையல்ல!

தோளை அழுத்தியவாறே ''நீ தைரியமாக இருக்க வேண்டும், பிரதீப். எப்போதும், கலங்காமல்... திடமாக...'' என்று முடிக்காமலே நிறுத்தினார் அவர்.

''திடத்துக்கு என்ன, அங்கிள்?'' என்றான் அவன் வறண்ட குரலில், ''ஆனால் அப்பா தேடிய நேரம் இல்லாமல் போனேனே என்று, அதுதான் மனதை அறுக்கிறது. என்ன சொல்ல... வெறுமனே பார்க்க விரும்பிக் கூடத் தேடியிருக்கலாம். அந்தத் திருப்தியைக் கூடத் தராமல்... ஏதோ பெரிய கடமையில் தவறி விட்ட மாதிரி இருக்கிறது, அங்கிள்!'' என்றான் வருத்தத்துடன்.

''அதில்லை!...'' என்று எதையோ சொல்லத் தொடங்கிவிட்டு, ஞானசகாயம் வாயை மூடிக்கொண்டார்.

சின்னவன் தன் தவிப்பிலேயே மூழ்கிவிடவும், ''அதெல்லாம், மெல்லப் பார்க்கலாம், பிரதீபா. இப்போதைக்கு, மானசிக்கு நீதான் எல்லாம் என்பது நினைவிருக்கட்டும். எது, எப்படி ஆனாலும், கலங்காமல், கோபப்படாமல், அமைதியாக இரு. ஓரிரு நாட்களில்

மறுபடியும் வருகிறேன்'' என்று விட்டு கிளம்பிப் போனார் அவர்.

மானசிக்கு எல்லாம் நீதான் என்று அவர் சொன்னது. அவனுமே அறிந்ததுதான். ஆனால், அதைக் குறிப்பிட்டு அவர் பேசியது மனதைத் தாக்க, எழுந்து தங்கையைப் பார்க்கப் போனான்.

வீட்டுக்குச் செல்லப் பெண் அவள். பத்து ஆண்டு களுக்கு முன்பாக அவர்களுடைய தாயார் அவர்களைப் பிரிந்து கடவுளிடம் செல்ல நேர்ந்தது. பத்து வயது சிறுமியாகக் கண்ணீருடன் மலங்க விழித்த மானசி என்றால், அவள் தந்தைக்கு உயிர்! ஆறு வயது மூத்தவ னான தமையனுக்கு அவள் அருமையே!

திறந்திருந்த அறை வாயிலில் நின்று பார்த்தபோது, படுக்கையில் பரப்பி வைக்கப்பட்டிருந்த பல பொருட் களைப் பார்த்தபடி கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தாள் அவள்.

எல்லாம், தேவநாதன் மகளுக்கு வாங்கிக் கொடுத்த பரிசுகள்! எப்போது, எப்படிக் கொடுத்தார் என்று, அந்த நினைவுகளில் ஆழ்ந்திருந்தாள் போலும்.

திரும்பிச் சென்று, தங்கை சாப்பிட்டாளா என்று, சமையல்காரம்மாவிடம் விசாரித்தான்.

இல்லையென்று தெரிந்ததும், தட்டில் உணவை எடுத்துக் கொண்டு, மானசியிடம் சென்றான்.

அண்ணனைப் பார்த்ததும், மறுபடியும் அழுதவளை ஆறுதல் படுத்தி, உண்ண வைத்தான்.

''எனக்கும் சாப்பிடப் பிடிக்கவில்லைதான், மனும்மா. ஆனால், பட்டினி கிடப்பதால், ஆகப் போவது என்ன? குறைந்தது, ஓர் ஐந்து நிமிஷம் அப்பா வந்து விடுவாரா? என்னை எதற்குத் தேடினார் என்று மட்டுமேனும் அறிந்து கொள்ள முடிந்தால்... வயிறு வீங்கும் அளவுக்குச் சாப் பிட்டு விடுவேன். ஆனால் பயன் கிடையாதில்லையா? இந்த நிலைக்கு, நாம் பழகித்தான் ஆக வேண்டும். முக்கியமாக, நாம் பட்டினி கிடந்தால் அப்பா தாங்கு வாரா என்று யோசித்து...'' என்றவனுக்குத் தொண்டை அடைத்துப் பேச்சு நின்றது.

''நீ சொல்வது சரிதான் அண்ணா!'' என்று, அவன் எடுத்து வந்ததைக் கஷ்டப்பட்டுப் பாதி உண்டாள் தங்கை.

அவள் கையைக் கழுவிக்கொண்டு வந்தபின், இருவருமாகத் தந்தையைப் பற்றிச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

பேசிக் கொண்டிருக்கும்போதே, தொழிற்சாலை நிர்வாகி போன் செய்தார்.

''சார், நாளைக்கு எப்படி என்று, தொழிலாளர்களுக்கு அறிவிக்கட்டும்?'' என்று வினவினார்.

ஒரு கணம் யோசித்துவிட்டு ''வேலைக்கு வரச் சொல்லி விடுங்கள். மேனேஜர். தேசத் தலைவர்களின் நினைவு நாளுக்கு விடுமுறை விடுவதே, அப்பாவுக்குப் பிடிக்காது. இரு மடங்கு உழைப்பதுதான், அவர்களுக்குச் செய்யும் உண்மையான மரியாதை என்பார். அதனால், வேலை நடக்கட்டும். நான், முடிந்தவரை வரப் பார்க் கிறேன்'' என்றான்.

அண்ணன் பேசுவதைப் பார்த்துக் கொண்டிருந்த மானசி, முகத்தில் வாட்டத்துடன் யோசனையாக நோக்கி ''அன்று எங்கேண்ணா போயிருந்தாய்? உன்னிடம் ஏதோ முக்கியமாகச் சொல்ல வேண்டும் என்று, அப்பா ரொம்ப நினைத்ததாகத் தோன்றியது. எங்கே, எங்கே என்று, உன்னைத்தான் தேடித் தவித்தார், அண்ணா. க.. கடைசி வரை!'' என்று வேதனையோடு கூறினாள்.

என்னவாக இருக்கும் என்று, பிரதீபன் மறுபடியும் தவிக்கலானான்.

சற்றுத் தள்ளி, கைகட்டி நின்று கொண்டிருந்த எடு பிடியைப் பார்த்ததும் ஒன்று தோன்ற, அவனை அருகே அழைத்தான்.

அவன் முகத்தில் மிரட்சி தெரியவும் ''உன்னை எந்தத் தப்பும் சொல்லவில்லைப்பா. எதற்காக என்னைத் தேடினார் என்று ஏதாவது தெரியுமா என்று கேட்கத்தான் கூப்பிட்டேன்'' என்றான்.

''அ... அதெப்படி சார், எனக்குத் தெரியும்? சொ... சொந்த விஷயமெல்லாம் நான் கேட்பதில்லை சார். இப்போது என்னைக் கணக்கு முடித்து அனுப்பி விட்டால், நான் அடுத்த வேலை தேடி, என் வயிற்றுப் பிழைப்பைப் பார்க்கப் போக, உதவியாக இருக்கும்'' என்றான் அவன், படபடப்புடன்.

கூடவே வைத்துச் சாப்பாடு போட்டவரிடம் அபி மானமே இல்லையே என்று எண்ணியபோதும், அவனைப் பொறுத்தவரை, இது வருமானத்துக்கு உரிய ஒரு வேலை மட்டும்தானே என்றும் தோன்றிவிட, அவ

னுக்குச் சம்பளத்தைக் கொடுத்து அனுப்பி வைத்தான் பிரதீபன்.

இடைப்பட்ட சலனம் விலகியதும், பழைய கேள்வி யும், மறுபடியும் குடையலாயிற்று.

அவன் முகத்தைப் பார்த்துவிட்டு ''ஒருவேளை, அப்பாவுக்குத் தொழிலில் ஏதாவது பிரச்சினையோ? அதை எப்படிச் சமாளிப்பது என்று சொல்ல நினைத் தாரோ?'' என்று அவனுக்கு ஐடியாக் கொடுத்தாள் தங்கை.

இல்லையே. தொழில், ஓரளவு அவனும் சேர்ந்து பார்ப்பதுதான். அடியோடு அறியாதது அல்ல! ''முழு நேரமாகத் தினமும் வந்து பாரேன் தீபு!'' என்று தேவ நாதன் சொல்வதுண்டு. ''இரண்டு முதலாளிகளுக்கு இங்க இடம் கிடையாதுப்பா. நீங்கள் ஓய்வு எடுத்துக் கொண்டு வீட்டில் உட்காருவதாகச் சொல்லுங்கள், நான் முழுதாகப் பார்க்கிறேன்'' என்றுவிட்டு, பிரதீபன் நண் பர்களோடு சுற்றப் போவான். அவரது இதயம் இந்த அளவுக்குப் பலமிழந்தது பற்றி முன்பே தெரிந்திருந்தால்...

நெஞ்சில் அடைத்ததை விழுங்கிக் கொண்டு, தங்கை சொன்னதை யோசித்துப் பார்த்தான். ஊகூம். தொழி லில் எந்த விதமான பிரச்சினைக்கும் இடமே கிடை யாது!

தங்கையை அவன் விட்டுவிட மாட்டான் என்பதும், அவருக்குத் தெரியாதது அல்ல! எனவே, அதைச் சொல் லவும் அவனை, அவர் தேடியிருக்க முடியாது!

வேறு என்ன, கடைசி முறையாகப் பெற்ற மகனைக் காணத் துடித்த தந்தைக்கு, அவன் கடமை

செய்யவில்லை. அந்த நேரத்தில், சும்மா ஊர் சுற்றிக் கொண்டிருந்தான்.

அது ஒரு பக்கம் நெஞ்சை அறுத்தபோதும், தந்தை தேடியதற்கு வேறு காரணம் இருக்கக் கூடும் என்ற உறுத்தலையும், அவனால் அடியோடு விலக்க முடிய்வில்லை.

என்ன என்ன என்று தவித்தவனுக்கு, மறுநாள் பேரிடியாக ஒரு விடை கிடைத்தது!

திடம், அமைதி பற்றி, வக்கீல் ஞானசகாயம் செய்த உபதேசம் ஏன் என்றும் புரிந்தது!

2



அன்று தொழிற்சாலைக்குச் சென்று, தந்தையின் வேலையையும் சேர்த்துப் பார்க்க வேண்டும் என்று எண்ணியவாறே காலையில் எழுந்தவன், அலுவலுக்குச் செல்வதைத் தங்கையிடம் சொல்வதற்காக அவளைத் தேடிச் சென்றான்.

வழக்கமான சிரிப்பு, ஆரவாரம் எதுவும் இல்லாமல் இருவரும் உணவருந்தி முடிக்கையில், வீட்டுக்கு யாரோ இரண்டு பேர் வந்திருப்பதாக எடுபிடி வந்து சொன்னான்.

துக்கம் விசாரிக்க வந்தவர்கள் என்று எண்ணி, ''உட்காரச் சொன்னாயல்லவா, ராசு?'' என்று கேட்ட வாறே, கையைக் கழுவினான் பிரதீபன்.

''சின்னய்யா... அவங்க... வந்து சின்னய்யா, அவங் களைப் பார்க்க, நீங்க தனியாகப் போகாதீங்க. நம்ப தோட்டக்கார ஆறுமுகண்ணனைக் கூடக் கூட்டிப் போங்க!'' என்றான் ராசு.

''என்னடா உளறுகிறாய்?'' என்று கேட்டபடியே கையைத் துடைத்து, டவலை வளையத்தில் மாட்டி விட்டு, அவனிடம் திரும்பினான், முதலாளி.

''துணை கூட்டிச் செல்லும்படி, அப்படி எந்தச் சண்டியர்டா வந்திருக்கிறார்கள்?'' என்று இலகுவாக வினவியவாறே ஹால் புறமாகக் கால் எடுத்து வைக்கும் போதே, ''நாங்கதான்'' என்றபடி இரண்டு பேர், உண வறையின் உள்ளே வந்தார்கள்.

அவர்களில் ஒருவன் தெரிந்தவன்தான். பெயர் முத் தையன். அவ்வப்போது, தேவநாதனிடம் வந்து போவான். ஓரிரு முறை பார்க்க நேர்ந்தபோது, அவன் ஒதுங்கிப் போய்விடுவான்.

அவனோடு, கிட்டத்தட்ட அவனது சாயலில் இன் னும் ஒருவன்.

சொந்த வீடு போல ஓர் உரிமையுடன் அவர்கள் உள்ளே வந்த விதம் உறுத்த, ''போய் ஹாலில் உட் காருங்கள். இதோ வருகிறேன்'' என்றான் பிரதீபன்.

ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு விட்டு, அவர் களில் ஒருவன், அவ்வப்போது தந்தையிடம் வருகிறவன்

பேசினான். ''நாங்க ஏன் ஹாலுக்குப் போகணும்? வீட்டுக்குச் சொந்தக்காரங்க, நாங்க. எங்க வீட்டிலே, நாங்க எங்கே வேணுமானாலும் போவோம், வருவோம். ஹாலுக்கும், அதற்கும் அப்பாலே வெளியேயும் பேரக வேண்டியது, நீதான் தம்பி. நாங்க இல்லை!'' என்று அவன் கூற, அடுத்தவன் சாப்பாட்டு மேஜை அருகே சென்று ''இன்றைக்கு நாஷ்டாவுக்கு என்ன?'' என்று செல்லோக்களைத் திறந்து ஆராய்ந்தான்.

தட்டில் இருந்த கடைசிப் பகுதியை அப்படியே வைத்துவிட்டு, மிரட்சியுடன் எழுந்து, அண்ணனின் பின்னே போய் ஒண்டி நின்றாள் மானசி.

தந்தை சொல்ல விரும்பிய விஷயமோ என்று ஒரு வினாடி யோசித்த பிரதீபனுக்கு தங்கை உண்டு முடிக்காமலேயே எழுந்து வந்தது, ஆத்திரத்தை ஏற் படுத்தியது.

''ஏய், யார் நீங்கள்? நாகரீகமே இல்லாமல், உண வருந்துகிற இடத்துக்கே வந்து, கண்டபடி உளறிக் கொட்டிக் கொண்டு... முதலில் இங்கிருந்து போங்கள். என் தங்கை சாப்பிட வேண்டும்!'' என்றான் அதட்ட லாக.

தட்டில் இருந்த பாதி சப்பாத்தியைப் பார்த்து விட்டு ''அய்யோ, இன்னும் பாப்பா தின்னு முடிக்கவில்லை, அண்ணே, போகட்டும். கடைசி வேளையா, நல்லா சாப்பிட்டு விட்டுப் போகட்டும். நீ போய்த் தின்னு, கண்ணு, நாங்க முன்னாடி ரூமுக்குப் போறோம்'' என்று ஹால்புறமாக நகர்ந்தான், அவர்களுள் சின்னவன்.

''நீ போய்ச் சாப்பிடம்மா!'' என்று விட்டு, அந்த இருவரையும் பின் தொடரப் போன பிரதீபனை, மானசி கையைப் பிடித்து நிறுத்தினாள்.

''என்னம்மா?'' என்று திரும்பிப் பார்த்தவனிடம், ''எனக்குப் பயமாக இருக்கிறதேண்ணா'' என்றாள் தங்கை குரல் நடுங்க. ''அப்பா உன்னைத் தேடியது... இ... இதற்காகத்தானோ?'' என்றாள் கலக்கத்துடன்.

பிரதீபனுக்கும் முதலில் தோன்றியது, இதே எண்ணம்தான். ஆனால், அவர்களுக்கு மட்டுமே சொந்தமான இந்த வீட்டை விட்டு, அவர்களையே வெளியேற வைக்கும்படியாக என்ன நடந்திருக்க முடியும்?

எதுவும் நடக்க வாய்ப்பில்லை என்ற முடிவுக்கு வந்து ''பெரிய ஆட்கள் திடுமென மறைந்தால், ஆதாயம் பார்க்க, இதுபோலச் சில புல்லுருவிகள் கிளம்புவார்கள் போல, அவர்களை, நான் பார்த்துக் கொள்கிறேன், நீ சாப்பிடும்மா'' என்று முன்னறைக்குச் சென்றான்.

ஆனால், ஹாலில் அவனுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது.

அந்த சகோதரர்களில் மூத்தவனாகத் தோன்றியவன், பிரதீபனைப் பார்த்ததும், ''பாரு தம்பி, தங்கச்சிப் பொண்ணு சாப்பிடணும்னு சொன்னே. தங்கச்சி செண்டிமெண்டு, அதுதான், பேசாத வந்திட்டோம். நாங்களும், தங்கச்சிக்காக வந்தவங்கதானே? உங்க அப்பாரு உயிலு கொண்டு வந்திருக்கோம். சாவறதுக்கு கொஞ்ச நாளைக்கு முன்னாலேயே, சொத்து பத்து எல்லாத்தையும், என் தங்கச்சி மகன் பேரிலே, எழுதி வாங்கிட்... மச்சான் எழுதிக் கொடுத்திட்டார். உயிலு காப்பி

கொண்டு வந்திருக்கோம். நீ வேணுமானால் நல்லாப் பார்த்துக்கோ. பாத்திட்டு, நீயும் உன் தங்கச்சியும், துணி மணியை மட்டும் எடுத்துக்கிட்டு, சவுண்ட் விடாமல், வீட்டை விட்டு வெளியே போயிடணும், நாளைக்கே, எங்க தங்கச்சி, தங்கச்சி பையனோட, நாங்க, இங்கே குடி வரப்போறோம்'' என்று, கூறியவாறு, மடித்திருந்த ஒரு காகிதத்தை எடுத்து, அலங்காரக் கண்ணாடி மேஜை மீது வீசிப் போட்டான்.

பேச்சு செயல் எல்லாவற்றிலும் திமிரோடு ஒரு நிச்சயமும் இருந்தது.

'ஆறுமுகண்ணனைக் கூட்டிப் போக' சொன்னது ஏன் என்று புரிய, பிரதீபன் செல்போனை எடுத்தான்.

''இதோ பாருங்கள் நீங்கள் யார் என்று எனக்குத் தெரியாது. தெரிந்து கொள்ள விருப்பமும் கிடையாது. நீங்களாக மரியாதையாக வெளியே போகவில்லை என்றால், போலீசைக் கூப்பிட நேரும்'' என்றான்.

மிரட்டல்தான். வேலையாட்களைக் கூப்பிட்டாலே, அடித்து விரட்டி விடுவார்கள். ஆனால், வீட்டுக்குள் ரசாபாசம் எதுவும் வேண்டாம் என்று பிரதீபன் நினைத்தான்.

துக்க நேரத்தில், சட்டென மனம் கட்டுப்பாட்டை இழக்கக் கூடும் என்பதற்காகவே எதற்கும் கோபப் படாமல், அமைதியாக இருக்க வேண்டும் என்று வக்கீல், வலியுறுத்திச் சொன்னாரே!

ஆனால், வந்தவர்கள் போலீசுக்கு அஞ்சக் காணோம்.

''போலீசுக்குத்தானே? தாராளமாகப் போப்பா! சட்டப்படி எழுதி வாங்கி.. இதப் பாருப்பா, வக்கீலு வச்சித்தான்,

எல்லாம் சின்னப் பிள்ளைக்குன்னு உங்கப்பாரு எழுதியிருக்கிறாரு. உங்க வக்கீலுக்கும் தெரியும். வரப்போ கூட, அவரு கிட்டேயும் சொல்லிவிட்டுத்தான் வந்தோம்'' என்றான் சின்னவன், ''சத்தம் காட்டாம வெளியே போயிட்டியானா, உனக்கு மரியாதை, இல்லாட்டி...'' என்றபோது, அவன் குரலில் மிரட்டல் தெரிந்தது.

கோபம், அமைதி பற்றி ஞானசகாயம் சொன்னது, இப்போது வேறு விதமாகத் தொனித்தது.

ஆனால், என்ன இது?

கையில் இருந்த செல்போனில் வக்கீலின் எண்ணெய் அழுத்தினான்.

''உன் வீட்டுக்குத்தான், தெருவுக்குள்ளேயே வந்து விட்டேன். உன்னிடம் தனியாகப் பேச வேண்டும்...'' என்றவரை இடைமறித்து ''வீட்டை விட்டு வெளியேறச் சொல்லிக் கொண்டு வந்து நிற்பவர்களைப் பற்றியா?'' என்று கேட்டான் பிரதீபன்.

''அடப்பாவிகளா!'' என்று உளமாற வைதார் வக்கீல்'' ''நான் எல்லா விவரமும் சொல்லித் தயார் பண்ணுகிறேன், அதுவரை பொறுத்திருங்கள் என்றால், அதற்குள் வந்து விட்டான்களா?'' என்றார் ஆத்திரத்துடன்.

சற்றுத் திகைத்துவிட்டு ''அப்படியானால், அவர்கள் சொன்னது நிஜம்தானா?'' என்று மெதுவாகக் கேட்டான் சின்னவன்.

''அது... நான் வீட்டுமுன் வந்து விட்டேன். உள்ளே வந்து சொல்கிறேனே.''

''வா...ருங்கள். அதற்கு முன், அவர்கள் சொன்னது நிஜமா... அவர்களுடைய தங்கை, தங்கை மகன் பற்றி, சொல்லுங்கள் அங்கிள். அது மெய்தானா?'' என்று கேட்டான், மற்றவன்.

தயங்கிப் பயனில்லை என்று உணர்ந்து ''ஆறு ஆண்டுகளாகப் பழக்கம், அப்பா. ஐந்து வயதில் பையன் இருக்கிறான்'' என்று உண்மையைச் சொன்னார் பெரியவர்.

''ஓ!'' என்ற பிரதீபனுக்குச் சற்று நேரம் பேச்சு வரவில்லை.

போன் பேசுவதற்காக விலகி வந்தவன், இப்போது வீட்டு வாயிலுக்கே, வந்திருந்தான்.

காரிலிருந்து இறங்கி வந்த ஞானசகாயத்தை வெறித்து நோக்கியவன், சில வினாடிகளுக்குப் பிறகே, இயல்புக்குத் திரும்பினான் எனலாம்.

வக்கீலாக மட்டுமின்றி, நண்பராகவும் தேவநாதனோடு பழகியவர் அவர்.

பிரதீபனின் முகத்தைப் பார்த்ததும் அவருக்கு உருகி விட்டது.

இரண்டு எட்டில், அவனை அணுகியவர் ''என்னப்பா, திடீரென்று குண்டு போட்ட மாதிரி, இந்த தேவா இப்படிச் செய்து விட்டாரே!'' என்று வருத்தத்துடன், அவனது தோளைத் தட்டிக் கொடுத்தார்.

அவன் பேசாமலே நிற்கவும் ''ஒரு மாதிரியான வயதில், அந்தத் தனிமை அவருக்குத் தாங்கவில்லை. அவரை, ரொம்பத் தவறாக நினைக்காதே, தீபா! மற்ற

யாரையும் விட, நீ அவரைப் புரிந்து கொள்வாய் என்று என்னிடமே சொல்லியிருக்கிறார்!'' என்றார் வக்கீல்.

''ஐந்து வயதில் பிள்ளை!'' என்றான் சின்னவன் கசந்த குரலில், ''அப்போதே, அப்பா திருமணமே பண்ணி யிருக்கலாமே, அங்கிள்? இத்தனை ஆண்டுகளாக இரட்டை வாழ்க்கையும், திடுமென இப்படி ஓர் இடியும்... எல்லாம் தவிர்த்திருக்கலாமே!'' என்றான், வலியை அடக்கி.

செய்திருக்கலாமே என்றுதான் ஞானசகாயத்துக்கும் தோன்றியது. ஆனால், நண்பரை மகன் தவறாக எண்ண விடவும் பிடிக்கவில்லை. எனவே, தனக்குத் தோன்றி யதைச் சொன்னார். ''அவரது மனநிலை என்ன என்று, நமக்கு என்னப்பா, தெரியும். நீங்கள் இருவரும் வளர்ந்த பிள்ளைகள். உங்கள் அம்மாவோடு வாழ்ந்த இந்த வீட் டுக்கு, இன்னொரு பெண்ணைக் கூட்டி வரப் பிடிக் காமல் இருந்திருக்கலாம்.''

''அங்கிள்!'' என்றான் அவன் திகைத்து, ''இப்போதே, இந்த வீடே, அவர்களது என்கிறார்களே! எப்படி விடு வது? உள்ளே வாருங்கள், அங்கிள்'' என்று மடமட வென்று வீட்டினுள் சென்றான்.

பரபரப்பே இல்லாமல், எல்லாம் என்னதுதான் என்று சொல்லாமல் சொல்வது போல, சோபாக்களில் பாதி படுத்தாற்போலச் சாய்ந்திருந்தனர் இருவரும்.

சினம் மிக, ''என்ன இது? சோபாவில் உட்காரும் முறையா, இது? இருவரும் எழுந்திருங்கள்! எழுந்து, வெளியே போங்கள்!'' என்று அதட்டினான் பிரதீபன்.

அவனது பேச்சு காதில் விழுந்த மாதிரியே காட்டிக் கொள்ளாத இருவரும் ஞானசகாயத்தைப் பார்த்ததும், சற்றே அசைந்து கொடுத்தனர்.

''என்ன வக்கீலு, ஒரு வழியா வந்து சேர்ந்தியா? மச்சான் பசங்க கிட்டே சொல்லி, மூட்டையைக் கட்டிக் கிட்டு கிளம்பச் சொல்லு. நல்லாக் கேட்டுக்க. துணிங்க மட்டும்தான். நகை, தொகையைத் தொடப்படாது!'' என்றான் மூத்தவன் முத்தையன்.

''ஆமாம்ப்பா. தங்கச்சியையும், புள்ளையையும் கூட்டிக்கிட்டு, நாங்களும் இன்னைக்கே இங்கே குடி வந்துடலாம்னு இருக்கோம். அதனாலே, சீக்கிரமே ரெண்டு பேரும் கிளம்புங்கப்பா'' என்றான் அடுத்தவன்.

''கிளம்புவதா? ஆட்களைக் கூப்பிட்டு கழுத்தைப் பிடித்து வெளியே விரட்டுமுன், மரியாதையாக நீங்களே போய் விடுவது நல்லது. ம், சீக்கிரம்!'' என்று சீறினான் பிரதீபன்.

சிலிர்த்துக் கொண்டு ''என்னாது? எங்களைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளுவியா? தள்ளுற கையை வெட்டிப் போட்ற மாட்டோம்? எங்களை யார்னு நினைச்சே? இந்த ரத்னவேலு, மூணு தபா செயிலுக்குப் போய்ட்டு வந்தவன், என்கிட்டே மோதுனா, மவனே, உருப்படியா இருக்க மாட்டே!'' என்று மிரட்டியவாறு சின்னவன் எழுந்தான்.

''என்ன செய்வாய்?'' என்று உறுமிய பிரதீபனை, வக்கீல் பின்னுக்கு இழுத்தார். ''கொஞ்சம் பொறுமையாக இரு, பிரதீபா. சொன்னேன் அல்லவா? அவர்கள் கையில்,

அப்பா எழுதிய உயில் இருக்கிறது! அதில் என்ன இருக்கிறது என்று, பொறுமையாகப் படித்துப் பார்த்தால் தான்...''

''அப்படிச் சொல்லு, வக்கீலு!'' என்றான் முத்தையன் உற்சாகத்தோடு, ''இதோ! உயில் காப்பி கொண்டு வந்திருக்கோம். படிச்சுப் பார்த்துவிட்டு, நடையைக் கட்டு!'' என்றான் உரத்த குரலில்.

அதைத் தொடக்கூட மனமற்று பிரதீபன் அசையாது நிற்க, ஞானசகாயம் அந்த ஜெராக்ஸ் காப்பியை எடுத்துப் பார்த்தார்.

அவரது முகம், அவர்களது கூற்றையே ஆமோதிக்க, வந்தவர்கள் கொக்கரித்தார்கள்.

''பார்த்தியா? பார்த்தியா கரெக்டா சொன்னோமா? உங்க அப்பா கையெழுத்தான்னு எங்கே வேணும்னாலும் கொண்டு போய்ப் பார்த்துக்க. அட, அதைவிட மலை போல ஆதாரம் இன்னொண்ணு இருக்குதே! ஏ வக்கீலு, உன் கிட்டே, மச்சான் ஒரு கவரு கொடுக்கலை? மருமகன் கிட்டே, அத்தை, நீ கொடுக்கவே இல்லியா? 'மன்னிச்சுக்கடா மவனேன்னு, எங்க முன்னாலேதானே, எழுதி கவரிலே போட்டாரு! அத்தை வேணுமானாலும் வாங்கிப்பாரு. ஆனால், எது, எப்படின்னாலும் ஒரு மணி நேரத்துக்குள்ள முடிச்சிட்டு, அண்ணனும் தங்கச்சியும் வீட்டை விட்டு வெளியே போயாகணும்! நாங்க போய், தங்கச்சியையும், புள்ளையையும் இட்டாரணும்!'' என்று இருவரும் மாறிமாறிப் பேசி விரட்டினார்கள்.

ஹாலில் இருந்த உள்ளறைக்குச் செல்லும் வழியில், முகமெல்லாம் கண்ணாகி விட்டவளைப் போல நின்று

பார்த்துக் கொண்டிருந்த தங்கையின் மிரண்ட தோற்றம் ஒருபுறம், கூடவே வக்கீல் சொன்ன 'அம்மாவோடு வாழ்ந்த வீடும் சேர்ந்துகொள்ள, இவர்களை இங்கே இருக்க விடக்கூடாது என்று தீர்மானித்து ''யார் என்ன எழுதினாலும், என் அம்மா வாழ்ந்த இந்த வீட்டுக்குள், நான் வேறு யாரையும் விட மாட்டேன்'' என்றான் பிரதீபன் உறுதியான குரலில்.

மறுப்பை அவர்களும் எதிர்பார்த்திருப்பார்கள்தானே?

''அட போய்யா!'' என்றார்கள் அலட்சியமாக. ''உங்க அம்மாளோட இடத்திலேதானே, ஆறு வருசமா, எங்க தங்கச்சி இருந்திருக்கிறா? புள்ளை வேறே! டாக்டருங்க கிட்டே போய், என்னமோ புள்ளைங்கிறதுக்கு மரபு அணு சோதனையாமே, அதுகூட எல்லாம் பண்ணி, புள்ளை தான்னு எழுதி வாங்கி, வச்சிருக்கோமாக்கும்! மச்சானும், சொத்து பத்து எல்லாம், அந்தப் புள்ளைக்குன்னு எழுதிக் கொடுத்திட்டாரு! அதனாலே, எல்லாமே எங்களுக் குத்தான் சொந்தம்! நீ கிளம்பித்தான் ஆகணும். மரி யாதையாப் போயிடு!'' என்று கெடுபிடி செய்தார்கள்.

திரும்பத் திரும்ப, தந்தை எழுதிக் கொடுத்தது பற்றியே அவர்கள் பேசியது பிரதீபனுக்கு வேதனையாக இருந்தது. தனியே நின்று, ஒரு வார்த்தை விடாமல் கேட்டுக் கொண்டிருக்கும் மானசி என்ன வேதனைப் படுவாள்?

என்னப்பா இப்படிச் செய்து விட்டீர்கள்? மகன் புரிந்து கொள்வான் என்று சொல்லி, இவர்கள் முன்னிலையி லேயே எனக்கும் மன்னிப்புக் கேட்டுக் கடிதம் எழுதி... எல்லாம் இவர்கள் முன்னிலையிலேயே வேறு செய்ய

வேண்டுமா? அந்தப் பெண்ணிடம், அப்படியா, சரணா கதி அடைந்திருந்தார்? எப்படி முடியும்?

ஆனால், அடி நுனி எதுவும் புரியாத ஒன்றை யோசித்து நேரம் போக்க, அப்போது அவனுக்கு மனமோ, அவ காசமோ இல்லை! இவர்களது இப்போது விரட்டியாக வேண்டும். இருக்க இருக்க, இந்த வீட்டின் மேல் மோகம் அதிகமாகும்.

''இதோ பார், உன் தங்கை பற்றி, நீ சொன்னது உண் மையாகவே இருக்கலாம். ஆனால், இந்த வீடு, சொத்து எல்லாவற்றிலும் என் அம்மா கொண்டு வந்த பணமும் இருக்கிறது. எதையும் நான் விடுவதாக இல்லை. அத்தோடு, அவர் என் அப்பா! அவர், எந்தக் காரணத்துக் காக என்ன எழுதினாலும், எந்தக் கோர்ட்டும் என் உரி மையை இல்லை என்று சொல்லாது! வக்கீல் சார், இவர்கள் கொண்டு வந்த உயிலை எதிர்த்து நாளைக்கே கோர்ட்டில் ஒரு மனு கொடுத்து விடுங்கள். கூடவே, இந்த வீட்டுக்குள் யாருமே வரக்கூடாது என்று காவல் நிலையத்திலும்...''

''ஏஏஏ... பொறுப்பா! நீ என்ன, கோர்ட், கேசுன்னு கிட்டு?'' என்று பிரதீபனின் பேச்சில் குறுக்கிட்டான் மூத் தவன் முத்தையன். தம்பியை ஒரு தரம் எச்சரிக்கையாகப் பார்த்துவிட்டு ''என்ன இப்ப? இந்த வீடு உனக்கும் வேணும், அதுதானே? ரெண்டு பொண்டாட்டி! போவட் டும்! பெரிய வீடுதானே? கொத்தனாரை இட்டாரேன். நட்ட நடுவிலே, நேரே ஒரு சுவர் எழுப்பிடலாம். லே ரத்னம், நம்ப கந்தசாமியை, நாலு ஆளோட நாளைக்கு வரச் சொல்லு...''

நடுவே சுவர் கட்டி, வீட்டை இரண்டாக்குவதா? என்ன மாதிரி வீட்டை நாசமாக்கப் பார்க்கிறார்கள்!

''யாரும் இங்கே, உள்ளே வரக்கூடாது! மீறி வந்தால், உயிரோடு போக மாட்டான்!'' என்றுரைத்து, இப்போது குறுக்கிட்டான் பிரதீபன்.

''என்னாது? உசிர் எங்க பக்கம் மட்டும்தான் போவுமா?'' என்று துள்ளி எழுந்த ரத்தினவேலை முத்தையன் பிடித்து இழுக்க, ஞானசகாயம், பிரதீபன் கையைப் பற்றி அழுத்தினார்.

''வேண்டாம்ப்பா. அமைதியாக இரு. சுவர் கட்டக் கூடாது என்று சொன்னால், சரிதான் என்று விட்டுவிடப் போகிறார்கள். அவர்களிடமும் உயில் ஒன்று இருப்ப தால், அவர்களுமே, நீதி மன்றத்தை நாடலாம். போலீசில் புகாரா, வழக்கா அல்லது சமராசியா என்று, அவர்களுடைய வக்கீலோடு கலந்து பேசி முடிவெடுக்க, அவர்களுக்கும் அவகாசம் வேண்டுமல்லவா? அதனால் நீ அவசரப்படாதே!'' என்று பிரதீபனைத் தடுப்பது போல, முத்தையன் சகோதரர்களுக்கு மறைமுகமாக ஒரு மிரட்டல் விடுத்தார்.

பிரதீபன் கோர்ட், காவல் நிலையம் என்றதும், தம்பியை முத்தையன் குறிப்பாக நோக்கியதை, அவர் கவனித்திருந்தார். இந்த மாதிரி மனிதர்களோடு உறவாடி இருக்கிறாரே என்று நண்பர் மீது தோன்றிய வருத்தத்தை மறைத்துக்கொண்டு, தரமற்ற அந்த மனிதர்களின் தன்மையை பயன்படுத்திக் கொள்ள முயன்றார்.

அவரது முயற்சிக்கு, அப்போது பலனும் கிடைத்தது.

மூலைக்குச் சென்று, தங்களுக்குள் முணுமுணு வென்று பேசிக்கொண்ட முத்தையன் சகோதரர்கள், திரும்பி வந்து ''ஆமா தம்பி. உங்கள் வக்கீல் சொன்னாப் புல, நாங்களும் எங்க வக்கீல் கிட்டே பேசிட்டு வந்து, என்னா செய்யறதுன்னு சொல்றோம். அது வரைக்கும் வேணா, இங்கே தங்கிக்க. அப்புறமா, இருக்க விடமாட் டோம். ஆனால், எதையும் பெரிசா எடுத்திட்டுப் போகப் பார்க்காதே. அதுக்கு விட மாட்டோம்'' என்று பெரிதாக அனுமதி கொடுப்பது போலக் காட்டி விட்டு, அரை மனதாகக் கிளம்பிச் சென்றார்கள்.

''ஊப்!'' என்று பெரிதாக மூச்சை வெளியே விட்டான் பிரதீபன்.

''இன்னும் ஏம்மா, அங்கேயே நிற்கிறாய்? அவர் கள்தான் போய் விட்டார்களே'' என்று தங்கையை அழைத்தான்.

மெல்ல அருகில் வந்தபோதும், ''அவர்கள் திரும் பவும் வருவோம் என்றார்களே, அண்ணா? அத்தோடு... அத்தோடு...'' என்று மேலே பேச முடியாமல், அண் ணன் முகத்தைப் பார்த்துக் கலங்கினாள் தங்கை.

அவர்களுக்கு பதில் சொல்ல முடியாமல் வாய டைத்து நின்ற அந்த சில வினாடிகளில், பத்து வயது மூப்படைந்தது போல. பிரதீபன் உணர்ந்தான்.

நெடுமூச்சு விட்டபடி ஞானசகாயத்திடம் திரும்பி னான். ''அவர்கள் சொன்னது போல. அது மன்னிப்புக் கடிதம்தானா. அங்கிள்'' என்று கேட்டான்.

''எழுதியிருந்த வாசகம் அப்படித்தான் என்றாலும், நீ புத்திசாலி. எல்லாம் புரிந்து கொள்வாய் என்றும்

சொன்னாரப்பா'' என்றபடி, கைப்பையில் இருந்து, ஒரு சிறு கவரை எடுத்து அவனிடம் கொடுத்தார் ஞான சகாயம்.

ரொம்பவும் சிறு காகித உறைதான். உள்ளே பெரிதாக எதுவும் இருக்கவும் வாய்ப்பில்லை. ஆனாலும் மகன் 'புத்திசாலி'யாகப் புரிந்துகொள்ள, ஏதோ இருக்கத்தானே வேண்டும்?

சற்றே பதறிய விரல்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு, கடித உறையைப் பிரித்துப் படித்தவன், சோர்வுடன் அதைக் கண்ணாடி மேஜை மீது போட்டான். ''என்ன அங்கிள், மன்னிக்க வேண்டுகிறேன் என்று இரண்டே வார்த்தைகள். இதில் புரிந்துகொள்ள, அதிலும் புத்திசாலித்தனமாகப் புரிந்து கொள்ள என்ன இருக்கிறது?'' என்றான் சலிப்புடன்.

காற்றில் பறந்த காகிதத்தை ''ஊகூம் பிரதீப், அப்படி விட்டுவிடாதே. இதில் ஏதோ இருக்கிறது. இருந்துதான் தீரவேண்டும். ஏனென்றால், இருவரில் ஒருவர் பக்கத்திலேயே இருந்தார்களா? திரும்புகிற மாதிரி. தண்ணீர் ஜக்கைத் தட்டிவிட்டு, அவன் அதைப் போய் எடுக்கிற

நேரத்தில், என் கையைப் பிடித்து ''தீபு, மனுவை நான் சும்மா விட்டுவிட மாட்டேன். தீபனும் கெட்டிக்காரன். எதையும் லேசில் விட மாட்டான்'' என்று ரகசியமாகச் சொன்னாரே! தேவா கெட்டவர் அல்ல. முட்டாளும் கிடையாது. ஒருவேளை இந்தக் காகிதத்தில் ஏதேனும் இருக்குமா? லிட்மஸ் பேப்பர் மாதிரி எதிலாவது முக்கி, ஊற வைத்துப் பார்த்தால்...'' என்று அவர் கூற, மக்கள் இருவரும் மறுபடியும் பரபரப்புற்றனர்.

முன்பு ரசாயன வகுப்பில் படித்ததை அவசர அவசர மாக நினைவு படுத்திப் பார்த்து ஏதேதோ முயன்று விட்டு, ஒன்றும் பலனின்றி, மறுபடியும் சோர்ந்தனர்.

''எப்படி, என்ன என்று எதுவுமே புரியவில்லையே, அங்கிள்! இதை வைத்துக் கொண்டு என்ன செய்வது? அண்ணா, எனக்குப் பயமாக இருக்கிறதே! எல்லாவற் றையும், அவர்கள் எடுத்துக் கொள்வார்களா?'' என்று கண்ணீர் உகுத்தாள் மானசி.

''மனு ப்ளீஸ், அழாதே போகும் வழி, மிகவும் கடின மானதாகவே இருக்கலாம். ஆனால், அப்படி எல்லா வற்றையும் யாராலும் எடுத்துக் கொள்ள முடியாது. அதற்கு, நான் விட மாட்டேன். தைரியமாக இரு'' என்று அவளைத் தேற்றினான்.

தந்தை எழுதிய இரண்டு வார்த்தைகளில், அவர் களுக்குப் பயன்படக்கூடிய விதமாக எதுவும் இல்லா திருக்கலாம். ஆனால், அதை ஞானசகாயத்திடம் அவர் கொடுத்த விதம், தீபன் புத்திசாலி, எதையும் விட்டுவிட மாட்டான் என்று அவர் சொன்னது, பிரதீபனை நிமிர வைத்தது.

பணக்காரப் பையனாக, இதுவரை அவன் உல்லாச மாகச் சுற்றியலைந்தது உண்மையே. ஆனால், இன்று அந்தப் பருவம் முடிந்துவிட்டது.

நண்பர்களோடு சுற்றித் திரிந்த காலத்திலுமே, அவன் முட்டாளாக இருந்தது இல்லை. இன்று, தந்தை சொன் னது போலப் புத்திசாலியாகச் செயல்பட வேண்டும். செயல்பட்டு, எதையும் விட்டுவிடாமல், காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

அது, முடியாததும் அல்ல!

எல்லாவற்றிலும் தாய் வழிச் சொத்தும் சேர்ந் திருப்பதால்... என்று எண்ணிடும் போதே, தாயின் இடத்தில் ஆறு ஆண்டுகளாக ஒருத்தி இருந்திருக்கிறாள் என்பதும், அவனது யோசனையில் குறுக்கிட்டது.

ஆனால், இப்படிச் சொத்து முழுவதையும் எழுதி வாங்கியிருப்பவள், அறியாதவளாக இருக்க முடியாது! எனவே, அவளது நிலைமை பற்றி யோசிக்க வேண்டிய அவசியமும் கிடையாது!

நான் நினைத்ததைச் செயல்படுத்தும் விதம் பற்றி, ஞானசகாயத்திடம் கேட்டான்.

''அங்கிள், அந்த ஆட்கள், இந்த வீட்டுக்குள் வரு வதை என்னால் சகிக்க முடியவில்லை, அங்கிள். சொத்து, தொழில் எல்லாம் அப்பாவின் சம்பாத்தியமாக இருந்தாலும், இதில் அம்மா பணம் இருக்கிறது. தாத்தா சொத்தும் கலந்திருக்கிறது. இதை முழுதாக எழுதிக் கொடுப்பதற்கு, அப்பாவுக்கே உரிமை கிடையாது தானே? அந்தக் கோணத்தில், நீதிமன்றத்தில், 'ரிட்'

போட்டு வைத்தால், அவர்களால் உள்ளே நுழைய முடியாதுதானே?'' என்று கேட்டான்.

அவனை ஒருதரம் பார்த்துவிட்டு, ''அவர்களைப் போலவே, உன்னாலும் உள்ளே நுழைய முடியாது, பிரதீப். வழக்கு எத்தனை காலம் நடக்குமோ? அத்தோடு, நீதிமன்றத் தீர்ப்பு இப்படித்தான் இருக்கும் என்று சொல்லவும் முடியாது. அந்தப் பிள்ளை உன் அப்பாவுடையது என்பதற்கு டி.என்.ஏ. சான்று இருக்கிறது. சிறுவன் என்கிற சென்டிமென்ட் வேறு! தேவா எழுதியும் வைத்திருக்கிறார். அதனால் வழக்கு, அவர்கள் பக்கமாகவும் முடியலாம்!'' என்று அவர் நிலைமையை எடுத்துச் சொல்ல, ''அங்கிள்!'' என்று இருவரும் அதிர்ந்தனர்.

''ஆமாம்ப்பா. இதுதான் யதார்த்தம். உன் உரிமை அவனுக்கும் உண்டு என்பது, உண்மை. ஆனால், சிறைக்குப் போய் வந்த ரத்தினவேல் காரணமாகவோ, என்னவோ, அவர்கள் கோர்ட்டை விரும்புவதாகத் தெரியவில்லை. அதை வைத்துக் கொண்டு, கோர்ட்டுக்குப் போகாமலே, நமக்குள் ஓர் ஒப்பந்தத்துக்கு ஏற்பாடு செய்யலாம். ஆனால் முழுச் சொத்துக்கும் அடி போட்டிருப்பவர்கள், எந்த அளவுக்கு ஒத்து வருவார்கள் என்று தெரியவில்லை. எப்படியும், நீ இங்கே இருந்தால், உள்ளே வராமல் அவர்களைத் தடுப்பது கடினம். முடியாது என்றே சொல்லலாம். அதனாலே, இந்த யோசனையைச் சற்று சிந்தித்துச் செயல்படுத்த வேண்டும்'' என்றார் வக்கீல்.

''என்னத்தைச் சிந்திப்பது, அங்கிள்? இது, அம்மா வாழ்ந்த இடம். இது பூட்டிக் கிடந்தாலும் பரவாயில்லை.

அந்த ஆட்கள் உள்ளே காலடி வைக்கக்கூடாது!'' என்றான் பிரதீபன் ''என்னம்மா, சரிதானே?'' என்று தங்கையைப் பார்த்துக் கேட்டான்.

''ஆமாம் அண்ணா, அந்த ஆட்கள், உள்ளே இருந்ததை நினைக்கும்போதே, வாந்தி வருகிறது! அவர்களோடு ஒன்றாக இந்த வீட்டில் இருப்பதை விட, நாமுமே கூட இங்கிருந்து, வெளியே போய்விடலாம்'' என்றாள் மானசி.

''ஓ! அவ்வளவு தீவிரமா? ஆனால் வெளியே போய் வாழ்வது அவ்வளவு சாதாரணமில்லை, மானசி. இங்கிருந்து வெளியே போய், இதே போல இன்னொரு வீட்டில் வசிப்பது, இன்றைய நிலையில் முடியாது. செலவுக்குப் பணம் வேண்டும். அது எப்படி என்று பார்க்க வேண்டும். நீ என்ன தொகை எடுத்தாலும், அதை அவர்கள் எதிர்க்கலாம். அல்லது, அவர்களும், அதே அளவு பணம் கேட்கலாம். கேட்டால், மறுக்க முடியாது. இன்னும் என்னென்ன சொல்வார்கள், கேட்பார்கள் என்று எதுவுமே நாமாகச் சொல்வதற்கில்லை!'' என்றார் ஞானசகாயம்.

''என்ன ஆனாலும் பரவாயில்லை. இந்த வீட்டுக்குள் அவர்கள் வரக்கூடாது!'' என்றான் பிரதீபன். ''என்னம்மா?'' என்று அவன் கேட்கவும் மானசியும் சம்மதமாகத் தலையாட்டினாள்.

வக்கீலின் பார்வையில் இரக்கம் தெரிந்தது.

''என்ன அங்கிள்?''

''கஷ்டப்பட நேரும்ப்பா. நீங்கள் வசதிக்குப் பழகியவர்கள்... வேண்டுமானால், தொழில், மற்ற சொத்துக்களை விற்றுப் பணத்தை...''

''நோ! கூடாது!'' என்றான் பிரதீபன், ''அங்கிள், இந்த 'தீபன் இன்டஸ்ட்ரீசை' அப்பா எப்படி வார்த்தார், பராமரித்தார் என்று எனக்குத் தெரியும். இந்த வீடும் அவருக்கு அப்படித்தான். என்ன காரணத்தினால், அவர் யாருக்குக் கொடுத்தாலும், என்னால் இந்த இரண்டை யும் விட முடியாது அங்கிள். தொழிலை நான் நடத்து வேன். வீட்டையும் மீட்பேன். இதற்காக எவ்வளவு கஷ் டப்படவும், நான் தயார்'' என்றான் அவன்.

''நானும்தான்'' என்றாள் தங்கை.

கஷ்டத்தை அனுபவிக்கும்போதுதான், அது எப்படி இருக்கும் என்று புரியும். ஆனால், இப்போது வேறு வழியும் இல்லையே என்று உள்ளூர வருந்தினார் ஞான சகாயம்.

கூடவே ''இன்னொரு விஷயம், தீபா. வீட்டைப் பூட்டிப் போட்டு விடலாம். சரி! ஆனால், தொழிலை நடத்தப் போகிறேன் என்றாயே, சம உரிமையோடு, அங்கே, அவர்களும் வருவார்களே! அதற்கு என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டார்.

''அங்கிள், வீடு அம்மாவோடு நாங்கள் குடும்பமாக வாழ்ந்த இடம், கோயில் மாதிரி. இங்கே கண்டவர்களும் வந்து, இதன் புனிதத்தைக் கெடுக்கக்கூடாது. ஆனால் தொழிற்சாலை அப்படியல்ல. வேலை செய்கிற இடம். எத்தனையோ பேர் வந்து போகிற இடம். ஏன் இந்த முத் தையனைக் கூடத்தான், தொழிற்சாலையில் பார்த்திருக் கிறேன், மற்றவர்களோடு, அவர்களும் வந்து விட்டுப் போகட்டும்.

''அது மட்டுமல்ல, அங்கிள். அப்பா இப்படி எழுதிக் கொடுக்கக் கூடியவர் அல்ல. நீங்கள் சொன்ன மாதிரி தனிமை தாக்கியதில் அப்பா இன்னொரு துணையைத் தேடியிருந்தாலும், மானசியிடமும், என்னிடமும் அவருக்கு உயிர். அதில் மாற்றத்துக்கு இடமே கிடையாது. நிச்சயமாக. எனவே இந்த உயில் விஷயத்தில், இன்னும் என்னவோ இருக்கிறது. அதையும் தெரிந்து கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் தோண்டிப் பார்க்கப் போகிறேன். எல்லாம் செய்தே ஆக வேண்டும், அங்கிள்.

''அப்படியின்றிச் சும்மா இருந்தாலும், வெளியே போ என்றுதானே, சொல்கிறார்கள்? நான் போராடப் போகிறேன்! எல்லாவற்றையும் எதிர்த்து, இருவருமே, மூச்சைப் பிடித்துக் கொண்டு போராடப் போகிறோம்! எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும்!'' என்றான் பிரதீபன்.

''ஆமாம் அங்கிள்!'' என்று அண்ணனைச் சார்ந்து நின்றாள் மானசி.

உறுதியும் பிடிவாதமுமான இரண்டு இளம் முகங்களையும் பார்க்க, ஞானசகாயத்துக்குப் பரிதாபமாக இருந்தது. ஆனால், இது வளர்ச்சி காலத்து வலி. எவ்வளவு அனுபவித்தாலும், அதற்கேற்ற அறிவு முதிர்ச்சி கிடைக்கும். அத்தோடு, இது போன்ற வலிகளை, இப்போதே அனுபவித்து முடித்து விடுவது நல்லது. ஐம்பது, அறுபதுக்கு மேல் நேர்ந்தால், தாங்க முடியாது!

திடீர் அதிர்ச்சியாக இருக்கக்கூடாது என்று கருதி, என்னென்ன மாதிரி சுகங்களை இழக்க நேரும், என்னென்ன சிரமங்களை ஏற்க நேரும் என்று, இருவருக்கும் ஓரளவு எடுத்துச் சொன்னார்.

பிரதீபன் கல்லாய் அமர்ந்திருக்க, மானசியின் மிரண்ட கண்கள், அண்ணனைப் பார்த்து திடமடைந்தன.

அடுத்த நாள், அவர்கள் தரப்பில் ஒரு வக்கீலுடன் வந்த சகோதரர்களை, ஞானசகாயத்தின் அலுவலகத்திற்கு வர வைத்துப் பேசினார்கள்.

பிரதீபன் உயிலை எதிர்த்துப் போராடுவதாக இருக்கிறான் என்றதும், இருவரும் ஒருவாறு இறங்கி வந்தனர்.

இப்போதைக்கு வீட்டை யாருக்கும் கொடுக்க முடியாது என்பதால், அதைப் பூட்டி வைக்க ஒத்துக் கொண்டனர். தொழில், ஏனைய சில சொத்துக்களுக்கு மதிப்பீடு செய்து, அதன் பின் தங்களுக்குள் எப்படிப் பிரிப்பது என்று முடிவு செய்யலாம் என்றும் ஒப்புக் கொண்டனர்.

பிரதீபனுக்கு லேசாக உறுத்தியது.

சொத்தைப் பிரிப்பது பற்றிப் பேசுகையில், 'நமக்குள் எப்படி பிரிப்பது' என்று அவர்கள் பேசிய விதம், பிரதீபனை உறுத்தியது.

சிறுவனான அந்தப் பையன், அவனுக்கல்லவா, பிரிக்கப்படும் சொத்து பத்துக்கள் அனைத்தும் போய்ச் சேர வேண்டும்? அவனைப் பற்றிப் பேசவே காணோமே!

அல்லது சேர்ந்தே வாழ்வதால், சின்னப் பையனைப் பற்றித் தனிமையாகப் பேசத் தோன்றவில்லையோ?

எதுவானாலும், அவர்கள் பாடு, அவனுக்கும் அதற்கும் ஒன்றுமில்லை. அவனுக்கு இருக்கும் பிரச்சினை

களே, பூதம் பூதமாய் நிறைய இருக்கையில், இன்னொன்றையும் இழுத்துப் போட்டுக் கொண்டு கஷ்டப்படத் தேவை இல்லை!

பிரதீபனுக்குக் கஷ்டங்கள் நிறையத்தான் இருந்தன.

தனி வீடு, அதிலும் பெரிய பங்களா. அதிலிருந்த பல்வேறு வசதிகள்! அனைத்தையும் விட்டுவிட்டு, ஒரு சிறு இரட்டைப் படுக்கையறை ப்ளாட்டில் குடியேறுவது, சாதாரண விஷயமில்லை.

மற்ற வேலையாட்களைப் பணம் கொடுத்து அனுப்பி விட்டு, தோட்டக்காரனுக்கு மட்டும் தனியே ஊதியம் கொடுத்து, தொடர்ந்து தோட்டத்தைப் பராமரிக்குமாறு ஏற்பாடு செய்தார்கள்.

அப்போது பிரதீபனுக்கு இன்னொரு சிறு அதிர்ச்சி நேர்ந்தது.

''பூட்டிக் கிடக்கிற வீட்டுக்கு ஒரு தோட்டம், அவனுக்கு ஒரு சம்பளமா?'' என்று ரத்தினவேல் ஆட்சேபிக்க, அந்த ஊதியத்தை, பிரதீபன், தன் சொந்த வருமானத்திலிருந்து கொடுக்க வேண்டியதாயிற்று.

நல்லவேளையாக, அவன் எம்பிஏ முடித்ததில் இருந்து, தொழிற்சாலையின் நிர்வாகத் துறையில், அவனுக்கு ஒரு வேலை கொடுத்து, ஊதியமும் பெற, தேவநாதனை ஏற்பாடு செய்திருந்தார். அவனது கைச் செலவுக்கு, அது தாராளமான தொகைதான். அதையே, இப்போது எல்லாச் செலவுகளுக்கும் பயன்படுத்த முடிந்தது.

அப்போதும், வாடகை வீட்டுக்கு முன்பணம் கொடுப்பதற்காகப் பொதுக் கணக்கில் இருந்து அவன் எடுக்க

நேர்ந்த அதே தொகையை, முத்தையன் சகோதரர் களுக்கும் கொடுக்க வேண்டி வந்தது.

இது, அந்தச் சகோதரர்களின் தலையீடு எந்த அளவுக்கு இருக்கும் என்பதை, அவனுக்குப் புரிய வைத்தது.

பொய் உயில் என்று சொல்லி விரட்ட வழியில் லாமல், தந்தையே எழுதிக் கொடுத்ததோடு, அவனிடம் மன்னிப்பையும் வேண்டியிருந்தார். அதற்கும் மேலாக 'மகன் புத்திசாலி, புரிந்து கொள்வான், எதையும் விட்டு விட மாட்டான்' என்று விடுகதைக்கு மேல் விடுகதை யாகப் புதிர்ப்பேச்சு வேறு!

இவை அனைத்துக்கும், அவனுக்குக் கிடைத்த ஒரே விடை, உயிலை அப்படியே ஒத்துக் கொண்டு விடா மல், எதிர்த்து நின்று, எழுத்து மூலம் தந்தை கொடுத் ததை, முடிந்தவரை மீட்பது, தொழிலை அழிய விடாமல் நடத்தி, மேலே கொண்டு வருவது.

அப்படியும் வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள் ளலாம்தானே? உயர்த்தி, தங்கைக்கு ஒரு நல்ல வாழ்வை அமைத்துக் கொடுப்பது! இதையே கூட, தன் சொற்கள் மூலம் தேவநாதன் குறிப்பாக உணர்த்தியிருக்கலாம்! அதற்கான கல்வியும், பயிற்சியும் அவர் அளித்திருந் தார்தானே?

ஆனாலும்... என்று எழுந்த விடை காண முடியாத உறுத்தலை ஒதுக்கித் தள்ளிவிட்டு, பிரதீபன் தன் வேலையை முழு முனைப்புடன் செய்யலானான்.

புது வீட்டில், குடி புகுந்து முடிக்குமுன், அண்ணன் தங்கை இருவருமே, பெரிய அளவில் மனதாலும், அது

தாக்க, உடலாலும் பெரிதும் களைத்துப் போயினர். அதை, அடுத்தவருக்குக் காட்டாமல், சமாளிப்பதில் இன்னமும்!

வீடு என்பதற்குக் குறைந்த பட்சமாகத் தேவைப்பட்ட பொருட்கள் வாங்குவதிலும், அந்த வீட்டில் அடுக்குவதிலும் ஞானசகாயமும் அவருடைய மனைவியும், முழு உதவி செய்தார்கள்.

பொருட்களை வீட்டினுள் எடுத்துப் போவதும், வருவதுமாக இருந்தபோது, எதிரில் இருந்த ப்ளாட்டின் கிரில் கதவுக்கு அந்தப் பக்கம், சாய்வு நாற்காலியில் ஒரு பாட்டி இருந்து பார்ப்பது, அவ்வப்போது கண்ணில் பட்டது.

சரியாக வாயிலுக்கு நேரே அமர்ந்து, பார்த்து, அதைக் கொண்டு ஊர் வம்பு பேசுகிறவளோ என்று, பிரதீபனுக்கு ஒரு தரம் தோன்றியது. ஆனால், உடனேயே வேலை மும்முரத்தில், பாட்டியம்மாவைப் பற்றி, அடியோடு மறந்து போனான் அவன்.

வீட்டுக்கு வந்து பால் காய்ச்சிக் கொடுத்ததோடு, ஒரு சாதம், சாம்பார், பீன்ஸ் பொரியல் செய்யவும், இரவு வரைக் கெட்டுப் போகாமல் வைத்துக் கொள்ளவும், அன்றே மானசிக்குக் கற்றுக் கொடுத்தாள். வக்கீலுடைய மனைவி. சும்மா அல்ல. மறதி, சந்தேகம், இரண்டுக்கும் இடமின்றி, செய்முறையை ஒரு நோட்டுப் புத்தகத்தில், மானசி எழுதும்படியும் செய்துவிட்டே போனாள்.

''திரும்பத் திரும்பக் கேட்டுத் தொல்லை செய்வேனோ என்று எண்ணினார்களோ என்று அவமானமாக

இருந்ததுண்ணா'' என்று தமையனிடம் தன் எண்ணத்தை, மானசி பகிர்ந்து கொண்டாள்.

''அப்படி நினைக்காதேம்மா!'' என்றான் அண்ணன் ''அங்கிளுடைய மகள் பிரசவத்துக்கு வந்திருக்கிறாள். அவளை வீட்டிலேயே வேலைக்காரியோடு விட்டு விட்டு, நாள் முழுவதும், நமக்காக இங்கேயே இருந்திருக்கிறார்கள். மீண்டும் மீண்டும் மகளைத் தனியே விட்டு வருவது கூடாதுதானே? நாம் சமாளித்துக் கொள்வோம், மனு. என்ன, நமக்காகத்தானே, சமையல்? கொஞ்சம் முன்னேப் பின்னே இருந்தால்தான் என்ன? சமாளித்துச் சாப்பிட மாட்டோமா, என்ன?'' என்றான் பெரியவன்.

இந்த அண்ணன், சுவைக்காக எப்படிப் பார்ப்பான் என்று அறியாதவளல்ல, மானசி.

யாரையும் திட்ட மாட்டான். ஆனால் ''ஊகூம், என்னவோ சரியில்லை, பொன்னம்மா. நான் வெளியே பார்த்துக் கொள்கிறேன்'' என்று எழுந்து விடுவான், அவன். சமாளித்துக் கொள்ள மாட்டோமா என்கிறானே!

பிரதீபனும், அதையே நினைத்தானோ? தங்கைக்குக் கண்ணோரம் கரிக்கத் தொடங்கும்போதே, ''அன்றன்றைக்கு வாழவும் கற்றுக் கொள்ள வேண்டும், மனும்மா. நேற்று நடந்தது, சரித்திரம். நாளைய விஷயம், கற்பனை. இன்றைக்குத்தான் நம் கையில் இருப்பது. இதை, இயன்ற வரையில் நல்லபடியாக நடத்துவோம், வீணாக, எதை எதையோ நினைத்துக் கலங்க வேண்டாம். என்ன?'' என்று அவன் கேட்க, பெருமளவு சமனப்பட்டுவிட்ட மனதோடு, தங்கை தலையாட்டினாள்.

மறுநாளில் இருந்து, மானசி கல்லூரிக்கும், பிரதீபன் தொழிற்சாலைக்கும் செல்வதாக இருந்தனர்.

காலையிலேயே எழுந்து உணவு தயாரிப்பதை மானசி பார்க்க, பிரதீபன் வீட்டைச் சுத்தம் செய்யத் தொடங்கினான்.

தங்கையின் விழிகள் அகலத் தொடங்கவும், தலையசைத்து ''நானும் இதுபோல, உன்னைப் பார்க்கவா? நம் வீடு, நம் வேலைம்மா. இன்னும் ஒரு மணி நேரத்துக்குள் நாம் கிளம்பியாக வேண்டும். இப்போது அதுதான் முக்கியம்'' என்று சிறு முறுவலோடு கைக் கடிகாரத்தைக் காட்டினான் அண்ணன்.

பதிலாக மலர்ந்த புன்னகையோடு, அடுப்புப் பக்கம் திரும்பினாள் அவன் தங்கை.

இருவருமாக வேலைகளை முடித்துக் கொண்டு கிளம்பினர்.

அவ்வப்போது நண்பர்களோடு சுற்றும் பிரதீபனைப் போலன்றி, மானசி மாநகரப் பேருந்துகளில் பயணம் செய்தது இல்லை என்பதால், அன்று தமையனே தங்கையைக் கல்லூரிக்குக் கூட்டிப் போய் விடுவதாக ஏற்பாடு.

திரும்பி வரும்போது, அவளே எதிர்ப்புறம் பஸ் நிறுத்தத்தில் ஏறி, வீட்டுப் பக்க நிறுத்தத்தில் இறங்கிக் கொள்ள வேண்டும். ஏனெனில், அம்பத்தூரில் இருந்து, அவளை வீட்டுக்குக் கூட்டிப் போய் விடுவதற்காக, பிரதீபன் வந்து போக முடியாது.

சாதாரணமாகவே 'பை' சொல்லிவிட்டு மானசி கல்லூரிக்குள் சென்றபோதும், எப்படி வீடு திரும்பப்

போகிறாளோ என்று, தமையனுக்குத் தவிப்பாகத்தான் இருந்தது. ஆனால், மதியம் கல்லூரி நேரம் முடிந்து அரை மணி நேரத்திலேயே, வீடு வந்து சேர்ந்து விட்டதாக, மானசி செல்போனில் சொன்னாள்.

காலையில் அவர்கள் பஸ் ஏறும்போது, அங்கேயே கூட பஸ்சில் ஏறிய இன்னொரு பெண்ணும் அதே பஸ் நிறுத்தத்துக்கு வரவே. அவளோடு சேர்ந்து இலகுவாகத் திரும்பி வந்து விட்டதாக மானசி தெரிவிக்க, பிரதீபனின் நெஞ்சின் மீது அமர்ந்திருந்த பாறாங்கல், மாயமாக மறைந்து போனது!

இனி, அவன் வேறு கவலை இல்லாமல், முழுக் கவனத்தோடு அலுவலைப் பார்க்கலாம். பார்க்கவும் வேண்டியிருந்தது.

ஏனெனில், பிரதீபன் தொழிற்சாலையை அடைந்து, அவனது அலுவல் அறைக்குள் சென்ற நேரத்திலேயே, தொழிற்சாலை ஃபோர்மேன், அவனை வந்து சந்தித்தார்.

வயதில் மூத்தவர், தொழில் தெரிந்தவர். எந்த ஒரு வேலையையும் அவரை நம்பிக் கொடுக்கலாம் என்று தேவநாதன் சொல்லி, பிரதீபன் கேட்டிருக்கிறான்.

''தப்பாக நினைக்கக் கூடாது தம்பி. ஆனால், ஆளாளுக்கு என்னென்னமோ பேசுகிறாங்க. எல்லாத்தையும் யாருக்கோ கொடுத்து விட்டதாகச் சொல்கிறாங்க. நாங்கள் நிறைய... கிட்டத்தட்ட முக்கால்வாசிப்பேர். இந்தக் கம்பெனியைத் தொடங்கின காலத்திலே இருந்து, அப்பாவோடு கூடவே இருக்கிறவங்க, தம்பி. என்ன

ஆகுமோ என்று, வயிறு கலங்கிப் போயிருந்தோம். இன்றைக்கு உங்களைப் பார்த்த பிறகுதான் மனது கொஞ்சம் நிம்மதியாச்சுது. தொழிலைத் தொடர்ந்து நடத்துவீர்கள்தானே தம்பி?'' என்று கவலையோடு கேட்டார்.

''கட்டாயம் குமரேசு!'' என்று அவருக்கு உறுதி சொன்னான் பிரதீபன். ''அதற்காகத்தானே, வந்திருக் கிறேன். அத்தோடு உங்கள் உதவியையெல்லாம் நம் பியும்தான் வந்திருக்கிறேன்'' என்று அவன் தொடர்ந்து கூறவும், ஃபோர்மேனுக்கு ஆறுதலாகி விட்டது.

''கட்டாயம் தம்பி. எங்களை, நீங்கள் நூத்துக்கு நூறு நம்பலாம்'' என்று விட்டு உற்சாகமாக தொழில் கூடத் துக்குப் போனார்.

அதேபோல, ஒவ்வொரு துறையிலிருந்தும், ஒரொரு வர் வந்து, அவனிடம் ஒரு சில வார்த்தைகள் பேசி விட்டுப் போனார்கள்.

ஒவ்வொருவர் பேச்சிலும், தொழிற்சாலை தொடர்ந்து இயங்க வேண்டுமே என்ற ஆதங்கமே ஒவ்வொரு விதமாக வெளிப்படுவதை உணர்ந்த பிரதீபனுக்கு நிம் மதியாக இருந்தது. கூடவே ஆறுதலாகவும்.

தந்தையின் வேலையைத் தொடர்வது, அவனுக்குக் கடினமில்லை. ஆனால், அவனது தலைமையை ஏற்க விரும்பாதவர்களிடம் வேலை வாங்குவது கடினம். அந்தப் பிரச்சினை, இனி இல்லை!

ஆனால் கழுகுக்கு மூக்கில் வேர்த்த மாதிரி, அவனை மோப்பம் பிடித்தவாறே, இரண்டே நாட்களில், முத்

தையன் சகோதரர்களும், தொழிற்சாலைக்கு வந்து சேர்ந்தார்கள்.

''அல்லாம் எங்களுக்குன்னு, அப்பாரு எழுதியிருக் கிறாரு. ஆனாலும், மூத்த பொண்டாட்டி பெத்த புள்ளை யாச்சேன்னு ஏதோ ஒரு பங்கு பிரிச்சுக் கொடுக்கலாம்னு பார்த்தா, எங்களுக்குச் சொல்லாம, நீ இங்க வந்து உட்கார்ந்துக்கிட்டியே! எங்களுக்கும் ரைட் இருக்குது. நாங்களும் இங்கே இருப்போம்! உன் வருமானம் எங்களுக்கும் வேணும்!'' என்று, குரல் உயர்த்திக் கத்தி னார்கள்.

ஒரு வழியாக அமைதியாகித் தொழிற்சாலையில் வேலை நடந்து கொண்டிருந்தது. இதைக் கெடுத்து விடக்கூடாது என்று கருதிய பிரதீபன், அவர்களை உட்கார வைத்துவிட்டு, ஞானசகாயத்துக்கு போன் செய்தான்.

''இப்போது அந்த உயிலை வைத்துக்கொண்டு, அவர்கள் கோர்ட்டுக்குப் போனால், எல்லாம் கெட்டுப் போகும், பிரதீப். அதனால், உன்னை மீறிப் போய்விடாத அளவில், அவர்களுக்கும் ஏதாவது செய்து கொடுத்து விடு. ஏதோ .விதமாக அவர்களை வெளியேற்ற முடிகிற வரையில், ஒத்துப் போய்விடுவது நல்லதும்மா'' என்றார் வக்கீல்.

எனவே, தனக்குப் போலவே, முத்தையனுக்கும், தனி கேபின், அட்டென்டர், வசதிகளுக்குப் பிரதீபன் ஏற்பாடு செய்தான்.

''நாளையிலே இருந்து, வரவு செலவுக் கணக்கை யெல்லாம் நாங்களும் பார்க்கணும். எங்களைக் கேட்காம,

ஒரு பைசா செலவு பண்ணக்கூடாது'' என்றான் ஒருவன்.

தொழிற்சாலையின் கணக்கு பற்றி இவனுக்கு என்ன தெரியும் என்று பிரதீபன் நினைக்கும்போதே, ''இந்தக் கணக்கெல்லாம், இவனுங்களுக்கு எப்படித் தெரியுமின்னு, நினைக்கிறியா? கணக்குப் படிச்சவனை இட்டாருவோம். அவனுக்கும் சேர்த்து, எங்க ரூமிலே சேர் போடச் சொல்லு. இதே போலச் சுத்துகிற சேர்!'' என்றான் ரத்னவேல்.

என்ன புதுத் தலைவலி. இதைத் தினம் தினம் எப்படிச் சமாளிப்பது என்று யோசித்தவாறே, பிரதீபன் வீடு திரும்பினால், ''ஒரு நிமிஷம்! உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்!'' என்று, எதிர்வீட்டுப் பெண்மணி, அவனை நிறுத்தினாள்.

இங்கேயும் பிரச்சினையா என்று, கவலையும் பயமுமாக அவளைப் பார்த்தான், பிரதீபன்.

பிரதீபனின் முகபாவம் என்ன தெரிவித்ததோ?

எதிர் வீட்டுப் பெண்மணி லேசாக முறுவலித்து, ''ஐயோ, ரொம்பப் பயப்படும்படி ஒன்றும் இல்லைங்க,

தம்பி. எல்லா வீட்டுச் சின்னதுகளும் செய்வதுதான். எங்கள் வினு கூட இதே போலத்தான். எதிலும் கவனமே முழுசாக இராது!'' என்று அவனைத் தேற்றுவது போலப் பேசினாள்.

அப்படியா மனதை முகத்தில் காட்டுகிறோம் என்று தன்னையே கட்டாயப்படுத்தி ''மானசி என்ன செய்தாள் ஆன்ட்டி?'' என்று வினவினான், அவன்.

''அதுதான் சொன்னேனே, வெறும் கவனக்குறைவு. கதவைப் பூட்டிக்கொண்டு உள்ளே போவது எல்லாம் சரிதான். ஆனால், யார் வந்து அழைப்பு மணியை அழுத்தி னாலும், சட்டென்று கதவைத் திறந்து விடுகிறாள். கிரில் கதவைப் பூட்டுவதும் இல்லை. கொஞ்சம் கவனத்தோடு இருக்கச் சொல்லுங்கள், தம்பி பாட்டி சொல்லச் சொன் னார்கள்'' என்று முடித்தாள் எதிர்வீட்டுப் பெண்மணி.

பாட்டி? வாயிலுக்கு நேரேயே சாய்வு நாற்காலியில் அமர்ந்திருப்பாளே!

எட்டிப் பார்த்தால், அப்போதும், அதே போலத்தான் உட்கார்ந்திருந்தாள்.

மருமகள் சொன்னது காதில் விழுந்தது போல லேசாக முறுவலித்து ''காலம் கெட்டுக் கிடக்கிறதுப்பா. வீடு புகுந்து கொலை, கொள்ளை என்று தினந்தினமும் பத்திரிகையில் படிக்கிறோமா, அதனால்தான், காதிலே ஒரு வார்த்தை போட்டு வை என்று, அன்னம்... அன்ன பூரணி கிட்டே சொன்னேன்!'' என்றாள், தன் முதிய குரலில் மெதுவாக.

அன்னபூரணி மருமகள் என்று புரிந்தது.

அதை விடவும், யார் வீட்டில் என்ன நடக்கிறது என்று, ஊர் வம்பு பேசுவதற்காக வாயிலுக்கு நேரே,

அந்த இடத்தில் உட்கார்ந்து இருக்கிறாள் என்று முதல் நாள் எண்ணியது, அவனைச் சுட்டது!

''ரொம்பவும் பெரிய மனது பாட்டி, உங்களுக்கு. உங்களுக்கும்தான், ஆன்ட்டி, முன்னேப் பின்னே அறியாதவர்கள். எப்படிப் போனால் என்ன என்று இராமல், கவனமாக இருக்கும்படி கூப்பிட்டுச் சொல்லுகிறீர்களே. நான், மானசி... என் தங்கையிடம் சொல்லுகிறேன். ரொம்பத் தாங்க்ஸ், பாட்டி, தாங்க்ஸ், ஆன்ட்டி!'' என்று திரும்பிச் சென்று, வீட்டுக் கதவைத் தட்டினான்.

''யார்?'' என்று மானசியின் குரல் கேள்வி கேட்கவும், அவன் அடைந்த சிறு அமைதி, பதிலுக்காகக் காத்திராமலே தங்கை கதவைத் திறக்க, உடனே கலைந்தது.

லேசாகத் தலை திருப்பி, ஓரக் கண்ணால் எதிர் வீட்டைப் பார்க்கையில், கிரில் கதவைப் பூட்டிக் கொண்டு, திருமதி அன்னபூரணி உள்ளே செல்வது, தெரிந்தது.

அங்கேயே நின்று 'சொன்னேனே பார்த்தாயா' என்று விஷயத்தைப் பெரிதுபடுத்தாமல், தங்கையைத் திட்ட வைத்து ரசிக்காமல், அந்தப் பெண்மணி சென்று விட்டதை, ஏதோ வகையில், பிரதீபன் இதமாக உணர்ந்தான்.

''உன்னிடம்தான் சாவி இருக்கிறதே, ஏன் கதவைத் தட்டினாய்?'' என்று கேட்ட தங்கைக்கு, வீட்டின் உள்ளே சென்று, கதவைச் சாத்திய பின், மெல்லப் பதில் சொன்னான்.

அனறையப் பத்திரிகையிலேயே, எதிர் வீட்டுப் பாட்டி சொன்னது போன்ற இரு செய்திகள் வந்திருந்தன. அவற்றை எடுத்துக் காட்டி ''யார் என்று தெரிந்து கொள்ளு

முன்பே, நீ இப்படிக் கதவைத் திறந்தால், நான் என்ன தைரியத்தில் மனும்மா, வெளியே போய்த் தொழிலை நிம்மதியாகப் பார்ப்பது?'' என்று அவன் வருத்தத்துடன் கேட்கவும், அவள் முகம் கன்றிக் கறுத்து விட்டது.

''சா... சாரிண்ணா! நா... யோசிக்கவே இல்லை!'' என்றாள் கண்ணீர் குரலில்.

''தெரியும்மா. இது போலக் கதவு திறக்கிற வேலையெல்லாம் செய்து பழக்கம் இல்லாததால் நேர்ந்த பிழை. ஆனால், எத்தனையோ, இப்போது பழகிக் கொள்கிறோமல்லவா? கல்லூரியில் இருந்து பஸ்சில், புத்திசாலித்தனமாக வரவில்லையா? அதுபோல யோசித்து, எப்போதும் கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்ன?'' என்று முறுவலோடு கேட்டவன், தங்கையின் தலையை ஒரு விரலால் தட்டிக் காட்டி, ''இந்தப் பெட்டிக்குள்தான் நிறைய அடைத்து வைத்திருக்கிறாயே! அதற்கு கொஞ்சூண்டு வேலை கொடுப்பதில் எல்லாம், பெரிதாக ஒன்றும் குறைந்து போகாது, தெரியுமோ?'' என்று அண்ணன் கேலி பேசவும், முகம் தெளிந்து நகைத்தாள் அவள்.

சற்று இலகுவாகப் பேசியபடியே இரவு வேலைகளை முடித்துக் கொண்டு உறங்கப் போனார்கள்.

இருளை வெறித்தவண்ணம், வெகு நேரம், அசையாமல் படுத்துக் கிடந்தான் பிரதீபன். 'எந்த நிலையையும் சமாளித்துத் தெரிவது நல்லதுதான். ஆனால், அவள் என்றைக்கு யாருக்கு வாசல் கதவைத் திறந்து பழக்கம்? இப்படிப் பண்ணி விட்டீர்களே, அப்பா' என்று மனதால் தந்தையிடம் முறையிட்டான் அவன்.

அன்றிலிருந்து வீட்டை விட்டுக் கிளம்பும்போதும், திரும்பி வரும்போதும், எதிர் வீட்டில் அன்னபூரணியோ, பாட்டியோ கண்ணில் பட்டால், ஒரு புன்னகை, தலை யசைப்போடு செல்வது, பிரதீபனின் வழக்கம் ஆயிற்று.

அந்த வீட்டில், வேறு யாரையும் அவன் பார்க்க நேர்ந்தது இல்லை.

எங்கள் வீட்டுச் சின்னது என்று சொன்னதால், பெரியது ஒன்று இருப்பது, நிச்சயம். வீட்டுத் தலை வரும், அன்றுவரை அவனது கண்ணில் பட்டதில்லை.

அவன் கிளம்பிச் சென்று, திரும்பி வரும் நேரங்கள். மற்ற யாரோடும் ஒத்துப் போகவில்லை போலும்!

அதுவும் நல்லதே என்று எண்ணினான் அவன். யாரோடும் கதை பேசிக் கொண்டு நிற்பதற்கு, அவனுக் கும் அவகாசமே இருக்கவில்லை.

அவனுக்கு அவகாசம் இல்லை என்பது நூறு சதவீத உண்மையே.

முத்தையன், ரத்தினவேலும், அவர்களுக்கு உதவிக்கு என்று ஓர் ஆடிட்டரைக் கூட்டி வந்து வைத்துக் கொண்டு, 'ஞெஞெ' என்று மிகவும் தொல்லை கொடுத்தனர்.

இது என்ன? அது என்ன டீக்காசு? சம்பளம் கொடுக் கும்போது, டீயை, அவர்கள் சம்பளத்தில் குடிக்க வேண் டியதுதானே? அது, எதற்கு, ஆட்டோவுக்குக் காசு கொடுப்பது, துரை, பஸ்சில் வர மாட்டாரோ?

இப்படிச் சின்னச் சின்ன விஷயங்களில் எல்லாம் மூக்கை நுழைத்து, அவை ஏதோ பெரிய விஷயம் போலப்

பேசி, அவனது நேரத்தை வீணாக்கினர், பொன்னான நேரத்தை!

அன்று அப்படித்தான். தேவநாதனோடு இந்த ஆண்டுக்கான ஓர் ஒப்பந்தம். கிட்டத்தட்ட கையெழுத்தாகிற நிலையில் இருந்ததை, அவர் இல்லை எனவும் ரத்து செய்யப் போனார்கள். வெகு கால வாடிக்கையாளர்களாகிய அவர்களிடம் பேசி, பிரதீபன் அந்த 'ஆர்டரை' வாங்கியிருந்தான்.

அந்த மகிழ்ச்சியில் அவன் இருந்தபோது, இரு சகோதரர்களும் அவனிடம் வந்தனர்.

புது 'ஆர்டரு'க்கான மூலப் பொருட்களை வாங்குவதற்குப் போனவன் ஆட்டோவிடம் போனானாம்.

அதெப்படி, ஆட்டோ எடுக்கலாம்? பஸ்சிலே போனால் பத்தே ரூபாய்தானே? இப்படியெல்லாம் பணத்தை வீணாக்கினால், லாபம் எப்படிக் கட்டி வரும்?

இவன்களிடம் எப்படி விளங்குவது?

லட்சக் கணக்கில் வரக்கூடிய லாபத்துக்கு, இந்த ஆட்டோ செலவு பொருட்டே அல்ல. வழக்கமாகப் பயன்படுத்தும் ஆட்டோ. எந்த நேரம் கூப்பிட்டாலும் வந்து, அங்கங்கே நிறுத்தி வைத்து, எவ்வளவு நேரம் ஆனாலும் காத்திருந்து கூட்டி வருவார்கள். அத்தோடு, இங்கிருந்து பஸ் நிறுத்தத்துக்குப் போகவே, அரை மணி நேரத்துக்கு மேல் ஆகும். அப்புறம் பஸ் கிடைத்து, போய், பட்டியலில் இருக்கும் பத்துப் பொருட்களின் தரம் பார்த்து, நன்றாக இருக்கும் இடத்தில் விலை பேரம் பேசி... எப்போது வாங்கி, எப்போது வேலை தொடங்குவது?

பொறுமையை இழுத்துப் பிடித்து, அவர்களிடம் விளக்கி முடிக்குமுன், பிரதீபனுக்குப் போதும், போதும் என்றாகி விட்டது.

இப்படிச் சின்னச் சின்ன விஷயங்களில் கூடத் தலையிட்டு, எதிர் வாதாடிக் கொண்டே இருந்தால், எப்படித் தொழில் நடத்துவது?

அல்லது, இப்படிக் கத்திக் கொண்டே இருந்தால், அலுத்துப் போய், இவன் ஓடிவிட மாட்டானா என்று உரசிப் பார்க்கிறார்களா? இப்படி விஷயம் தெரியாத இரு முட்டாள்களின் பேச்சுக்காக, யாரேனும், இவ்வளவு பெரிய தொழிலை விட்டுவிட்டுப் போய் விடுவார்களா?

மகன் கெட்டிக்காரன், எதையும் விட்டுவிட மாட்டான் என்று தந்தை சொல்லியிரா விட்டால் கூட, பிரதீபன் அப்படிச் செய்ய மாட்டானே!

சட்டென மனதுள் ஏதோ பொறி தட்டியது.

மகனை அறிந்தவர், தேவநாதன். அவன் புரிந்து கொள்வான் என்று, நண்பரிடம் சொல்லியிருக்கிறார். தனிமை, அதன் காரணமாக ஒரு பெண்ணோடு பழக்கம் என்பதை, பிரதீபன் புரிந்து கொள்வான் என்பதாக, அதை வக்கீல் சொன்னார்! ஒரு வேளை, அந்தப் புரிந்து கொள்ளுதல், அது இல்லையோ?

மகனை விட்டுவிட மாட்டேன் என்று தந்தை சொன்னதாகத்தான், அவன் அதைப் புரிந்துகொள்ள வேண்டுமோ? ஒரு வேளை இந்த உயிலில் அடங்காதது என்று, மூத்த மக்களுக்கு வேறு ஏதாவது ஒதுக்கி வைத்திருக்

கிறாரா? அப்படியானால், அதைப் பற்றிய விவரம் எங்கே இருக்கிறது?

வீட்டில் எதுவும் இல்லை. அங்கிருந்து கிளம்புமுன், எதற்கும் இருக்கட்டும் என்று தந்தை புழங்கும் பகுதி முழுதையும் இண்டு இடுக்கு விடாமல், நன்கு தேடியா யிற்று. மற்ற பகுதிகளிலும், அப்படித்தான். மற்ற இடங் களில் ஒரு தரம் என்றால், அப்பாவின் அறைகளில், இன்னொரு தடவை!

நன்கு தேடி முடித்து, எல்லாப் பொருட்கள் மீதும் 'டஸ்ட் கவர்' போட்டு மூடிவிட்டு, அலுப்புடன் அங் கிருந்து கிளம்பினார்கள்.

தந்தையின் இழப்பும், மற்ற அதிர்ச்சிகளுமாக அன்று சலித்துக் களைத்து, நம்பிக்கை இழந்து சென்றவனுக்கு, இப்போது வேறு தோன்றியது.

மகனிடம் மன்னிப்புக் கேட்பதைக் கூட, அவர்கள் அறிய எழுதிய, அந்த அளவுக்கான சரணாகதியோடு, தந்தை, ஞானசகாயத்திடம் கூறியது ஒத்துப்போவதாக, நிதானமாக யோசித்த, இன்றைய பிரதீபனுக்குத் தோன்ற வில்லை!

அத்தோடு, அப்பா அப்படிச் சரணாகதி அடையக் கூடியவரும் இல்லை! பிரதீபனிடமும் மானசியிடமும் அவர் கொண்டிருந்த பாசமும், அவன் அறிந்ததே!

எனவே... எனவே மேலே என்ன?

தன் தேடலை அலுவலகத்தில் தொடங்கினான் பிர தீபன். பிறர் அறியாமல்! ஆனால், அதிலும் ஒரு பயனும் இருக்கவில்லை.

மீந்திருக்கும் ஒரே வழி, உயிலை எதிர்த்துப் போராடு வதுதான். அது முடியாததும் அல்ல.

பாட்டனார் சொத்து, தாயார் கொண்டு வந்த சீதனப் பணம், எல்லாம் சேர்ந்த முதலீட்டில்தான், தேவநாதன், 'தீபன் இன்டஸ்ட்ரீசை' தொடங்கியதே.

எனவே அவனும் பேரன்தானே என்று தொழிலை அப்படியே தூக்கி, அந்தச் சிறுவன் கையில் கொடுத்து விட மாட்டார்கள். ஒருவேளை, இந்தப் போராட் டத்தைத்தான் தந்தை குறிப்பாக உரைந்திருப்பாரோ?

ராமாயணத்தில் கூட, கைகேயிடம் கொடுத்த வாக்கி னால் கட்டுண்ட தசரதன், வாக்கு கொடுத்தது, தான் தானே, மகன் அதை மீறலாம், மீற வேண்டும் என்று ஆசைப்பட்டதாகச் சொல்வார்கள்.

தந்தையும் அப்படித்தான் ஆசைப்பட்டிருக்க வேண் டும். சூழ்நிலைக் கைதியாக, எல்லாச் சொத்துக்களும் அந்த பை... அந்த மகனுக்கு என்று எழுதியபோதும், இந்த மகன் தன் உரிமையை விட்டு விடாமல் காப்பாற்ற வேண்டும் என்பதே. அவரது விருப்பம்.

பெருமளவு, பிரதீபனின் மனம் தெளிந்து போயிற்று. உயிராய் வளர்த்த தந்தை, தங்களை அடியோடு ஒதுக்கி விட்டாரோ, தங்களைப் பற்றிய சிறு அக்கறை கூட இல்லாமல், எல்லாவற்றையும், ஒரு சின்னப் பையனுக் குக் கொடுத்து விட்டாரே என்று, உள்ளூர இருந்த வலியும், கிட்டத்தட்ட மறைந்து போயிற்று!

இப்போதும், எதுவும் சரியாகி விடவில்லை. எல்லா வற்றையும் இழந்த நிலை மாறவில்லை. முத்தையன்

சகோதரர்களின் தொல்லையைத் தூக்கி எறியும் உரிமை கிட்டிவிடவில்லை. அவர்களை சகித்துத்தான் தீர வேண்டும். அந்த உயிலுக்கு ஒரு பெரிய விலை கொடுத் துத்தான் ஆக வேண்டும்.

வீட்டையும் விட முடியாது என்பதால், அதற்காகவும் வேறு வகை, இழப்புக்குத் தயாராக நேரும்.

ஆனால், ஒரு பெரிய, நீண்ட போராட்டத்துக்கு, மனதைத் தயார்ப்படுத்திக் கொள்வது, இப்போது அவனுக்குச் சற்று இலகுவாக இருந்தது. இனி எதை எதிர்கொள்வதும், எளிதுதான் என்ற நம்பிக்கையும் வந்தது.

அந்த நம்பிக்கையைச் சோதித்துப் பார்ப்பதற்காகத் தானோ என்னவோ, மறுநாள் காலையிலேயே வெளியே சந்தடி தெரிந்தது. கடைசியாக, எதிர் வீட்டுக் கிரில் கதவை, யாரோ படாரென்று சாத்தியதில், பிரதீபனின் தூக்கம் முழுதாகக் கலைந்து விட்டது.

எதிர் வீட்டுப் பூரணி, ஆன்ட்டி சொன்ன 'சின்னது' வேலை போலும் என்று எண்ணியவாறே, சோம்பல் முறித்து எழுந்தான் அவன்.

கிட்டத்தட்ட எழுகிற நேரம்தான். வெளிச்சம் வந்து விட்டது.

திரும்பப் படுக்க மனமின்றி, பல் துலக்கிவிட்டு வந்தால், ''அக்கா, அக்கா, ஏ... அக்கா!'' என்று கத்தல் கேட்டது.

பக்கவாட்டு ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தால், மானசி வயதில் ஒரு பெண், எதிர்ப்புறம் நின்ற காரின்

அருகே நின்று கத்திக் கொண்டிருந்தாள். பக்கத்தில் ஒரு பிளாஸ்டிக் வாளியில் தண்ணீர்.

''என்னடி? காலை ஆறு மணியாகவில்லை, அதற்குள் அக்காவை ஏலம் போடுகிறாய்?'' என்று சிடுசிடுத்தது இன்னொரு பெண்குரல்.

ஏலமா? சட்டெனச் சிரிப்பு வந்தது, பிரதீபனுக்கு. மூன்று தரம் உரக்கக் கூப்பிட்டால், ஏலமாகி விடுமா?

தன்னையறியாமல் மலர்ந்த புன்னகை, தங்கைப் பெண்ணின் அடுத்த வாக்கியங்களில் மறைந்தது.

''நாளைக்கு அப்பா வருவதாக மெயில் வந்தது. அதுதான் காரைத் துடைக்க வந்தேன். துடைப்பதற்குத் துணி வேண்டும். அன்றைக்குக் கிழித்துக் கொண்டு வந்தாயே, அந்தத் துப்பட்டாவைக் கொடு, துடைக்கிறேன்'' என்றாள் சின்னவள்.

கிழித்துக் கொண்டு வந்த துப்பட்டா! அந்த...

சட்டென்று கதவைத் திறந்து பார்த்தால், அதே துப்பட்டாத் துணியோடு, ஒரு பெண் போய்க் கொண்டிருந்தாள்.

அன்றையத் தினம் அப்படியே பிரதீபன் மனதில் ஓடியது.

இருந்திருந்து, இவள் முன்னிலையிலா, இப்படி நிலையிறங்கிக் காண வேண்டும்?

மாடிப்படியில் மேலே நின்றவாறே, கிழிந்த துணியை வீசுகிறாள்! இப்போது திரும்பி வருவாள்!

அவள் திரும்பி வந்து முகம் பார்க்குமுன், உள்ளே ஓடி விடலாம் என்று பிரதீபன் ஒரே ஒரு தரம் நினைத்தான்.

ஆனால், எதிர் வீட்டில் வசிப்பவள், எப்போது வேண்டுமானாலும், சந்திக்க நேரலாம். இன்றைக்குப் பார்த்து விடுவாளோ, நாளைக்குப் பார்க்க நேருமோ என்று அஞ்சிக் கொண்டே, இருப்பானேன்? இன்றைக் குப் பார்த்து விட்டாள் என்றால், குறைந்தது, அந்தப் படபடப்பு தீரும்!

பிரதீபன் அசையாமல் நிற்க, துப்பட்டாவைத் தங்கை யிடம் வீசிவிட்டுத் திரும்பியவளின் கண்களில், எதிர் வீட்டு வாயிலில் அவன் நின்ற தோற்றம் பட்டது.

பெண் குரல் கேட்டதும் எட்டிப் பார்க்க வந்திருக்கும் எவனோ என்று, முதலில் அலட்சியமாகத் திரும்பப் போனவள்தான்.

ஆனால், அதற்குள் அவன் முகம் எதையோ நினை வூட்ட, அவள் முகம் சீறிச் சினந்தது.

பொது இடத்தில், ஓரளவு தற்செயலாக என்றாலும், துப்பட்டாவைக் கிழித்துவிட்டு, அதற்காக மன்னிப்புக் கேட்கும் நாகரீகமே இல்லாமல், நிலையாகப் பணத்தை அவள் மீது வீசியவன்!

பணத் திமிர் பிடித்த... என்று, தொடர்ந்து அவளது மனதுள் தோன்றிய எண்ணங்கள் சட்டென நின்றன.

எதிர் வீட்டுக்கு, அண்ணனும் தங்கையுமாக இரண்டே பேர் வாடகைக்கு வந்திருப்பதாகத் தாயார் சொன்னது நினைவு வந்தது.

பர்மூடாவும் பனியனும், தூங்கி எழுந்த தோற்றமும், தன் இடம் போல நிற்கும் விதமும்! இவன்தான் அந்த அண்ணன்!

அவர்களுடையது, மூன்று படுக்கையறைகள் கொண்ட, சொந்த ப்ளாட்!

எதிரே இரண்டே படுக்கையறைகள் இருக்கும் சிறு ப்ளாட்டுக்கு வெறும் வாடகைக்கு வந்திருப்பவன், இவன்! பாவி, அன்று என்ன திமிராக நடந்து கொண்டான்!

எவன் காரையோ ஓட்ட நேர்ந்தால், காரின் உரிமையாளன் என்றே எண்ணிக் கொண்டானாக்கும்!

அவனை ஏற இறங்க, ஒரு தரம் உதாசீனமாக நோக்கினாள் அவள். ''இரவல் காரில்தானா, அவ்வளவு பந்தா?'' என்று துச்சமாகப் பேசியவள், ஓர் அலட்சியத் தலைச் சிலுப்பலுடன், எதிரே தன் வீட்டுக்குள் சென்றாள்.

''அப்பா...'' என்று மனதுள் முனகி, கண்களை இறுக மூடி நின்றான் பிரதீபன்.

இவ்வளவு அவமானப்பட நேரும் என்று அவன் எதிர் பார்க்கவில்லையே!

சற்று நேரம் குன்றி அமர்ந்திருந்த பிறகு, தனக்குத் தானே, மனதைத் தேற்றிக் கொண்டான். ஏதோ ஒரு நல்லவேளை, மானசி இதைப் பார்க்கவில்லை. அவளுக்கு விளக்கம் சொல்வது ஒருபுறமிருக்க, அண்ணனை ஒருவர் அவமானப்படுத்துவதா என்று, அதையும் தங்கை தாங்க மாட்டாள்.

அடுத்த நல்லதாக, வேலை நேர வேறுபாடுகளால், இதுவரை, அந்தப் பெண்ணைச் சந்திக்க நேரவில்லை. இனியும் அப்படி நடக்கட்டும் என்று கடவுளிடம் கேட்டுக் கொள்ள வேண்டியதுதான்!

அவ்வப்போது, அந்தப் பெண்ணின் ஏளன முகம் வந்து வேலையில் குறுக்கிட்டபோதும், அவன் வாங்கிய ஆர்டரின் வேலைகள் வேகமாக நடப்பது, பிரதீபனுக்கு மகிழ்ச்சியை அளித்தது.

விவரம் தெரியாமல் இரவல் கார் என்று எண்ணி விட்டாள். இருக்கட்டும். எப்படியாவது, பிரச்சினைகள் அனைத்தையும் தீர்த்து, அதேபோல... ஏன், அந்தக் காரிலேயே கூட, அவள் முன் போய் நிற்கத்தான் போகி றேன். அப்போது, அவளிடம் முறையாக மன்னிப்புக் கேட்டு, ஒரு நல்ல உறவை ஏற்படுத்திக் கொள்ள லாம்!

குறைந்த பட்சமாக, வெறுப்பற்ற சூழ்நிலையை!

காலையில் விழிக்க வேண்டும் என்பதற்காகவே, அண் ணன் தங்கை இருவருமே ஓரளவு சீக்கிரமாகத் தூங்கி விடுவார்கள். அன்றிரவும் வழக்கம் போல, ஒன்பது மணிக்கே பிரதீபன் அயர்ந்து உறங்கி விட்டான்.

தொழிற்சாலையில் சில தயாரிப்புகள், முடிகிற தறு வாயில் இருந்தன. அந்தச் சமயத்தில் கூடவே நிற்க வேண்டும் என்று தேவநாதன் சொல்வார்.

அவரது பயிற்சியில் தொழில் கற்ற பிரதீபனும், அதையே செய்தான். செய்வதைப் பார்த்துப் பின்னோடு அலைந்து, எதிலும் மூக்கை நுழைத்த முத்தையன், ரத்னவேலைச் சமாளிப்பதுமாக, உடலாலும், மனதாலும் களைத்திருந்த பிரதீபன் வெகு விரைவிலேயே தூங்கி விட்டான்.

பழக்கமற்ற வேலைகளும், பல்வேறு வேதனைகளு மாக, தங்கையின் நிலையும் அதுவாகவே இருந்தது.

வாயில்புறப் படுக்கையறை பிரதீபனுக்கு. ஒன்பது மணிக்குப் படுத்து இரண்டு மணி நேரத்துக்கு மேலாக அயர்ந்து உறங்கி விட்டவனுக்கு, லேசாகத் தூக்கம் கலையலாயிற்று.

ஏதோ கனவு... இல்லை, வெளியே என்னவோ சத்தம்!

எதிர் வீட்டுக் கிரில் கதவைத் திறப்பதும், மூடுவது மாக, படபடப்பாய் ஏதோ பேச்சுக் குரலும் கேட்க, பிர தீபன் சட்டென எழுந்து போய், வாயில் பக்கத்து ஜன்ன லின் கதவின் வழியே எட்டிப் பார்த்தான்.

கழுத்து, காது எல்லாவற்றையும் மூடிக் கொண்டு, எதிர் வீட்டுப் பெண்மணி எங்கோ கிளம்புவது போல நிற்க, பெண்கள் இருவரும் ஏதோ வாதாடிக் கொண்டு இருந்தார்கள்.

மூவரும் தங்கள் பிரச்சினையிலேயே, மிகவும் தீவிர மாக இருந்தார்கள் போலும்.

''என்ன ஆன்ட்டி?'' என்று பிரதீபன் வெளியே வந்து கேட்கவும் திடுக்கிட்டுப் போய்த் திரும்பிப் பார்த்தார்கள்.

5

இரவல் காரிலேயே பந்தாக் காட்டும் இவனிடம் ஏன் சொல்வது என்று எண்ணினாள் போலும் மூத்த பெண் ''ஒன்றுமில்லை'' என்றாள் அவசரமாக.

''பாட்டி மருந்து'' என்று தொடங்கிய சின்னப்பெண், தமக்கை ஒன்றுமில்லை எனவும், பேச்சை நிறுத்தி, மூத்தவளை முறைத்தாள்.

இருவரையும் பொருட்படுத்தாமல், அன்னபூரணி பதில் சொன்னாள்.

''பாட்டிக்கு உடம்பு சரியில்லையப்பா.''

''என்ன ஆன்ட்டி, உடம்புக்கு? யாரேனும் டாக்டரைக் கூட்டி வர வேண்டுமா?'' என்று வேகமாக வினவினான் பிரதீபன்.

''அதில்லை தம்பி, அவ்வப்போது, பாட்டிக்கு இப்படி வருவதுதான். ஒரு மருந்து, கொடுத்தால் சரியாகிவிடும். இப்போது காலியாகி விட்டது. நாங்கள் போய் வாங்கி வருகிறோம் என்று, இவர்கள் சொல்லுகிறார்கள். இந்த நேரத்தில், இரண்டு சின்னப் பெண்களை அனுப்பி விட்டு, நான் சாகாமல் செத்துக் கொண்டிருப்பதா? பர வாயில்லை, மருந்து வாங்க, நான் போகிறேன் என்றால், கூடாது என்று இரண்டும் தகராறு பண்ணுகிறதுகள்'' என்றாள்.

''நீங்கள் யாரும் போக வேண்டாம்'' என்றான், பிரதீபன். ''நான் போய் வாங்கி, வருகிறேன். மேலே ஒரு சட்டையைப் போட்டுக் கொண்டு வந்து விடுகிறேன்'' என்று அவனது வீட்டின் உள்ளே சென்றான்.

சட்டையை மாட்டிக் கொண்டே வெளியே வந்து கதவைப் பூட்டினான் ''மானசி அசந்து தூங்குகிறாள், ஆன்ட்டி. ஒருவேளை, விழித்துத் தேடினால், சொல்லுங் கள் மருந்துச் சீட்டைக் கொடுங்கள்'' என்று கேட்டான்.

மருந்துச் சீட்டையும் பணத்தையும் அன்னபூரணி கொடுக்க, வாங்கி பைக்குள் வைத்தான்.

''இந்த நேரத்தில், இங்கே எந்த மருந்துக்கடை திறந்திருக்கும்?'' என்று விவரம் கேட்டு, அவன் படியிறங்கத் தொடங்கியபோது, ''ஓட்டத் தெரிந்தால், என் ஸ்கூட்டியை எடுத்துப் போகச் சொல்லுங்கள், அம்மா'' என்று வண்டிச் சாவியைக் கொண்டு வந்து, தாயிடம் கொடுத்தாள் மூத்த மகள்.

அவன் திரும்பி வந்து, மருந்து, மிச்சப்பணம், சாவியைக் கொடுக்கவும், வாங்கி மகளிடம் கொடுத்தாள் அன்னை. ''முதலில் பாட்டிக்கு மருந்தைக் கொடு'' என்று அனுப்பினாள்.

திரும்பி ''எங்கள் பேச்சினால், தூக்கம் கெட்டு விழித்தீர்கள் போல! ரொம்பத் தாங்க்ஸ், தம்பி'' என்றாள் பிரதீபனிடம்.

''எழுப்பியே, மருந்து வாங்க அனுப்பியிருக்கலாம், ஆன்ட்டி. இதுபோல நிலை நேர வேண்டாம். ஆனால், தேவை என்றால், எந்த நேரமானாலும், என்னைக் கூப்பிடத் தயங்க வேண்டாம். நினைவு வைத்துக் கொள்ளுங்கள்'' என்று தன் வீட்டுக் கதவைத் திறந்தான் பிரதீபன்.

சற்று நேரம் பொறுத்து, எதிர் வீட்டில் அரவம் அடங்கவும், அவனும் மெல்ல உறக்கத்தில் ஆழ்ந்தான்.

மறுநாள் காலையிலேயே காய்கறிக் கூடையுடன் அன்னபூரணியைப் பார்த்தவன், பாட்டியின் உடல் நலம் பற்றி, அவளிடம் விசாரித்தான்.

''வந்து பாரேன்ப்பா. பாட்டியே உன்னிடம் நேரில் நன்றி தெரிவிக்க வேண்டும் என்றார்கள்'' என்று, அவனை உள்ளே அழைத்தாள் அவள்.

''நன்றி என்ன ஆன்ட்டி? பக்கத்தில் இருக்கிறோம். இது கூடச் செய்ய வேண்டாமா?'' என்று கூடப் போய்ப் பாட்டியைப் பார்த்த பிரதீபன், நன்றி சொன்ன முதிய வளிடம் இதையே கூறினான்.

''நல்ல பிள்ளை, நன்றாக இருப்பாய்'' என்று அவனது கையைத் தட்டிக் கொடுத்து வழியனுப்பினாள் பாட்டி யம்மாள்.

அவனுள்ளே பரவிய இதம், ஹாலில் நின்ற மூத்த பெண்ணின் சந்தேகப் பார்வையில், குறைந்து மறைந்தது.

ஆனால், அவள் எப்படி, அவனை நல்லபடியாக நினைப்பாள்? ச்சு! அப்படியொரு பைத்தியக்காரத் தனத்தை, அவன் ஏன் செய்தான்? இன்றைக்கு யோசித் துப் பார்க்கும்போது, எவ்வளவு திமிராகவும், மடத்தன மாகவும் தெரிகிறது!

ஏதாவது பிடிமானம் கிடைக்காதா என்று, கிடைத்த நேரத்தில், வெளியே காட்டிக் கொள்ளாமலே தந்தை யின் பழைய வங்கிக் கணக்குகளை ஆராய்ந்து கொண் டிருந்த பிரதீபனுக்கு, அன்று ஒரு பெரிய 'ஷாக்!'

சில ஆண்டுகளாகவே, தந்தையின் கணக்கில் பெரிய பெரிய தொகைகள், எந்தக் காரணம் என்பதே இல்லாமல் எடுக்கப்பட்டிருந்தன. அதுவும் கடைசி இரு வருஷங் களில், மிக அதிகமாக.

பல லட்சங்கள்!

அவருடைய புதிய குடும்பத்துக்காகவோ என்றால், அது தொடங்கிய முதல் நாலு ஆண்டுகளில், இந்த அளவு இல்லையே!

இந்த இரண்டு ஆண்டுகளில், அப்படி என்ன பெரிய செலவு?

மருத்துவச் செலவோ என்று பார்த்தால், அதெல்லாம் காரணத்தோடு கணக்கில் எழுதப்பட்டிருந்தன.

இதைவிடவும், பிரதீபனும், அவன் பங்குக்குப் பணத்தைக் கண்டபடி செலவு செய்திருக்கிறான். கீழை நாடுகளில் சுற்றுப்பயணம், மேலை நாடுகளைச் சுற்றிப் பார்ப்பது 'தாஜி'ல் பார்ட்டி என்று, சும்மாப் பணத்தை அள்ளி விட்டிருப்பதைப் பார்க்கையில், பெரிய அதிர்ச்சியாக இருந்தது.

வேண்டாம் என்று, ஒரு மறுப்புக் கூறாமல், அவன் கேட்ட போதெல்லாம் பணம் கொடுத்த தந்தையை எண்ணுகையில், உள்ளத்தோடு உடலும் சேர்ந்து குன்றிப் போயிற்று.

இந்த இடத்தில் அமர்ந்து, பொறுப்பேற்று வேலை செய்யும் போதல்லவா, இந்தச் செலவுகளின் மடத்தனம் முழுமையாகத் தெரிகிறது!

சும்மாவே, எதற்கும் போட்டிக்கு வரும், அந்த இருவரும், எப்போது வந்து, இந்த செலவுகளுக்காக, அவனைப் பிடித்துப் புளியம்பழம் உலுக்கிய மாதிரி உலுக்கப் போகிறார்களோ?

வாங்குகிற காசுக்கு வஞ்சனையில்லாமல், உட்கார்ந்து, பழம் கணக்குகளை அடி முதல் ஆராய்ந்து பார்த்துக்

கொண்டிருந்த, அவர்களுடைய ஆடிட்டர், நல்ல வேளையாக அந்தத் தொழில் தொடங்கியதிலிருந்து ஐந்தாம் ஆண்டில்தான், இன்னமும் இருந்தார்!

வரட்டும் மெல்லவே, வரட்டும். அதற்குள், இதி லிருந்து மீள, ஒரு வழி கண்டாக வேண்டும்.

அன்று அவன் வீடு திரும்பிய சற்று நேரத்திற்கெல் லாம், எதிர் வீட்டுத் தலைவர் தன்னைத் தானே அறி முகப்படுத்திக் கொண்டு, உள்ளே வந்தார்.

நள்ளிரவில் உதவிக்கு வந்ததற்கு நன்றி தெரிவித்தார்.

உரியவாறு அவன் பதில் கூறுகையில், மானசி எலு மிச்சம் பழச்சாறு கொண்டு வந்து வைத்தாள்.

''தங்கையா, பிரதீபன்? ஊர் மோசமாக இருக்கிறது. கவனத்தோடு பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றபடி, டம் ளரை எடுத்தார்.

சாறைக் குடித்தபடி இந்தியாவின் மழை, வெயில் பற்றி, ஓரிரு வார்த்தைகள் பேசினார்.

குடித்து முடித்து, விடைபெற எழுந்தவர், புருவத்தை சுளித்து ''என்ன சார், பெண்கள், இவர்கள்? கூடக் கொஞ்சம் மருந்து, முன்னரே வாங்கி வைப்பதற்கென்ன? கடைசி நேரத்தில் 'லபோ லபோ' என்று அடித்துக் கொள்வது! எனக்கு வெளியூரில் சுற்றுகிற வேலை. அதனால்தான். இதெல்லாம் பார்த்துப் பார்த்து, வாங்கிப் போட்டு வைத்து விடுவது. நான் வர நாலு நாள் தாமதம். ஆனால், வேண்டியது செய்யத் தெரியாமல்... சரி, இந்த முறை எப்படியோ போகட்டும். பெண் பிள்ளைகளை வைத்துக் கொண்டு... வெளியே யாரோடும் பேசிப்

பழக, நான் அனுமதிப்பது இல்லை. பார்த்தால் நல்லவ னாகத் தெரிவதால், நன்றி சொல்ல வந்தேன். வரு கிறேன்'' என்று முறைப்பாகவே மொழிந்து விட்டு மட மடவென்று வெளியே போய்விட்டார்.

இவர் 'நன்றி சொல்ல வந்தாரா, அன்றி எதற்கேனும் எச்சரிக்க வந்தாரா?

தோளைக் குலுக்கிக் கொண்டு திரும்பினால், மான சியும் அதையே செய்து கொண்டிருந்தாள்.

''இவ்வளவு உருக்கமாக நன்றி தெரிவிக்க, உலகி லேயே யாராலும் முடியாது, அண்ணா!'' என்று, அவள் பாவனையோடு சொன்ன விதத்தில், இருவருக்குமே சிரிப்பு வந்துவிட்டது!

சிரித்தாலும், ''நீ வேலைக்குச் செல்லும்போது, என்னை எப்படியண்ணா, கவனமாகப் பார்ப்பாய்? தொலைந்து போய்விட மாட்டேன்?'' என்று அவள் கேட்டதில் கோபம் தெரிந்தது.

''விடும்மா. அவரது கருத்து, அவருக்கு. அது சரியாக இருக்க வேண்டும் என்று, ஒரு கட்டாயமும் இல்லை'' என்றான் தங்கைக்குச் சமாதானமாக.

இரண்டு நாட்கள் பெரிதாகக் கேட்ட ஆண் குரலுக்குப் பிறகு, எதிர் வீட்டில் அமைதி நிலவியது. ''அந்தப் பெண்களுடைய அப்பா மறுபடியும் ஊருக்குப் போய் விட்டார் போல!'' என்றாள் மானசி. ''அவர்கள் வீட்டுச் சின்னப் பெண், என்னைப் பார்த்துச் சினேகமாகப் புன்னகை செய்தாள், அண்ணா. ஆனால்...'' என்ற வளின் முகம் சற்று வாடியது.

''ஆனால் என்னம்மா?''

''எனக்குத்தான், யாரிடமும் பழக அவ்வளவாகப் பிடிக்க வில்லை'' என்று, கண்களில் நீர் திரையுடன் எங்கோ பார்த்தாள் அவள்.

பழைய நினைவு என்று பிரதீபனுக்குப் புரிந்தது. அவனுக்கும், அவ்வப்போது வருவதுதான். ஆறுதல் சொல்லிப் பயன் கிடையாது. வலி இன்னமும் அதிக மாகத்தான் பெருகும்.

கவனியாதது போலப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டு இருந்தவன், சற்றுப் பொறுத்து ''நேற்றுக் கற்றுக் கொடுத்த கணக்கில், ஏதோ சரியாகப் புரிய வில்லை என்றாயே, மனு. இப்போது வருகிறாயா, அதைப் போட்டுப் பார்க்கலாம்?'' என்று அழைத்தான்.

''சரிண்ணா'' என்று உடனே எழுந்து வந்தாள் தங்கை.

அந்த ஞாயிறு வந்தது.

சென்ற ஞாயிற்றுக்கிழமை, இடையிலே விட்ட சில பாடங்களைப் படித்து முடிப்பதில், மானசியின் பொழுது கழிந்தது. ஒரு வேலை முடிக்க வேண்டியிருந்ததால், பிரதீபன், அலுவலுக்கே செல்ல வேண்டியதாயிற்று!

சுமார் பதினைந்து நாட்களின் உழைப்பும், இறுக்கங் களும் சேர்ந்துகொள்ள, வழக்கம்போலக் காலையில் மானசிக்குச் சில உதவிகளைச் செய்துவிட்டு, மறுபடியும் படுத்த பிரதீபன் வெகு நேரம் அயர்ந்து உறங்கி விட் டான்.

ஒருவாறு கண் விழித்து எழுந்தால், மதிய உணவு நேரம், எப்போதோ தாண்டியிருந்தது.

''நீ சாப்பிட்டாயாம்மா?'' என்று கேட்டவாறே, சமையல் மேடையை அடைந்து, மூடியிருந்த தட்டுக்களைத் திறந்து பார்த்தான்.

''ஆமாம்'' என்று சின்னக் குரலில், பதில் சொல்லி விட்டு, கையிலிருந்த புத்தகத்திலேயே, அவள் கவனமாக இருந்தாள்.

கூடச் சேர்ந்து உணவருந்தியிருந்தால், மனு இன்னும் கொஞ்சம் சாப்பிட்டிருப்பாள். இப்படித் தூங்கி விட்டோமே என்று உள்ளூர வருந்தியபடியே உண்டு முடித்து, தட்டைக் கழுவி வைத்துவிட்டு வந்தான் அண்ணன்.

வேறு வேலை இல்லாததால், இன்னும் கொஞ்ச நேரம் படுத்தே இருக்கலாமா என்று யோசித்தபோது, தங்கை இப்படிக் கிடந்து, ஒரேடியாகப் படிக்கிறாளே என்று தோன்றியது.

கஷ்டமான பாடமாக இருக்கலாம் என்று தோன்ற ''பாடம் ஏதும் புரியவில்லையாம்மா'' என்று வினவினான்.

''புரிகிறது'' என்று, மறுபடியும் சின்னக் குரலிலேயே அவள் பதிலளிக்கவும், திடுக்கிட்டுத் திரும்பி, அவளைக் கவனித்துப் பார்த்தான்.

முதுகு குலுங்குவது கண்டு, அருகில் போய் அமர்ந்து, புத்தகத்தை வாங்கி மூடி வைத்துவிட்டு ''என்னம்மா?'' என்று மென்குரலில் விசாரித்தான் அண்ணன்.

அடக்கிப் பார்த்துவிட்டு முடியாமல் ''எனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறதே, அண்ணா!'' என்று அருவியாகக் கண்ணீரைப் பொழிந்து விட்டாள் தங்கை.

இவளை என்ன சொல்லித் தேற்றுவது?

அவனுமே, உள்ளூர அவ்வளவு வேதனையை அனுபவித்தாலும், அதை, வெளியே காட்டிக் கொள்ளாமல் சாதாரணம் போல முயன்று நடந்து கொள்ளும் போது!

தங்கையின் கையைப் பற்றித் தட்டிக் கொடுத்து, ''என்னம்மா, நன்றாகச் சமாளிக்கிறாய் என்று நினைத்தேனே...'' என்று குரல் கரகரக்க.

''அழுது, உன்னையும் கஷ்டப்படுத்தக் கூடாது என்றுதான், இப்போதும் நினைத்தேன் அண்ணா. ஆனால் முடியவே இல்லை. உனக்குத் தெரியுமாண்ணா, கல்லூரியில் என் சினேகிதிகள் யாரும், முன்போல என்னோடு பேசுவது கிடையாது. பேசுகிற ஒரு சிலரும், உனக்குச் சித்தியாமே, தம்பியாமே என்று வம்பு பேசுகிறார்கள். அல்லது 'பா...வம்' என்று பரிதாபப்படுகிறார்கள். ரொம்ப அவமானமாக இருக்கிறது. கல்லூரிக்குப் போகக்கூட, ரொம்ப வெறுப்பாக இருக்கிறதுண்ணா! நீ வருத்தப்படுவாயே எ... என்றுதான்...'' முடிக்க மாட்டாமல், கேவினாள் சின்னவள்.

''அதைச் சரியாகத்தான் ஊகித்திருக்கிறாய்!'' என்று தங்கையை எழுப்பி நிறுத்தினான், பிரதீபன். ''வா...'' என்று சமையல் அறைக்கு அழைத்துச் சென்று, 'ஸிங்க்' கில் மானசியை முகம் கழுவச் செய்தான்.

மீண்டும் முன்னறைக்குக் கூட்டிச் சென்று, அருகமர்த்திப் பேசினான் ''பாரம்மா, நமக்கு நேர்ந்திருப்பது, பெரிய இழப்பு. அதைத் தொடர்ந்து, பெரிய சிக்கல். மந்திரம்

போட்டது போலச் சட்டென்று, இதிலிருந்து நாம் மீண்டுவிட முடியாது. நாளாகும், எதனாலோ, அப்பா இப்படி ஓர் உயிலை எழுதிக் கொடுத்துவிட்டார். இப்போதைக்குப் பத்திருபது லட்சங்களை வீசியெறிந்து, நம்மிடம் ஒப்புதலை வாங்கிக் கொள்ள அவர்கள் தயார் தான். பேரம் பேசி, இரண்டு மூன்று மடங்கு அதிகமாகக் கூட வாங்கலாம். ஆனால், அது கூடாது என்று, அங்கிளும் நானும் நினைக்கிறோம். இப்படி எழுதியே கொடுத்திருந்தாலும், அப்பாவின் விருப்பமும், அது அல்ல என்பது, எங்களுக்கு நிச்சயம். ஒரு பெரிய பங்கு அந்தக் குடும்பத்துக்குக் கொடுக்க நேரலாம். ஆனால் முழுதாகத் தொழிலையோ, நம்முடைய அந்த வீட் டையோ விட்டு விடாமல் காப்பது என்றால், இந்தக் கஷ்டம் நாம் பட்டுத்தான் ஆக வேண்டும். புரிகிறதில் லையா, மனும்மா'' என்று எடுத்துச் சொன்னான்.

அவன் கூறியவற்றை உள் வாங்குவதுபோலச் சற்று நேரம், மானசி அமைதியாக அமர்ந்திருந்தாள். ''எனக்கு அந்த வீட்டைப் பார்க்க வேண்டும்'' என்றாள் திடீ ரென்று.

''ஏம்மா? பார்க்கப் பார்க்க, இன்னும் அதிக மனக் கஷ் டம்தானே? எதற்கு வீணாக?'' என்று பிரதீபன் தடுக்க முயன்றான்.

''அப்படியில்லை, அண்ணா. எனக்குச் சில சமயம், அந்த வீடு என்பதே ஒரு பிரமையோ, எப்போதும் இப் படித்தான் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தோமோ, அத னால் வந்த கற்பனையோ என்றெல்லாம் தோன்றுகிறது, அண்ணா. நம் வீட்டைப் பார்த்தால் முதலில்

வலித்தாலும், ஒரு நாள் இது நமக்குத் திரும்பக் கிடைக்கும். இந்தத் துன்பம் மறைந்து போகும் என்ற நம்பிக்கை வரும். அதுவரை, எப்படியாவது தாங்கிக் கொள்ள வேண்டும் திடமும் வரும் என்று நினைக் கிறேன்'' என்று அவள் சொன்னது, அவனுக்குச் சரியாகப் பட, அன்று மாலை, இருவருமாகச் சொந்த இல்லத்தைப் பார்த்து வரக் கிளம்பிப் போயினர்.

பெரிய சாலையிலிருந்து, கிளைத் தெருவுக்குத் திரும்பும்போதே, வயிற்றுக்குள் பிசையத் தொடங்கி விட்டது, மானசிக்கு. அறிந்தவர்கள் யாரையும் பார்க்க விரும்பாமல், நேர் எதிரே மட்டும் பார்த்தபடி, வேகமாக நடந்தாள், அவள்.

அப்படி நடந்தும், தெரு மூலை திரும்பி, வீட்டுப் பக்கம் அடியெடுத்து வைக்கும்போது, மூன்றாம் வீட்டுத் தாத்தா பார்த்துவிட்டு ''ஏ பிரதீபா, உன் அப்பா அப்படிக் கல்லைத் தூக்கித் தலையில் போட்ட மாதிரி, உங்கள் ரெண்டு பேரையும் நட்டாற்றில் விட்டு விட்டாரே! சாப்பாட்டுக்கு என்ன பண்ணுகிறாய்?'' என்று மூச்சு வாங்க கேட்டபடி, அவர்களை நோக்கி நடந்து வர முயன்றார்.

வேகம் குறையாமல் நடந்தபடியே, ''நாலு எட்டு நன்றாக நடக்க முடியாத மனிதர். வம்புக்கு எப்படி அலைகிறார், பார். அவர், ஊன்றுகோலைத் தேடி எடுத்து வருமுன், சீக்கிரமாக நாம் கிளம்பி விட வேண்டும்'' என்று பிரதீபன் சொல்லி முடிக்கும்போது, அவர்களது வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டனர்.

மூன்றாம் வீட்டுக்காரரின் உரத்த அழைப்பும் ஒரு நன்மையைச் செய்திருந்தது. வீட்டின் பின்பறம் ஏதோ

செய்து கொண்டிருந்த தோட்டக்காரன், பிரதீபனின் பெயரைக் கேட்டதும் எம்பிப் பார்த்துவிட்டு, மானசிக்குப் பிடித்த மனோரஞ்சித மலர்களைப் பறித்து எடுத்துக் கொண்டு முன்புறம் ஓடி வந்தான்.

''சின்னய்யா! சின்னம்மா! வாங்கம்மா. உங்களுக்குப் பிடிக்குமே! இந்தாங்கம்மா! உள்ளார...'' என்றவன் அவர்கள் பேசாது நிற்கவும், முண்டாசுத் துணியை எடுத்து, மரத்தடி கல் பெஞ்ச் ஒன்றைத் தூசு தட்டி, ''உட்காருங்க கண்ணுகளா. தினம் நான் சுத்தம் பண்ணித் தான் வைக்கிறது'' என்று, இருவரையும் அமரச் சொன்னான்.

லேசாக முறுவலித்து, ''நீ செய்வாய் என்று தெரியும் ஆறுமுகம். அதனால்தானே, உன்னிடம் ஒப்படைத்து விட்டுப் போனோம். ஒரு தூசு தும்பு இல்லாமல், நன்றாகப் பராமரிக்கிறாயே! பார்க்க நன்றாக இருக்கிறது'' என்று பிரதீபன் பாராட்டவும், தோட்டக்காரனுக்கு உச்சி குளிர்ந்து விட்டது.

''அது மட்டும் இல்லிங்கய்யா, இதே, நிமிட்டிலே வர்றேனுங்க'' என்று ஓடிப்போய்த் திரும்பி வந்தான்.

''அய்யா, வீட்டிலே பூவு, காயிங்கெல்லாம் வீணாப் போவுதுங்க, தேங்கா கூடப் பறிச்சேன். எல்லாத்தையும், இங்கே வருகிற பூக்காரம்மா, காய்க்காரம்மா கிட்டே கொடுத்ததிலே, தேங்கா மட்டும் அறுநூறு ரூபா. மத்தது நூத்தெளுவத்தஞ்சு, இந்தாங்கய்யா'' என்று நீட்டினான்.

அண்ணனும், தங்கையும் நெகிழ்ச்சியோடு, ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''இருக்கட்டும், ஆறுமுகம் இதை நீ... இங்கே பக்கத்தில் ஓர் அம்மன் கோயிலில் திருவிழா என்று இந்த மாதம் அப்பாவிடம் பணம் கேட்பாயே, அதற்குக் கொடுத்துவிடு. சந்தோஷமாகப் போய், சாமி கும்பிட்டு விட்டு வா'' என்றான் பிரதீபன்.

தெருவோடு போவது போல, ஓரிருவர் வீட்டுப் பக்கம் எட்டிப் பார்ப்பது போலத் தோன்றவும், இருவரும் எழுந்து விட்டனர்.

முகம் வாடியபோதும், ''சீக்கிரமா. இங்கேயே வந்து விடுவீர்களாய்யா?'' என்று ஆவலாகக் கேட்டான் ஆறுமுகம்.

''பார்க்கலாம் ஆறுமுகம்'' என்றான் பிரதீபன்.

''அதற்காகவும், உன் அம்மாவிடம் எங்களுக்காக வேண்டிக்கொள், ஆறுமுகம்'' என்றாள் மானசி.

''கட்டாயமாகத் தங்கம்மா. எனக்கென்ன புள்ளையா, குட்டியா? ஒண்ணுமில்லாம, ஒத்தையா நின்னவனைக் கூப்பிட்டு, பெரியய்யா இந்த வேலையைத் தராட்டி, பட்டினி கிடந்து நான் போன இடம், இன்னைக்கு புல்லு முளைச்சுப் போயிருக்கும். ஒங்களுக்காக இல்லாம, நான் யாருக்காகக் கண்ணுகளா, சாமி கும்பிடப் போறேன்?'' என்று அவன் கண்ணீரைத் துடைக்க, அவனைச் சமாதானப்படுத்தி விட்டு, பிரதீபனும், மானசியும் கிளம்பினர்.

வந்தது போலவே, எந்தப் பக்கமும் பாராமல் விரைந்து வெளியேறியவர்களுக்கு இப்போது குடியிருக்கும் வீட்டுக்கு நேரே செல்ல மனம் வரவில்லை.

செலவு பிடிக்காத இடம் என்று யோசித்து, இருவரும் கடற்கரைக்குச் சென்றனர்.

கடற்காற்று மேலும் இறுக்கத்தைக் குறைத்தது.

''ஆறுமுகம் மாதிரியும், மனிதர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். என்னண்ணா?'' என்றாள் தங்கை, மணலை அளந்தபடி.

''நிறையப் பேர் இருக்கிறார்கள், மனு. நம் வக்கீல் அங்கிள், தொழிற்சாலையில் குமரேசன் என்று ஒரு ஃபோர்மேன், அவரோடு இன்னும் எத்தனையோ பேர்! அவர்களை எல்லாம் பார்க்கும்போது, போராடும் தைரியம் அதிகமாகும்'' என்றான் அண்ணன்.

''ஆமாம், அண்ணா, ஆறுமுகத்தைப் பார்த்த பிறகு, இன்னும் எவ்வளவு கஷ்டப்பட்டாலும், வீட்டை, நம் உரிமையை விட்டுவிடக் கூடாது என்று ரொம்பத் தோன்றுகிறது!'' என்றாள் தங்கையும்.

சிலுசிலுவென்று சிறு தூறல் போடத் தொடங்கவே, இருவரும் எழுந்தனர்.

இப்படியே, எங்காவது வெளியே சாப்பிட்டு விட்டுப் போனால், நன்றாக இருக்குமே என்று தோன்றினாலும், வீட்டில் சாதம் இருக்கும்போது, வெளியே சாப்பிடச் செலவு செய்வது தப்பு என்று முடிவெடுத்து, இருவருமாக வீட்டுக்குத் திரும்பிச் சென்றனர்.

ஆனால், வீடு சேர்ந்த பிறகோ, இருவருக்குமே சாப்பிடப் பிடிக்கவில்லை. பன்னிரண்டு நாட்களாக, இரண்டு வேளை. அதே சாம்பார், அதே பீன்ஸ் அல்லது அது போன்ற காய்க்கூட்டு. வேறு எதுவும் தெரியாதே!

என்னதான், இதுவும் போராட்டத்தின் ஒரு பகுதி என்று பிடிவாதமாகச் சொல்லிக் கொண்டாலும், அன்று, இருவருக்குமே, அந்த உணவு அலுத்துப் போயிருந்தது.

பசி தாங்க முடியாமல் போகிறவரை காத்திருக்கலாம் என்று இருவரும் உட்கார்ந்திருந்தார்கள். பசி, ருசி அறியாது, அல்லவா? எப்படியாவது, உள்ளே போய் விடும்.

அந்த அளவுக்கு எப்போது பசிக்கும் என்று யோசிக் கையில், கதவு தட்டும் ஒலியோடு ''ஹலோ...'' என்று எதிர்வீட்டுச் சின்னப் பெண் வினயாவின் குரலும் கேட்டது.

அவசரமாக எழுந்து போய், மானசி கதவைத் திறந் தால், ஒரு தட்டு நிறைய பஜ்ஜியோடு வினயா நின் றாள், பத்துக்கு மேல், தாராளமாக இருக்கும்!

''உள்ளே வரலாமா?'' என்று சினேகமாய்ச் சிரித்த வாறு, உள்ளே வந்து, ஒரு நாற்காலியின் மேல் தட்டை வைத்தாள். ''அம்மா கொடுக்கச் சொன்னார்கள். இது போல லேசான மழை நேரத்தில் சாப்பிட ரொம்ப நன் றாக இருக்கும். அடடா! சட்டினியை விட்டுவிட்டு வந்து விட்டேனே, ஒரு நிமிஷம்!'' என்று ஓடிப் போனவள், இன்னொரு கிண்ணத்தோடு வேகமாகவே வந்தாள்.

''தேங்காய்ச் சட்னிப்பா. சேர்த்துச் சாப்பிட சூப்பராக இருக்கும். சாப்பிடுங்கள். நாளை பார்ப்போம், பை!'' என்று அவளே பேசி முடித்துவிட்டு ஓடிப் போனாள்.

சட்டென்று சுய உணர்வு வந்தவர்களாக, ''ரொம்பத் தாங்க்ஸ்! ரொம்பத் தாங்க்ஸ்!'' என்று அண்ணனும் தங்கையும் சேர்ந்து கத்தினார்கள்.

கேட்டது என்பதன் அறிகுறியாக, ''வெல்கம்'' என்ற வார்த்தை மட்டும் லேசாகக் கேட்டது!

வியப்பினால் மலர்ந்த விழிகளால், அண்ணனும் தங்கையும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். புன்னகையோடு பஜ்ஜித் தட்டைப் பார்த்தார்கள். அவ்வளவு தான். மடமடவென்று தட்டு காலியாகும் வரை, அங்கே பேச்சுச் சத்தமே கேட்கவில்லை!

மீந்துபோன வீட்டு உணவைப் பத்திரப்படுத்தி வைத்து விட்டுப் படுத்தபோது, இருவரின் வயிறும் மனமும் நிறைந்திருந்தன.

6



மறுநாள் வழியில் பார்த்த அன்னபூரணியிடம் நன்றி சொல்லிவிட்டுச் சென்றான், பிரதீபன்.

கல்லூரி முடிந்து வீடு திரும்பியதும், கழுவி வைத்திருந்த காலிப் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு, மானசி எதிர்வீட்டுக்குச் சென்று, அழைப்பு மணியை அழுத்தினாள்.

கதவைத் திறந்தது வினயாவே.

மானசியைப் பார்த்ததும், அவளுக்கு ஒரே உற்சாகம்! வா, வா, வா!'' என்று ஓடியே போய், சாவியை எடுத்து

வந்து, கிரில் கதவைத் திறந்து, மானசியின் கையைப் பிடித்து அழைத்துச் சென்றாள். ''அம்மா யார் வந்திருக் கிறாள், பாருங்கள்!'' என்று கத்தினாள்.

''ஷ்! கத்திக் கூச்சல் போட்டுப் பாட்டியை எழுப்பி விடாதே!'' என்று அதட்டியபடி வந்த அன்னபூரணி, மானசியைக் கண்டதும், முகம் மலர்ந்தாள் ''வாம்மா, உட்கார். பஜ்ஜி பிடித்ததா?'' என்று பிரியமாக வினவி னாள்.

''ரொம்ப, ரொம்ப ஆன்ட்டி. நட்சத்திர ஹோட்டல் களில் கூட, இதுபோல நான் சாப்பிட்டதில்லை. அவ்வளவு ருசி! ஆன்ட்டி. இதுபோல எதுவும் எனக்குச் செய்யத் தெரியாது. அதனால், வெற்றுப் பாத்திரங் களாகத்தான் கொண்டு வந்தேன்! சாரி ஆன்ட்டி!'' என்று மானசி சொன்னபோது ''ஊகூம், மானசி, எதற்கு 'சாரி' அன்றைக்கு, நட்ட நடு இரவில், உன் அண்ணன் வெளியே போகவில்லையா? என்ன மாதிரி உதவி, அது!'' என்று எடுத்துச் சொன்னவள், திடுமென நினைவு வந்து ''ஏய் வினு, திரும்பக் கிரில் கேட் பூட்டினாயா?'' என்று கேட்க, ''இதோம்மா'' என்று ஓடினாள் அவள்.

''அதற்கும் சேர்த்து நன்றி, ஆன்ட்டி. அண்ணனிடம் சொல்லச் சொன்னீர்களாமே!'' என்றாள் மானசி. ''எனக் குப்...'' பழக்கமில்லை என்று சொல்ல வந்தவள், அதை மாற்றி, ''இதுபோலப் பொல்லாதவர்கள் இருப்பார் கள் என்று, எனக்குத் தெரியாது, ஆன்ட்டி'' என்று முடித்தாள்.

''இருக்கிறார்களம்மா'' என்றாள் பெரியவள் ''அதனால் தான், இவள் அப்பா, பத்திரம் பத்திரம் என்று ரொம்பச்

சொல்லுவார்...'' என்றவளைக் குறுக்கிட்டு, ''சொல்லு வார் இல்லை, திட்டுவார். திட்டுவார், திட்டுவார் திட்டிக் கொண்டே இருப்பார்'' என்றாள் வினயா எரிச்சலாக.

''அப்படியாவது, இந்த மண்டைக்குள் ஏறாதா என்றுதான்'' என்று இலகுவாகச் சிரித்துவிட்டு, ''சொல் லும்மா, என்ன சாப்பிடுகிறாய்? முறுக்கு பிடிக்குமா? அங்கிள் கொண்டு போவதற்காகச் செய்தது'' என்று எழுந்தாள்.

''இல்லை ஆன்ட்டி. இப்போதுதான் சாப்பிட்டேன். அதைவிட, அந்த பஜ்ஜி எப்படிச் செய்வது என்று கற்றுத் தாருங்களேன். சாம்பார் சாதத்துக்குத் தொட்டுக் கொள்ளக் கூட, நன்றாக இருக்கும்போலத் தோன்றியது'' என்றாள் மானசி.

''பஜ்ஜி தெரியாது? காயை வெட்டி, மாவில் முக்கி...'' என்று தலை வால் இல்லாமல் வினயா ஏதோ சொல்லத் தொடங்க, அவள் ஏதோ கிரேக்க பாஷை பேசுவது போல மானசி விழித்தாள்.

மகளை அடக்கி, பஜ்ஜியின் செய்முறையை விளக்க மாகக் கூறத் தொடங்கியபோதுதான், எதிர் வீட்டுப் பெண்ணுக்கு சமையலின் அடிப்படையே தெரியாது என்று, அன்னபூரணிக்கு புரிந்தது.

''ஒரு நாள் செய்து காட்டுகிறேன். அப்போதுதான் புரியும்'' என்று விட்டுப் பாட்டியைப் பார்க்கப் போய்விட, சின்னவர்கள் கலகலப்பாகப் பேசத் தொடங்கினர்.

அன்று தொடங்கிய நட்பு, நெருக்கமாக வளர்ந்து, சில சமயங்களில் ''உன் அண்ணன் வந்துவிட்டான், மானசி''

என்று பாட்டி குரல் கொடுத்து, மானசி வீட்டுக்கு ஓடி வரும் அளவுக்கு தொடர்ந்தது.

அல்லது ''பை, அண்ணா!'' என்றுவிட்டு, வினயா இங்கிருந்து கிளம்புவாள்.

எப்படியோ, தங்கையின் கண்களில் இருந்த வாட்டம் மறைந்தது, பிரதீபனுக்கு ஆறுதலாக இருந்தது. கூடவே இன்னொரு சின்னப் பெண், 'அண்ணன்' உறவு கொண்டாடுவதும், நன்றாகவும் இருந்தது.

அவ்வப்போது மூத்த மகளிடம் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளும் அன்னபூரணி, ஒருநாள் இப்படிச் சொன்னாள் ''மானசியுடைய அப்பா, பிள்ளைகளுக்கு அம்மாவாகவும் இருந்து, சமையல் உட்பட எல்லாமே செய்திருப்பார் போல! சாதாரண அடுப்படி வேலை கூட, இவளுக்கு ஒன்றும் தெரியவில்லை. அவர் போனதும், மலங்க மலங்க முழிக்கிறதுகள்!'' என்றாள் பரிவுடன்.

கூடுதல் கவனத்துடன் ஆராய்ந்த வசுந்தரா, யோசனையாக புருவம் சுருக்கினாள். ''தந்தை யார், என்னவாக இருந்தார் என்று கேட்டீர்களா, அம்மா?'' என்று தாயிடம் வினவினாள்.

''எங்கேம்மா? தகப்பனார் பேச்சை எடுத்தாலே, மானுவுக்குக் கண் கலங்குகிறது. ரொம்ப சமீபத்தில்தான் போயிருப்பார் போல! பாவமாக இருக்கிறது. கண்ணிய மான குடும்பமாகவும் தெரிகிறது. ஒருவழிப் பாதை யாகச் சும்மாச் சும்மா வாங்கிச் சாப்பிட ஒரு மாதிரி இருக் கிறது. அதனால், தப்பாக எடுத்துக் கொள்ளாதீர்கள் என்று, வினுவுக்கு இரண்டு கிளிப், பான்ட் என்று

கொடுத்திருக்கிறாள். அருமையாக இருக்கிறது'' என்றாள் அன்னபூரணி, இன்னமும் கனிவாக.

விலைமதிப்பு அதிகமானதாகவும் என்று, தனக்குள் நினைத்துக் கொண்டாள் பெண். அப்படியானால், தந்தைக்குப் பின் ரொம்ப நிலையிறங்கி விட்டார்களா? அல்லது, அண்ணனுக்குத் தன் பணத்தைச் செலவு செய்ய மனம் இல்லையா? ஆனால், அன்று இரவு, தானாக வந்து உதவி செய்தான்...

வீடு எவ்வளவு சுகமாக மாறியதோ, அதே வேகத்தில் அலுவல் இடத்தில், பிரதீபனுக்குத் தொல்லை மிகுதி யாகிக் கொண்டே போயிற்று.

அவர்களுடைய ஆடிட்டர், தன்னை நியமித்தவர் களுக்காக சந்தோஷமாக இருக்கும் என்றோ, என்னவோ, தினம் ஒன்றைத் தோண்டி எடுத்துக் காட்டிக் கொண் டிருந்தான். வெறும் உப்புச் சப்பற்ற விஷயமாக இருந் தாலும், அது என்னவென்று ஆராய்ந்து பிரதீபன் விளக்கம் சொல்ல வேண்டியிருந்தது. அதில், அவனது நேரம் வீணாயிற்று.

அதேபோல, செலவுக்குப் பணம் நிறைய தர வேண் டும் என்று நச்சரிப்பு வேறு. ஒழுங்கான கணக்கு இல் லாமல், தொழிற்சாலையில் அதுபோலப் பணம் எடுக்க முடியாது என்று, அவர்கள் இருவருக்கும் புரிய வைப்ப தற்குள், பிரதீபனுக்குப் போதும், போதும் என்று ஆகி விட்டது.

அப்போதும், ஞானசகாயமே நேரில் வந்து சொன்ன பிறகுதான், இருவரும் வாயை மூடினார்கள்.

தேவநாதனின் தனிப்பட்ட குறிப்புகள் எதிலும், எதை யுமே கண்டு பிடிக்க முடியாதது, அவருக்கும் ஏமாற்ற மாகத்தான் இருந்தது. ஆனால், நேரடியாக அவரிடம், பிரதீபனைக் கைவிட மாட்டேன் என்று நண்பர் சொன்ன தால், ஏதோ கிடைக்கும் என்பதில், அவர் இன்னமும் நிச்சயமாகவே இருந்தார்.

''நம்பிக்கையை விடாதேப்பா. ஏதோ செய்து வைக் காமல், தேவா அப்படிச் சொல்லியிருக்கவே மாட்டார்'' என்றார்.

''என்னவோ எனக்கு அந்த நம்பிக்கை குறைந்து கொண்டே போகிறது. அங்கிள். கோர்ட்டுக்குப் போவ திலும் பிரச்சினை இருக்கிறது என்கிறீர்கள். கடைசியாக இவர்களிடம் பெரிய அளவில் விட்டுக் கொடுத்துதான், தீர வேண்டியிருக்குமோ என்று பயமாக இருக்கிறது'' என்றான் பிரதீபன் கவலையோடு.

''அப்படியெல்லாம் ஆகாதுப்பா'' என்று அவனுக்கு தைரியம் சொல்லிவிட்டுக் கிளம்பினார் அவர்.

அன்று, பிரதீபனின் படிப்புச் செலவுக் கணக்கை எடுத்துக் கொண்டு, முத்தையன் சகோதரர்கள் வந்து நின்றார்கள்.

''இன்னாப்பா, உன் படிப்புக்கு இத்தினி லட்சம் மச்சான் குடுத்திருக்காரு? ஒன் தங்கச்சிக்கு வேறே! அந்தப் பணம் மூச்சூடும், எங்களுக்கு வந்தாவணும். பாரின் வேறே போய்ப் படிச்சிருக்கிறே! அரைக் கோடி கிட்டே வருதே! ஏதேனும் சொத்து பத்தை வித்தானும், அந்தப் பணத்தை எங்களுக்கு நவுட்டு!'' என்றான் ஒருவன்.

''இல்லாட்டி, உன் பங்குக்கு, அந்தப் பணம் சரியாப் போச்சினு, கையை உதறிக்கினு, வெளியே போயிடு! போயிடு, போயிடு!'' என்று அவசரப்படுத்தினான் அடுத்தவன்.

''ஏ...ய்!'' என்று கோபாவேசமாக நிமிர்ந்தான் பிரதீபன். ''என் அப்பா, என் படிப்புக்குச் செய்த செலவைப் பற்றி, இங்கே யாரும் ஒரு வார்த்தை பேசினால், தொலைத்துக் கட்டி விடுவேன்! யார் இடத்தில் வந்து நின்று கொண்டு, யார், யாரை வெளியே போகச் சொல்வது? ஏதோ, அப்பா எழுதி வைத்திருக்கிறாரே என்று, அதற்கு மரியாதை கொடுத்து உள்ளே விட்டால், வாய் ரொம்பத் தான் நீளுகிறது? ஓட, ஓட, விரட்டியடித்து விடுவேன். ஜாக்கிரதை!'' என்று உறுமினான்.

பிரதீபனிடம் இந்தக் கோபத்தை எதிர்பார்த்திராத எதிரணி, பிரமித்து, விழித்தது!

சின்னப் பையன் என்று நினைத்தவனின் உயரமும், உடல் கட்டும் அச்சுறுத்தும் விதமாகத் தோற்றமளித்தன.

ஆடிட்டர் பின்னணியில் ஒதுங்கினார்.

ஆனால், அவர்களும் லேசுப்பட்டவர்கள் இல்லையே!

ஒருவாறு திகைப்பைச் சமாளித்து, ''எப்படியும், உரிமைக்கார மச்சான் எங்களுக்கு எழுதிக் கொடுத்திட்டார்தானே? அப்ப, எங்களுக்குத்தானே சொந்தம். அப்புறம் நீ என்ன எங்களை விரட்டுறது? நீதானே, ஓடணும்!'' என்றான் முத்தையன் கோபமும், பயமுமாக.

போலீஸ், கோர்ட் என்றால், அவர்கள் தயங்கியது நினைவு வர, ''உயிலே செல்லாது என்று கேஸ் போடு வேன். அப்பாவைப் பயமுறுத்திக் கட்டாயப்படுத்தி எழுதி வாங்கியதாகப் போலீசில் புகார் கொடுப்பேன்...'' என்று மிரட்டினான், பிரதீபன்.

சகோதரர்கள் அயர்ந்து நிற்க, ஆடிட்டர், பின்னிருந்து, அவர்கள் காதில் ஏதோ ஓதினான்.

உடனே முகம் மலர, ''தம்பி, இந்த மிரட்டலுக்கு, இனிமே வேறே ஆளைப்பாரு! கேசு போடுவாராமில்லே! கேசு போட்டா, நீயுந்தானே, வெளிலே போவணும்? ஒனக்குந்தான் ஒரு பைசா கைக்கு வராது! பட்டினி! தங்கச்சியும், நீயும் பட்டினி!'' என்றான் ஏளனமாக.

''நானோ, தங்கையோ, ஏன் பட்டினி கிடக்கப் போகி றோம்? என் படிப்புக்கு இன்றைக்கு வெளியே போனா லும், மாதம் அரை லட்சத்துக்கு வேலை உடனே கிடைக் கும்! இங்கே சம்பளமாக எடுப்பதைவிட அது எவ் வளவோ அதிகம். ராஜா மாதிரி வாழ்வேன். அத்தோடு, கேசையும் நடத்திக் குறைந்தது, இருபது வருஷம் இழுத்தடிப்பேன். எந்தக் காலத்திலும், ஒரு பைசாவைக் கூட, நீங்கள் தொட முடியாது!'' என்றான் பிரதீபன், கடுமையான குரலில்.

அவர்கள் வாயை மூடச் சொன்னதுதான். ஆனால், இவர்கள் கையில் கொடுப்பதற்கு. வீடும், தொழிற் சாலையும் பூட்டிக் கிடந்தாலும் பரவாயில்லை என்று, அவனுக்குமே மனதில் தோன்றத் தொடங்கி விட்டது.

நடக்கக்கூடியதே என்று உணர்ந்த ஆடிட்டர் வாயை மூடிக் கொள்ள, மூவருமாகப் பின் வாங்கிச் சென்றனர்.

தற்காலிக வெற்றிதான். சீக்கிரமே, இன்னும் எதை யாவது கண்டு பிடித்து, எடுத்து வருவார்கள்! அதற்குள் ஏதாவது கிடைக்குமானால்...

அத்தனை முறை கம்ப்யூட்டரை நோண்டினாலும், இரண்டு ஆண்டுகளாக எடுத்த பெரிய தொகைகள் தவிர, வேறு எதையும், அது சொல்ல மறுத்தது.

அந்தப் பணமும், அந்தப் பெண்ணுக்குச் சில நல்ல நகைகள் வாங்கினால், செலவாகியிருக்கக் கூடிய தொகையே! ஆனால் ஆறு ஆண்டுப் பழக்கத்தில், கடைசி இரண்டு ஆண்டுகளில் மட்டுமே விலை உயர்ந்த நகைகள் வாங்கியதுதான் சற்று விசித்திரமாக இருந்தது.

கூடவே, தரமற்ற இருவரின் முன்னிலையில், மக னிடம் மன்னிப்பை வேண்டி எழுதியதையும் விசித் திரத்தோடும் சேர்த்துக் கொள்ளலாம்.

ஆனால், உயிராக வளர்த்த மகன், மகளுக்கு எதுவுமே இல்லாமல் செய்ததோடு ஒப்பிட்டால், இந்த இரண்டு வித்தியாசங்களுமே, ஒன்றுமே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்!

அன்று வீட்டுக்குப் போனால், எதிர் வீட்டில், காச்பூச் சென்று ஒரே சத்தம்.

கண்களை வட்டமாக விரித்து, 'வினயாவுக்கும், அவள் அக்காவுக்கும் ஒரே சண்டை, அண்ணா. வசுக்கா வின் 'டியோ'வை, அவளிடம் சொல்லாமலே, வினு

எடுத்துப் போய் விட்டாளாம். வேலை முடிந்து வந்ததில் இருந்து, அக்கா, ஒரே திட்டு! ஆன்ட்டி சொன்னால்கூட, இரண்டு பேரும் விட மாட்டேன் என்கிறார்கள்!'' என்று மானசி விவரம் தெரிவித்தாள்.

''நீ யார் கட்சி?'' என்று டவலை எடுத்தவாறே, தமையன் வினவினான்.

''அக்கா பக்கம் நியாயம் இருக்கிறது. ஆனால் வினு அழுதுவிடக் கூடாதே என்று கவலையாக இருக்கிறது'' என்றாள் தங்கை.

''இதைத்தான் கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்று முன் காலத்தில் சொல்வார்கள்'' என்று விட்டுக் குளிக்கப் போனான் அண்ணன்.

வேலை முடிந்து வந்தால், கட்டாயம் குளித்தாக வேண்டும், அவனுக்கு.

குளித்துவிட்டு வரும்போதும், யுத்தம் தொடர்ந்து நடந்தது. ''அக்கம் பக்கம் பற்றிய நினைப்பு, அவளுக்கு வேண்டாமா? இருந்தால், என் பையில் இருந்து, என்னிடம் கேட்காமல் எடுப்பாளா? கடைசி மணி நேரத் தில், எங்களுக்கு இன்று 'மீட்டிங்' அழுது வடியாமல், கொஞ்சம் புத்துணர்ச்சியோடு போகலாம் என்று பார்த்தால், கைப்பையில் என் டியோ இல்லை! எனக்கு எப்படி இருந்திருக்கும்? இதையெல்லாம் எவளிடமாவது கடன் வாங்க முடியுமா? 'பே' என்று நிற்கும்போது, எனக்கு எப்படி இருக்கும்?'' என்று பெரியவள் வசுந்தரா பொரிந்து கொண்டிருந்தாள்.

சத்தம் வேண்டாம் என்பதற்காகத் தாயிடம் என்பது புரிந்தது.

''நம்ம தங்கை என்கிற பாசம் கொஞ்சமேனும் இருக்கும் என்று எடுத்துவிட்டேன். எதிர் வீட்டு அண்ணனைப் பார்! தங்கைக்காக உயிரைக் கூட விடுவார். இந்த மாதிரி ஒரு டியோவுக்காகத் தங்கையைப் பேயோட்ட மாட்டார்'' என்றாள் சின்னவள்.

தன்னிடம் நியாயம் இல்லை என்பதால், வியாபார 'சென்டிமென்டை' இழுக்கிறாள் என்பது புரிந்தது.

முன் விளக்கு, முன்னறை விளக்குகளை அணைத்து விட்டு வந்தான் பிரதீபன்.

''சமையல் அறையிலேயே சாப்பிடலாம், மனு. இந்தச் சண்டையில், நாம் மாட்டிக் கொள்ளக் கூடாது'' என்றான் தங்கையிடம்.

''ஏய், போதுமடி. உங்கள் சண்டை. இன்னும் கத்தி பாட்டியைத் தூங்கவிடாமல் கெடுக்காதீர்கள்!'' என்று அன்னபூரணி அதட்டிய பிறகே, அந்த வீட்டில், ஒரு வழியாகச் சத்தம் நின்றது.

மறுநாள் காலையிலும் கேட்ட சத்தம், மாலையில் இருக்கவில்லை.

நல்லவேளை, சண்டை தீர்ந்தது என்று எண்ணிய வாறே, கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றால், சண்டைக்காரியே, அங்கேதான் இருந்தாள்.

''நான் இனிமேல், அந்தப் பிசாசு இருக்கும் வீட்டுக்குப் போகப் போவதே இல்லை, மானு. உன் வீட்டிலேயேதான் இருக்கப் போகிறேன்'' என்று சொல்லிக் கொண்டு!

பிசாசு?

என் அக்கா 'ரேங்க்' வாங்கிப் பாஸ் பண்ணியவள், ரொம்பக் கெட்டிக்காரி! அக்கா படிக்கும்போதே, கல்லூரி அழகி அவள்தான்! வேலைக்கு வா, வேலைக்கு வா என்று என் அக்காவை இரண்டு நிறுவனங்களில் கெஞ்சிக் கேட்டு, அதில் நல்ல நிறுவனம் பார்த்துச் சேர்ந்தாள்!

இப்படிப் புகழ் பாடியவள், இப்போது ஒரு சின்ன சச்சரவில், பிசாசாமா?

உள்ளூர நகைத்தபடி, மீண்டும் முன்னறைக்குச் சென்று, தான் வந்து விட்டதைக் காட்டிக் கொண்டான் பிரதீபன்.

''வாங்கண்ணா, வாங்கண்ணா!'' என்று உற்சாகமாக வினயா வரவேற்க, கண்களில் சிறு கெஞ்சலுடன் பார்த் தாள், மானசி.

இனி என்ன செய்வது? வினயாவிடம் முறுவலித்து ''சாப்பிட்டாயாம்மா? இல்லையென்றால், இதோ, நான் குளித்துவிட்டு வந்ததும், நாம் மூவரும் சேர்ந்து சாப்பிட லாம்'' என்று அழைத்தான்.

மூடியிருந்த பாத்திரங்களைத் திறந்து பார்த்த வினயா வின் முகம் சற்றே வாடியது.

''சாம்பாரும் பீன்சுமா? எங்கள் வீட்டில், சப்பாத்தி, குருமா, அம்மாவின் குருமா சூப்பராக இருக்கும்! ஆனால், இனிமேல் அதையெல்லாம் முழுதாக, அவளே கொட் டிக் கொள்ளட்டும்'' என்றாள் சினத்தோடு!

எதிர் வீட்டில் உணவருந்தப் போகிறார்கள் என்று உணர்ந்த, அன்னபூரணி வெளியில் இருந்து மகளைக் கூப்பிட்டாள்.

''வினும்மா, சீக்கிரமாக வாம்மா. அவர்கள் சாப்பிடட்டும்'' என்று அழைத்தாள்.

''வர முடியாது!'' என்று முழங்கினாள், சின்ன மகள்.

பெரியவளின் குரல் கேட்டு எழுந்து போய் ''உள்ளே வாருங்கள், ஆன்ட்டி'' என்றான் பிரதீபன்.

''வினு.. சொன்னால் கேள். இரவாகிறது. வீட்டுக்கு வா'' என்றாள் அன்னபூரணி.

''நான்தான், அங்கே வர மாட்டேன் என்றேனே! அப்புறம் என்ன?'' என்று, மானசியின் உள்புற அறையிலிருந்தே கத்தினாள் வினயா.

பிரதீபனைப் பார்த்துச் சங்கடமாக முறுவலித்து ''இரண்டும் கெட்டான்'' என்றாள், மெதுவாக. ''தன்னாலும் புரியாது, சொன்னாலும் கேட்காது.''

''அங்கே, அண்ணனிடம் என்ன வத்தி வைப்பு?'' என்று அவசரமாக வெளியே வந்தாள் வினயா. ''அண்ணா, நீங்கள் சொல்லுங்கள். நான் இங்கேயே இருக்கலாம்தானே?'' என்று அவனிடம் நேரடியாகக் கேட்டாள்.

''ஷ் வினு. என்ன பேச்சு இது?'' என்ற தாயை, அவள் சட்டை பண்ணவே இல்லை.

''நீங்கள் சொல்லுங்கள், அண்ணா. இருக்கட்டுமா?'' என்று அதிலேயே நின்றாள் வினயா.

சிக்கலற்ற மனது. என் தோழியுடைய அண்ணன், எனக்கும் அண்ணன் அவ்வளவுதான். அவனுக்குமே, அப்படியோர் உணர்வு, அப்போது தோன்றத்தான் செய்தது.

ஆனால், பார்க்கிறவர்கள் அப்படி எண்ண மாட்டார்கள்! அவள் இங்கே தங்கினாள் என்று தெரிந்தால், அவளுடைய தந்தை, அவளை மட்டுமல்ல, குடும்பத்தையே கூறு போட்டு விடுவார்!

சிறு முறுவலுடன் நோக்கி ''அண்ணனின் பேச்சை விட, அம்மாவின் பேச்சைத்தான் பெண்கள் கேட்க வேண்டும் என்பார்கள்'' என்றான் பொதுவாக.

''அது என்ன ஆண், பெண் என்று?'' என்று ஆட்சேபித்தாள் வினயா.

''ஆமாம்மா. உனக்குத்தானே, அம்மா இருக்கிறார்கள்? இருக்கிறபோது, அவர்கள் சொல்வதை மதிக்க வேண்டாமா? நாங்கள் ஆசைப்பட்டாலும், கிடைக்காதது, கடவுள் அருளால் உனக்குக் கிடைத்திருக்கிறது எனும்போது...''

காரண காரியத்தை விட, வினயா சென்டிமென்டைப் பெரிதாக நினைக்கிறவள். அதை உணர்ந்து, பிரதீபன் 'அம்மா'வைப் பயன்படுத்த, அவளும் தாயிடம் ஓடினாள்.

ஆனால், அக்காவோடு தகராறு தொடரவே, முடிந்த அளவு நேரம், மானசியுடனேயே கழித்தாள்.

அதாவது, முதலில் மானசி அவர்கள் வீட்டுக்கு ஓடியது போல, இப்போது வினயா, இவர்கள் வீட்டுக்கு ஓடி வந்தாள்.

உடல்நிலை சற்றுக் குணமாகப் பழைய இடத்தில் உட்காரத் தொடங்கிய பாட்டியும், இதைத் தடுக்காமல் விட்டுவிடவே, இது இயல்பாகத் தொடர்ந்தது.

அன்று இப்படி வீடு வந்து சேர்ந்த பிரதீபனைத் தேடி, வினயா வந்து நின்றாள்.

''அண்ணா, நான் பி.எஸ்ஸி. படிப்போடு சேர்ந்து, எம்பிஏ. நுழைவுத் தேர்வுக்கும் படித்துக் கொண்டிருக் கிறேன் தெரியுமா?'' என்று அறிவித்தாள்.

''தெரியாது, ஆனால் ரொம்ப சந்தோஷம்'' என்றான் பிரதீபன்.

''என்ன சந்தோஷம் போங்கள்! எனக்கும், எம்பி.ஏ. யில் அக்கா மாதிரி சிறப்பாகப் பாஸ் பண்ண ரொம்ப ஆசை. ஆனால், சில பாடம் சரியாகத் தெரியவில்லை. நீங்கள் கொஞ்சம் கற்றுத்தர முடியுமா?'' என்று கெஞ்ச லாகக் கேட்டாள்.

பாடம் கற்றுக் கொடுப்பதில் என்ன? அதிலும், வினயா படிப்பில் கெட்டிக்காரிதான். மானசிக்கும், இந்த உதவி, அவ்வப்போது அவன் செய்வதுதான்.

''ஓகேம்மா. ஆனால், தப்பாகப் பதில் சொன்னால் குட்டு வாங்கிக் கொள்ள வேண்டும். ஒரு தப்புக்கு, ஒரு குட்டு, சம்மதமா?'' என்று அவன் நிபந்தனை விதிக்க, சிரித்தவாறே ஓடிப்போய் பாடத்தை எடுத்து வந்தாள் அவள்.

ஓரளவு பாடங்களை, வினயா ஏற்கனவே படித்து முடித்திருந்தாள். ஆர்வமும் இருக்கவே, அவளுக் குக் கற்றுக் கொடுப்பது, பிரதீபனுக்கு எளிதாகவே இருந்தது.

அவளுக்கே நிறையத் தெரிவது பற்றிப் பிரதீபன் வியந்து கூறவும் விவரம் வெளியே வந்தது.

''எல்லாம் சண்டைக்கு முன்னே, எங்கள் வீட்டு ஒட்டடைக்குச்சி சொல்லிக் கொடுத்ததுதான்! இப்போது, நான் போய்க் காலில் விழுந்து கெஞ்ச வேண்டும் என்று கருங்கல் அசையாமல், உட்கார்ந்து போஸ் கொடுக்கிறது!'' என்றாள் வினயா, ஆத்திரத்துடன்.

''நான் எதற்கு, அவள் காலில் போய் விழவேண்டும்? எனக்குப் பாடம் சொல்லித்தர ஆளா இல்லை? என் னண்ணா?'' என்று வேறு, அவள் கேட்கவும், ஏதோ உள் நாட்டுப் போரில், அறியாமல் தலையிட்டு விட்டோமோ என்ற எண்ணம், அவனுக்கு வந்தது.

அத்தோடும் நில்லாமல், அன்றிரவு வீட்டுக்குச் செல் லும்போது ''சில பேர் அண்ணன் தங்கையுடைய சினே கிதிக்கே பாடம் கற்றுக் கொடுக்கிறார்கள். சில பொல் லாத பிசாசுகளானால், சொந்தத் தங்கையையே கண்டு கொள்வதில்லை'' என்று அவள் உரக்கச் சொன்னது, பிரதீபன் காதிலும் தெளிவாக விழுந்தது.

''அண்ணா, அந்த அக்கா கற்றுக் கொடுக்கத் தயார் தான். வினுவுக்குத்தான் பிடிக்கவில்லை! இதற்கு மட்டும் வேண்டுமா என்று, அக்கா ஏதாவது சொல்லிக் காட்டு வாளோ என்று பயம்'' என்றாள் மானசி மெல்லிய குரலில்.

மறுநாள் காலையில், சின்னப் பெண்கள் இருவரும் கல்லூரிக்குக் கிளம்பிச் சென்றபின், தானும் தயாராகி வீட்டைப் பூட்டிய பிரதீபன், நேர் எதிர் வீட்டுக்குச் சென் றான்.

பாட்டியைப் பார்க்க, வரும்போது ஏதேனும் வாங்கி வரவா என்று கேட்க என்று, அவ்வப்போது அவன் அங்கே செல்வதுதான்.

இந்த முறை அவனுக்கு வேறு காரணம் இருந்தது.

ஏற்கனவே, வசுந்தராவோடு, பிரதீபனுக்கு ஒரு பிரச்சினை இருந்தது. அதற்கு, அவளிடம் மன்னிப்புக் கேட்க வேண்டிய நிலைதான்.

ஆனால், அதற்கான விளக்கத்தைச் சொல்லாமல், சும்மா மொட்டையாக மன்னிக்கும்படி கேட்க முடியாது. அன்றைய உயர்நிலை பற்றி, இங்கு யாரும் அறிவது, அவனுக்குப் பிடிக்கவில்லை. இன்று இறங்கி நிற்கும் காரணம் பற்றிச் சொல்வதை, அவனால் எண்ணிப் பார்க்கக்கூட, முடியவில்லை. எனவே, அந்தப் பிரச்சினை, அவர்களுக்கு இடையே, ஓர் அகழியாக அப்படியே இருந்தது.

பாட்டிக்காக, அன்று இரவில் மருந்து வாங்கி வந்த சம்பவத்துக்குப் [illegible]கு, அதில் ஒரு சிறு மாற்றம். மற்ற வர்கள் அளவு கலகலப்பாக இல்லை என்றாலும், வசுந்த ராவும் ஓரிரு வார்த்தைகள் அவனோடு பேசத் தொடங்கி இருந்தாள்.

இப்போது, அதில் மீண்டும் பின்னடைவு ஏற்படுவது, பிரதீபனுக்குப் பிடிக்கவில்லை.

எனவே, பாட்டியின் அருகே நின்று "... மூச்சு இரைப் பினால் தூங்க முடிவதில்லை என்பதை ஞாபகமாக..." என்று முதியவளிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்த வசுந்தராவை, அவனைப் பார்த்ததும், பேச்சை நிறுத்தி, "என்ன?" என்று கேட்டாள்.

அவளது கேள்விக்குப் பிரதீபன் பதில் சொல்லுமுன், "வசுமா, வீட்டுச் சாவியை எடுத்துக் கொண்டாயா? டாக்டரிடம் கூட்டமாக இருந்தால், நாங்கள் வர நேர மாகும்" என்று அன்னபூரணியின் குரல் கேட்டது.

சற்றுமுன், இதேபோலச் சொல்லி, கிளம்பிப் படி யிறங்கத் தொடங்கிவிட்ட வினயாவை நிறுத்தி, அவ ளிடம் அன்னபூரணி ஒரு சாவியைக் கொடுப்பதை, பிரதீபன் பார்த்திருந்தான், எனவே "உடம்புக்கு என்ன பாட்டி?" என்று அவளிடமே கேட்டான்.

"எனக்கென்னப்பா? வழக்கம் போலத்தான், வயது! அதைவிடு வெளியே கிளம்பிய பிள்ளை, நீ இங்கே வந் திருக்கிறாயே! ஏதேனும் சொல்ல வேண்டுமாப்பா?" என்று பிரியமாகக் கேட்டாள்.

"அது..." என்று வசுந்தராவைப் பார்த்த பிரதீபன், நேரடியாக விஷயத்துக்கு வந்தான்.

"வினயாவுக்கு, நான் பாடம் கற்றுக் கொடுத்தால், ஏதும் பிரச்சினையா? அப்படி ஏதும் இருந்தால், சாரி" என்றான்.

மறுப்போ, மகிழ்ச்சியோ காட்டாத வழக்கமான முறை யிலேயே, அவள் இப்போதும் பதில் சொன்னாள் "பிரச் சினை என்றெல்லாம் எதுவும் இல்லையே. விட்டு

விடாமல், ஏதோ படிக்கிறாள் என்பதில், எனக்கு நிம்மதி தான், தாங்க்ஸ்'' என்றாள் அவள்.

அவனும் நிம்மதியுற்று, சின்னவளின் படிப்பு பற்றித் தெரிவித்தான் ''க்வாண்ட்ஸ்'' நன்றாகப் புரிந்து கொள் கிறாள். உங்கள் முயற்சி போல'' என்றான்.

''வினுவுக்கு, முதலில் இருந்தே, 'க்வாண்ட்ஸ்' பிடிக்கும். 'டேட்டா ஸம்ப்பிஷியன்சி' தான் அவளுக்கு தகராறு'' என்றாள் வசுந்தரா, சிறு கவலையோடு.

''கவலை வேண்டாம். எனக்கு அது, மிக நன்றாக வரும். வினுவையும் புரிந்து, விரும்பிப் படிக்க வைத்து விடுகிறேன்'' என்று உறுதியளித்தான் அவன்.

கீற்றுப் போலச் சிக்கனமாக ஒரு சிறு புன்னகை செய்து ''ரொம்பத் தாங்க்ஸ்'' என்றாள் அவள்.

அழகான பற்கள்தான். இன்னும் கொஞ்சம் அதிக மாகவே சிரிக்கலாமே என்று எண்ணியவாறே, பெண்கள் மூவரிடமும் விடை பெற்றான், பிரதீபன்.

விடை கொடுத்தபோது, பாட்டி இன்னும் ஏதோ சொன் னது சரியாகக் காதில் விழாததால், அவளது சாய்வு நாற் காலியின் பிடியில் கை வைத்துக் குனிந்து, ''என்ன பாட்டி?'' என்று வினவினான்.

வசுந்தரா யோசனையோடு அவன் கையைப் பார்த் திருக்க, பெரியவள் சொன்ன பதிலில் நெகிழ்ந்து, ''சரி பாட்டி. இனி நான் கவனித்துக் கொள்கிறேன், பாட்டி வரட்டுமா?'' என்று முதியவளின் கையைப் பற்றி, லேசாக அழுத்திவிட்டுக் கிளம்பினான், அவன்.

நெகிழ்ச்சிதான். ''வந்ததற்கு, இரண்டு பேரும் மெலிந்திருக்கிறீர்கள். நன்றாகச் சாப்பிடுங்கள்'' என்று ஒருவர் கவனித்துச் சொல்வதென்றால்... அப்படி அக்கறையோடு சொல்ல யாருமே இல்லாத தனிமை நிலையில், அது எவ்வளவு பெரிய விஷயம்!

உள்ளூர ஓர் இலகுத் தன்மையோடு, தொழிற் சாலைக்கு வந்து சேர்ந்தால், அவன், தனியாகத் தொழி லைப் பார்க்கத் தொடங்கிய பின் முதல் முறையாக தொழிலாளர் பிரச்சினையை சந்திக்க வேண்டியதாயிற்று. ஏதேதோ கோஷங்களை எழுப்பியவாறு, தொழிலாளர்கள் வெளி வாயிலை அடைத்து நின்றார்கள்.

பிரதீபன் பந்தாவாகக் காரில் வந்து இறங்கியிருந்தால் என்ன ஆகியிருக்குமோ? பஸ்சிலிருந்து இறங்கி, ஆளோடு ஆளாக, மெல்ல முன்னேறி, அவன் தொழிற் சாலைக்குள் செல்வதை, யாரும் கவனிக்கவில்லை.

உள்ளே சென்று, நிர்வாகியை அழைத்துக் கேட்டான்.

''நல்லவேளை சார், உள்ளே வந்து விட்டீர்களே. உங்களைக் காரோடு, வெளியே வைத்து முற்றுகையிடப் போவதாகப் பேச்சு இருக்கிறதாம்'' என்றார் அவர்.

''காரோடா? தொழிற்சாலைக்கு நான் எப்படி வரு கிறேன் என்று கூடத் தெரியாமல், அவர்கள் புது ஆட் களா?'' என்று கேட்டான் பிரதீபன்.

''அ... அப்படியும் சொல்லலாம், சார். சீக்கிரமே. நீங்களும் வந்து தொழிலைப் பார்க்கப் போகிறீர்கள். அப்பா, பிள்ளை இரண்டு பேருக்கு வேலை வேண்டும் என்று, நாலு மாதம் முன்பு தொழிலை விஸ்தரித்து,

வேலைக்கு நிறையப் புது ஆட்களையும் எடுத்தார். பழைய ஆட்கள் மாதிரி, அவ்வளவாகத் தொழிலில் ஈடுபாடு கிடையாது, விசுவாசமும் இல்லை. பெரும் பாலும், அவர்கள்தான் கூச்சல் போடுவது'' என்றார் நிர்வாகி.

பிரதீபனின் மனம் எங்கோ போயிற்று.

நாலு மாதங்களுக்கு முன்பாக, மகனோடு சேர்ந்து தொழிலைப் பார்ப்பதற்காக ஏற்பாடுகள் செய்தவர், அடுத்த மூன்றே மாதங்களில், அந்த மகனுக்கு ஒன்றுமே கிடையாது என்று, எப்படி எழுதுவார்?

இருக்காது, நிச்சயமாக. இதில் ஏதோ மர்மம் இருக் கிறது! ஆனால், அந்த 'மன்னிக்க வேண்டுகிறேன்' உயில் உண்மையாக இருந்தால்தானே, மகனிடம் மன் னிப்பை வேண்டத் தோன்றும்? அல்லது...

இவைகளுக்கான விளக்கம், அவனுக்கு என்றேனும் கிடைக்குமா?

பிரச்சினையைச் சமாளிப்பது பற்றி.. அவன் தீவிரமாக யோசிப்பதாக எண்ணிய நிர்வாகி, லேசாகத் தொண் டையைச் செறுமி, ''சார், அந்தப் புது ஆட்கள் இருவரும், ஒரு வாரமாகத் தொழிலாளர்களிடையே சுற்றியதாக, ஃபோர்மேன் சொன்னான், சார்'' என்றார் அவர்.

பிரதீபனும், அதை ஓரோர் சமயம் பார்த்திருக்கிறான். ஆனால், அது பற்றி அவன் பெரிதாக நினைக்கவில்லை. அன்று கோர்ட், கேஸ் என்று மிரட்டியதற்குப் பழி வாங்கும் வாய்ப்புக்காக அலைகிறார்கள். இவர்களை ஏதாவது கேள்வி கேட்டால், உயில் பேச்சை எடுத்து,

நாங்கள்தான் உரிமைக்காரர்கள் என்று, தொழிலாளர்கள் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் செய்து அவனை அசிங்கப்படுத்த முயற்சிப்பார்கள் என்று கருதி, கவனியாதவன் போல இருந்து விட்டான்.

ஆனால், அவர்களது திட்டம் வேறாக இருந்திருக்கிறது.

பிரதீபன் ஃபோர்மேனைக் கூப்பிட்டுப் பேசினான்.

பெரிய ஆர்டரை முடிக்கிற நேரம். இந்த சமயத்தில் நீங்கள் என்ன கேட்டாலும், முதலாளி தந்துதானே, தீரணும். கிடைத்த வாய்ப்பை விடக்கூடாது என்பது, வெளியே நிற்பவர்களின் ஓதுதலாம்.

''புது ஆளுங்க ரெண்டு பேர, ரூம்பு கொடுத்து வச்சிருக்கீங்களே, அவங்கதான்யா, உள்ளே வந்து, அந்தப் பசங்களை இப்படிக் கரைச்சது. நம்ம பசங்க வந்து மெள்ளக் கேட்டானுங்க. பன்னண்டு வருசமா, நம் மளைத் தாயா, புள்ளையா, அப்பாரு பார்த்தாரு. இப்ப சின்னவரும், அப்படித்தான். இப்படி கடைசி நேரத்துல, கழுத்தில கத்திய வச்சுக் கேட்டா, நாளைக்கு நம்மள, எப்படிப்பா நம்புவாங்கன்னு, சொன்னேன். பளைய ஆளுங்கல்லாம் சேர மாட்டோமின்னிட்டோம். புது ஆளுங்களிலே கூட சில பேர் போவலைய்யா'' என்றார் குமரேசு.

சற்று யோசித்து, ''இந்த வேலையை, இருக்கும் மற்ற ஆட்களை வைத்து, குறித்த நாளில் முடிக்க முடியுமா, குமரேசு?'' என்று கேட்டான் பிரதீபன்.

''சும்மான்னா, கஷ்டம் சார். ஆனா சில நாள் நைட் டியூட்டி செய்தா, முடிக்கலாம்'' என்றார் குமரேசு. ''ஆனா,

அதுக்கு மின்னாலே, நீங்க நம்ம லேபர் லீடருங்க கிட்டே, ஒரு தரம் பேசிக்குங்க, முதலாளி!'' என்று விட்டுப் போனார் ஃபோர்மேன்.

அவரது ஆலோசனை, பிரதீபனுக்கு உதவியாக இருந்தது.

ஒழுங்காக வேலையைச் செய்ய வருமாறு, வெளியே நின்றவர்களுக்கு ஒருதரம் அழைப்பு விடுத்தான்.

பிறகு லேபர் லீடர்களைச் சந்தித்துப் பேசினான்.

பெரும்பான்மைத் தொழிலாளர்கள், நிர்வாகத்தின் பக்கம் என்று தெரிந்ததுமே, தொழிலாளர்கள் தலைவர்களின் சுதி இறங்கி விட்டது. அதிலும், தகராறு செய்கிறவர்களில் நிறைய பேர், வேலையில் சேர்ந்து மூன்று மாதங்கள் கூட, ஆகவில்லை என்பதும், அவர்களது ஆர்வம், அடியோடு மறைந்து கிளம்பி விட்டார்கள்.

செக்யூரிட்டி குழுவுடைய தலைவரைக் கூப்பிட்டு, அவரிடமும் பேசினான்.

வெளியே நின்றவர்களுக்கு, பிரதீபன் மறுபடியும் அழைப்பு விடுத்தான். கண்டிப்புடன் கூடிய அழைப்பு, வந்து வேலையைச் செய்யாவிட்டால், பின் விளைவுகளுக்கு, அவர்களே பொறுப்பு என்றான்.

அவன் கொடுத்த பத்து நிமிஷ அவகாசத்தில், இன்னும் கொஞ்ச பேர், உள்ளே வந்தார்கள்.

அதன்பின், தொழிற்சாலைக் கதவை இழுத்துப் பூட்டி விட்டு, இரு செக்யூரிட்டி ஆட்கள் பாதுகாவலுக்கு நின்றார்கள்.

கடைசியாக உள்ளே வந்தவர்களை அழைத்து ''நீங்கள் என்ன காரணத்துக்காக வெளியே போனீர்கள். இப்போது ஏன் வந்தீர்கள் என்று நான் விவரம் கேட்கப் போவது இல்லை. ஆனால் ஒழுங்காக வேலை செய்யா விட்டாலோ நிறுவனப் பொருட்களுக்கு ஏதாவது சேதம் செய்தாலோ, நான் சும்மா விட மாட்டேன், ஜாக்கிரதை!'' என்று எச்சரித்து, அவர்களை வேலை செய்ய அனுமதித்தான்.

அங்கே இங்கே நின்று, நடப்பதைக் கவனியாதது போலக் கவனித்த மூவர் குழு, முகம் கறுக்கப் பின் வாங்கி, அவர்களுக்கான அறைக்குள் சென்று முடங்குவதைக் காண, பிரதீபனுக்கு ஆறுதலாக இருந்தது.

ஆனால், முழுமையான நிம்மதி அல்ல. அந்த மூவரும், இத்தோடு சும்மா இருந்து விட மாட்டார்கள்.

வெட்ட வெட்டத் துளிர்க்கும் களைச் செடி மாதிரி. அவர்களது கிரிமினல் மூளை, இன்னும் எதையாவது கண்டு பிடித்துக் கொண்டே இருக்கும், அவன்தான், விழிப்புடன் இருந்து சமாளித்தாக வேண்டும்.

''இன்றைக்கு ஒரு காரம் செய்யப் போகிறேன், சூடாக சாப்பிட்டால், சுவையாக இருக்கும். சாயங்காலம் சீக்கிரமே வாண்ணா!'' என்று சொல்லி அனுப்பியிருந்தாள் செல்லத் தங்கை.

''இரவெல்லாம் விழித்திருந்து டெஸ்டுக்குப் படித்து விட்டு, இது வேறு ஏனம்மா?'' என்று கரிசனம் காட்டினான், அண்ணன்.

சந்தேகமாகப் பார்த்தாள், தங்கை ''ஏண்ணா, நான் செய்வது நன்றாயிராது என்கிற நிச்சயமா? அத

னால்தான் செய்ய வேண்டாம் என்று, என்னைத் தடுக்கிறாயா?'' என்று நிதானமாகக் கேட்டாள்.

அம்பேல் என்று கைகளை உயர்த்தினான் பிரதீபன். ''நீ இவ்வளவு சொன்ன மட்டும், நீ சொன்னது தவறு! என்று நிரூபிப்பதற்காகவேனும் இன்று மாலையில், நான் சிற்றுண்டி சாப்பிட வரப் போகிறேன், பார்.''

''வந்து பாரேன், என் திறமையை!'' என்று சவால் விட்டிருந்தாள் மானசியும்.

அன்புத் தங்கையை உற்சாகப்படுத்துவதற்காக, ஒரே ஒரு நாள், கொஞ்சம் சீக்கிரமாக வீட்டுக்குப் போவதில், தப்பே கிடையாதுதானே?

இப்படி எண்ணி, வழக்கத்தைவிட, முக்கால் மணி நேரம் முன்னதாக, வீட்டுக்கு வந்து சேர்ந்தால், ''ஏய் வினு. மானசி... கதவைத் திறங்கள்!'' என்று அவன் வீட்டு கிரில் கேட் முன்னே நின்று வசுந்தரா கத்திக் கொண்டிருந்தாள்.

பதைத்துப்போய் ''என்ன? என்ன?'' என்று ஓடினான் பிரதீபன்.

''சாவி! முதலில் சாவியைக் கொடுங்கள்!'' என்று, வசுந்தரா பதறிய வேகத்தில், தன்னிடம் இருந்த சாவியை எடுத்துக் கொடுத்த பிரதீபனின் நாசி, வித்தியாசமான ஏதோ வாசனையை உணர்ந்தது.

என்னவோ எரிகிறது!

கதவைத் திறந்து கொண்டு, இருவரும் உள்ளே ஓடிச் சென்றனர்.

வீட்டினுள் ஆள் இருக்கும் அரவமே தெரியவில்லை. ஆனால் தீ சமையலறையில் என்பது புரிய, இருவரும் அங்கே ஓடிச் சென்றனர்.

சமையல் அறையில் கண்ட காட்சியை, இந்தப் பிறவியில் பிரதீபன் மறப்பதற்கில்லை!

கேஸ் அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. அதைவிட, அடுப்பின் மேலே இருந்த பாத்திரத்திலும் தீ எரிந்து கொண்டிருந்தது. குறைந்தது, முப்பது சென்டிமீட்டர் உயரத்துக்கு!

அதிர்ச்சியில் உறைந்து நின்றவன், வசுந்தரா அடுப்பை நோக்கி விரையவும் சட்டென உயிர் பெற்று, அவளைப் பிடித்துத் தடுத்தான்.

''ஐயோ, விடுங்கள், பிரதீபன்'' என்று அவனது பிடியைத் தளர்த்த முயன்றாள் அவள்.

''நீ அடுப்பின் கிட்டே போகாதே!'' என்றான் அவன். ''பாத்திரத்தில் எரிகிற தீ உன் மேல் பற்றி விட்டால்...''

''அதெல்லாம் ஆகாது. முதலில் 'கேசை' மூட வேண்டும்'' என்று கூறவும், கையை நீட்டிக் கீழே சிலிண்டரை மூடினான் பிரதீபன்.

''அப்புறம், இந்தத் தீயை... எண்ணைச் சட்டி. அதனால் தண்ணீரை ஊற்ற முடியாது. எண்ணெய், தண்ணீருக்கு மேலே வந்து எரியும் என்பதோடு, சொடசொடவென்று, கொதிக்கிற எண்ணெய் மேலே தெறிக்கும். வேறே...'' என்று வசுந்தரா யோசிக்கும் போதே, பிரதீபன் ஒரு விடை கண்டான்.

''தீ எரிவதற்குப் பிராணவாயு வேண்டாம். காற்றுப் போகாமல் மூடினால்... கரெக்ட்! அது இட்லி அவிக்கும் பாத்திரம். தேவைக்கு வாணலியாகவும் பயன்படுத்தலாம் என்று, ஆன்ட்டி வாங்கினார்களே. இதன் மூடி...'' என்று சுற்று முற்றும் தேடினான் அவன்.

''இதோ!'' என்று எடுத்து எரிகிற பாத்திரத்தை மூடப் போனவனைக் கையைப் பிடித்து, இப்போது வசுந்தரா தடுத்தாள்.

என்ன இது, புரியாமல் என்பது போலப் பார்த்தவனிடம் ''இது, அலுமினியம், தீபன். மூடி முழுக்கக் கீழே எரிகிற தீயில் உருகிவிடும். அதனால்...'' என்று தரை துடைக்கிற துணியை சமையலறைக் குழாயில் நனைத்து, மூடியின் மேல் விரித்துப் போட்டு, இடுக்கியால் மூடியைத் தூக்கித் தீப்பாத்திரத்தை மூடினாள்.

இருவரும் மூச்சைப் பிடித்துக் கொண்டு நின்று பார்க்கையில், வினாடியில் துணி காய்ந்து கருகத் தொடங்குவது தெரிந்தது. இன்னும் கொஞ்சம் தண்ணீரை, உள்ளே எண்ணெய்க்குள் இறங்கிவிடாமல், லேசாகத் தெளித்தாள் வசுந்தரா.

இருவருமாக மாறி மாறி நீரைத் தெளித்துக்கொண்டே இருக்க, துணி காயும் வேகம் குறையலாயிற்று. கடைசியாக, மூடி மேல் துணி ஈரமாகவே இருக்கவும், இருவரும், ''அப்பாடீ!'' என்று பெரிய மூச்சு விட்டனர்.

இவ்வளவுக்கும் பிறகே தங்கைகளைப் பற்றிய நினைவு இருவருக்குமே வந்தது.

''மாலை நேரச் சிற்றுண்டி ஏதோ செய்து தரப் போவ தாகக் கூறி, மனு என்னைச் சூட்டோடு சாப்பிட வரச் சொன்னாள்'' என்றான் பிரதீபன்.

அடுப்படியில், வெட்டப்பட்ட காய், மாவுக் கலவை எல்லாம் இருந்தன.

''அடுப்பில் எண்ணெய்ச் சட்டியை போட்டுவிட்டு, இரண்டு பேரும் சேர்ந்து எங்கே...'' என்று வசுந்தரா யோசிக்கும்போதே, மானசியின் அறையில் சத்தம் கேட்க, முன்னவர்கள் இருவரும் அந்தக் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தனர்.

வினயாவின் சிடி ப்ளேயர் எதையோ பாடிக் கொண் டிருக்க, இரு பெண்களும் அயர்ந்து உறங்கிக் கொண் டிருந்தனர்.

நடந்ததைப் பெரியவர்களால், இப்போது ஊகிக்க முடிந்தது.

பஜ்ஜி செய்வதற்காக எல்லாம் தயார் பண்ணி யிருக்கிறார்கள். எண்ணெய் காய்வதற்காகக் காத்திருக் கும் நேரத்தில், பாட்டுக் கேட்கலாம் என்று வந்தவர்கள், அடுப்பில் இருந்த எண்ணெயை அடியோடு மறந்து விட்டுப் பாட்டுக் கேட்டபடியே படுத்துக் கிடந்தவர்கள், அப்படியே தூங்கியிருக்கிறார்கள்.

''பாருங்களேன்! பொறுப்பே இல்லாமல், என்ன வேலை செய்து வைத்திருக்கிறாள்!'' என்று எரிச்சலோடு கூறியபடி, தங்கையை உலுக்கி எழுப்புவதற்காகக் கோபமாக முன்னேறியவளைத் தோளில் கை வைத்துப் பிரதீபன் தடுத்து நிறுத்தினான்.

அப்படியே அவளைத் திருப்பி முன்னறைக்கு அழைத்துப் போனான்.

அவனது இழுப்புக்கு இணங்க வந்தாலும், எரிச்சலுடனேயே ''என்ன?'' என்று கேட்டாள் வசுந்தரா.

''இரண்டு முகங்களையும் பார்த்தாயா? அயர்ந்த உறக்கம்! இந்த உலகத்தைப் பற்றிய நினைப்பே கிடையாது. இன்றைக்குப் பரீட்சை என்று, நேற்றிரவு வெகு நேரம் வரை மனு படித்துக் கொண்டிருந்தாள். தலையைச் சாய்த்ததும் தூக்கம் வந்து விட்டது போல... பாவம்!'' என்றான் அவன்.

ஒப்புதலாகத் தலையாட்டி ''வினுவும், முதலில் உட்கார்ந்து டீ.வி. பார்த்தாலும், இரவு உட்கார்ந்து, டேட்டா ஸம்பிஷியன்சியைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள். நீங்கள் கற்றுக் கொடுத்தவரை, தெளிவாக இருக்க வேண்டும் என்ற வேகம்! ஆனால்... என்னதான், இரவு கண் விழித்துப் பொறுப்போடு படித்தாலும், இந்தக் கவனக் குறைவு. பெரிய தப்புதானே? மேலே விளக்கு 'வயர்' வரை தீ போயிருந்தால், எவ்வளவு ஆபத்தாகியிருக்கும். புரிய வைக்க வேண்டாமா?'' என்றாள் வசுந்தரா.

''புரியாமல் போகுமா? அந்தப் பாத்திரம், மூடி வீணாகி விட்ட எண்ணெய்... எண்ணெய்ப் புகை பட்டுக் கரியாகிவிட்ட விட்டத்தையும் சுவரையும் சுத்தம் செய்யும்போதே, புரிந்துவிடுமே!'' என்றான் அவன் அமைதியான குரலிலேயே.

''அதுவும் சரிதான். தீயை அணைப்பதற்கு நாம் பட்ட பாட்டைச் சும்மா சொன்னாலே, போதும். இன்னும்

சுவர்...'' என்றவாறு சமையல் அறைப் பக்கம் திரும்பியபோது, கை இன்னமும் அவனது பிடியில் இருப்பதை உணர்ந்து நின்றாள்.

''ஓ!'' என்று கையை விடுவித்தான். அவளோடு சமையல் அறையைப் பார்க்கப் போனான்.

அடுப்பின் பின்புறச் சுவரிலும் மேலேயும் கறுப்படித்திருந்தது. ''இதை முதலில் சுத்தம் செய்தாக வேண்டும். அல்லது, வீட்டுக்காரர் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி விடுவார்! அப்புறம்...'' என்று இடுக்கியால் மூடித் தட்டை எடுத்துப் பார்த்தால், நெளிந்து வளைந்து, சொட்டை விழுந்து, கறுப்பாகவும் இருந்தது. மேலே குமிழ் இருந்த இடத்தில், பாதி உருகி, ஓட்டையே விழுந்திருந்தது. தொடர்ந்து நீர் ஊற்றி, துணியில் ஈரம் காயாமல் காத்ததுதான், முழுப் பலன் தந்திருக்கும் போலும்!

''ஊகூம். எல்லாமே பேரீச்சம் பழக்காரனிடம் போடத்தான் லாயக்கு. ஆனால், அவன் கூட, இந்தக் கறுப்படித்த அலுமினியத்தை எடுப்பானோ, என்னவோ?'' என்றான் அவன்.

அவன் இலகுவாகப் பேசினாலும், அதன் உள்ளே ஒரு கவலை இழையோடுவது போல, வசுந்தரா உணர்ந்தாள்.

அவனது பார்வையை, விழிகளால் தொடர்ந்தவளின் கவனம், யோசனையோடு, அவனது உடையில் படிந்தது.

பின்னவர்கள் வந்து பார்க்குமுன், சமையலறையில் எந்தவித மாற்றமும் செய்துவிடக கூடாது என்பதில், பிரதீபன் பிடிவாதமாக இருந்தான்.

இதை இப்படியே பார்த்தால்தான், தேவையான பாதிப்பு ஏற்படும் என்று அவன் காரணம் சொல்ல, வசுந்தராவுக்கும், அது சரியாகவே பட்டது.

எதிர் வீட்டில், மருத்துவரிடம் போயிருந்த மாமியாரும் மருமகளும் வர நேரமாகும். எனவே, முன்னறையில் அமர்ந்து, பிரதீபனும் வசுந்தராவும் பல்வேறு விஷயங்கள் குறித்து உரையாடிக் கொண்டிருந்தார்கள். இலகுவாகவே.

பாட்டியின் உடல்நிலை பற்றி, பிரதீபன் விசாரித்தான்.

முதுமைதான் முக்கியமான காரணம் என்றாள் வசுந்தரா. பாட்டியின் முப்பத்தைந்தாவது வயதில்தான், வசுவுடைய தந்தை பிறந்தாராம். இப்போது, அவருக்கே ஐம்பதாகிறது. பாட்டிக்கு எண்பத்தைந்து வயது. இப்போதுதான், சில ஆண்டுகளாக, ஒன்று மாற்றி ஒன்று என்று வந்து, பாட்டியைப் பலவீனப்படுத்துகிறது. பலவீனமாக இருப்பதால், ஏதாவது வந்து விடுகிறது.

''எங்கள் எல்லோருக்குமே, பாட்டியிடம் ரொம்பப் பாசம் உண்டு. பாட்டிக்கும் எங்களிடம் உயிர். பொதுவாக பாட்டிக்கு எல்லோரையும் பிடிக்கும். உங்களையும், மானசியும் கூட, நல்ல பிள்ளைகள் என்பார்கள்'' என்றவள், அவனது கண்ணோரம் சுருங்குவதைக் கண்டு ''என்ன?'' என்று விசாரித்தாள்.

''அதில்லை... எல்லோரையும் பிடிப்பதால் மட்டுமே, நானும் மனுவும் நல்ல விதம் என்றால், ஒரு மா... திரிப்பட்ட பாராட்டாகத் தோன்றியது'' எனறான் அவன் சீண்டல் குரலில்.

''ஐயோ, அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. நாங்கள், பாட்டியின் ரத்தம், உறவில்லாவிட்டாலும், உங்களை யும் பிடிக்கும் என்றேனே தவிர, நான் தப்பாக நினைத்துச் சொல்லவில்லை'' என்று அவசரமாக மறுத்தாள் வசுந்தரா.

''தப்பாக நினைத்தாலும், அதில் தப்பில்லை தானே?'' என்றான் அவன் குரல் மாற.

அவர்களது முதல் சந்திப்பைப் பிரதீபன் நினைக் கிறான் என்று, வசுந்தராவுக்குப் புரிந்தது. அவளுக்கும், அது நினைவு வரத்தான் செய்தது. அதற்கு ஒரு விளக்கம், அவன் தரத்தான் வேண்டும்.

ஆனால், அவனது கண்களில் வலி தெரியவும், வசுந்தரா சட்டெனப் பேச்சை மாற்றினாள். ''எங்கள் வினு விழிக்குமுன், சீக்கிரமாக இதைச் சொல்லி விடுங்கள். இல்லாவிட்டால், வேவு பார்க்கிறாயா என்று ஆத்திரப் படுவாள். சொல்லுங்கள், பிடிக்கவில்லை பிடிக்க வில்லை என்று என்னிடம் ஒதுங்குகிறவள், நேற்று இரவில் 'டேட்டா ஸம்பிஷியன்சி'யைத்தான் தூங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். புரிந்து படிக்கிறாள்?'' என்று வினவினாள்.

வசுந்தராவின் நோக்கம் புரிந்து, பிரதீபன் முகம் லே சாகக் கன்றியது.

ஆனால், அவளிடம் விளக்கம் சொல்ல, இப்போது அவனுக்கும் பிடிக்கவில்லை. விளக்கம் என்று தொடங்கி விட்டால், அந்த ஒன்றோடு நிற்காதே! அத்தோடு, அதை விளக்குவது என்றால், எல்லாவற்றையுமே சொன் னால்தானே, புரியும்?

பிற்பாடு பார்க்கலாம். இப்போது வேண்டாம்.

வேலையை வைத்துக் கொண்டே கண்ணயர்ந்தவர்கள் என்பதால், தங்கைகள் விரைவிலேயே விழித்தெழுந்து விட்டார்கள்.

முன்னறையில், இரு மூத்தவர்களையும் பார்த்துக் கண்ணை விரித்தாலும், மானசிக்கு உடனே நினைவு வந்தது.

''வந்தாயிற்றா, அண்ணா? அக்கா வா. இதோ பஜ்ஜி செய்து, கொண்டு வருகிறே...'' என்று கூறியவாறே சமையலறைக்குள் சென்றவள் ''ஐயோ!'' என்று கத்த, பின்னோடு சென்ற வினயாவும் ''ஐயய்யோ!'' என்று அலறினாள்.

எல்லோருமாகச் சேர்ந்து சுவர், விட்டம், அடுப்படி எல்லாவற்றையும் எண்ணெய்க் கரி போகத் தேய்த்து சுத்தம் செய்து, ஓரளவு பார்க்கிற அளவுக்குக் கொண்டு வந்தனர்.

கறுப்பாகியிருந்த மீதி எண்ணெயை 'சிங்க்'கில் கொட்டி விட்டுப் பாத்திரத்தையும் மூடியையும் குப்பைக் கூடையில் போட்டபோது, மானசி அழுது விட்டாள். ''பாத்திரம், எண்ணெய் எல்லாம் பாழாகி விட்டதோ, அண்ணா! எவ்வளவு பணம் வீணாகிப் போயிற்று!''

''பரவாயில்லை, மனும்மா. அதற்கு விலையாகத்தான் ஒரு நல்ல பாடம் படித்து விட்டோமே! கொஞ்சம் எண்ணெய் விட்டுப் பாத்திரத்தை அடுப்பில் வைத்தால் கூட, அடுப்பை அணைக்காமல், இனிமேல் இந்தப்

பக்கம், அந்தப் பக்கம் போவோமா, என்ன? அந்த லாபத்தை மட்டும் நினை'' என்றான் அண்ணன்.

''அண்ணா, எண்ணெய் காயும் வரை, பாட்டுக் கேட் கலாம் என்று, நான்தான் மானுவிடம் சொன்னேன்'' என்றாள் வினயா சின்னக் குரலில்.

''பாடம் உனக்கும்தானேம்மா! நீயும்தான், அந்தத் தப்பைச் செய்ய மாட்டாய்'' என்று இலகுவாக முடித்து விட்டு, ''இன்று பாடத்துக்கு எப்போது வரப் போகிறாய்? இதுவரை நடந்ததில், உனக்கு ஒரு திடீர்ப் பரீட்சை வைக்கலாம் என்று இருக்கிறேன், தெரியுமா?'' என்றான் மிரட்டலாக.

இரவில், அவள் படித்தாள் என்பது தெரிந்ததால் சொன்னதுதான்.

அதற்கேற்ப அவளும் ''தாராளமாக வையுங்கள்! நூற்றுக்கு நூறு வாங்குவேன் தெரியுமா?'' என்று உற்சாகத்துடன் குதிக்க, பேச்சும் திசை மாறிப் போயிற்று.

அன்றிரவு தாயிடம் ''எதிர் வீட்டில் பாத்திரங்களே இல்லைம்மா. பாத்திரங்களும் எண்ணெயும் வீணாகி விட்டதில், வெளியே காட்டாவிட்டாலும், மானசி அண்ணனுக்குமே கவலைதான். ஆனால் அவர்கள் அணியும் உடைகளைப் பாருங்கள். எல்லாமே, விலை உயர்ந்தவை. பிரதீபனின் ஒரு சட்டை விலையில், எத்தனையோ பாத்திரங்கள் வாங்கலாம். அத்தோடு... வந்து... என்னவோ விசித்திரமாக இருக்கிறதும்மா'' என்றாள் வசுந்தரா.

துப்பட்டா கிழிந்த விதத்தை, தாய் வருந்தக் கூடும் என்று, அன்று சொல்லாமல் விடுத்த அவள், இன்றும் அதைப் பற்றி அன்னையிடம் வாய் திறக்கவில்லை.

நடந்தது தெரிந்தால், பெற்றவள், பிரதீபனைத் தப்பாக நினைத்து விடுவாளே!

8



கூடுதல் ஊதியம் கொடுக்கா விட்டால், வேலை நிறுத்தம் செய்வோம் என்று கோஷமிட்ட தொழிலாளர்கள் அனைவரையும், சட்டப்படியான சம்பளப் பணத்தைக் கொடுத்து, பிரதீபன் வேலை நீக்கம் செய்தான்.

வேலையில் சேர்ந்து, ஓர் ஆண்டுகூட நிறைவேறியிராத, தற்காலிக ஊழியர்களே என்றாலும், தொழில் சங்கத் தலைவர்களை வரவழைத்து, அவர்களோடு கலந்து பேசியே, அவன் இந்த முடிவெடுத்ததால், அந்த வகையில் வேறு பிரச்சினைகள் எதுவும் இல்லாது போயிற்று.

ஆனால், சிந்துபாத் கிழவன் போலத் தலையில் ஏறி உட்கார்ந்திருந்த அண்ணனும் தம்பியும், அவர்களுடைய ஆடிட்டருடன் வந்து நின்றார்கள்.

''என்னமோ கிழிக்கிற மாதிரி பெரிய வேலையை இழுத்துப் போட்டு வச்சிக்கிட்டு, அத்தன பேரையும் தூக்கிட்டியே! வேலைய எப்பிடி முடிப்பே? இதுனால, நஸ்டம் ஏதாச்சும் ஆனாக்க, அத்த நாங்க ஒத்துக்க மாட்டோம்ப்பா! முளுக்க ஒன் கணக்குத்தான். நெனப் பில வச்சுக்க!'' என்றார்கள்.

பிரச்சினையைக் கிளப்பி விட்டதே, இவர்கள்தான். இவர்கள் சும்மா இருந்திருந்தால், வேலை ஒழுங்காக நடந்திருக்கும். அதையும் கெடுத்து விட்டு, அதற்கு மேல், இப்படியொரு பேச்சு!

பேசியது சரிதானா என்பது போல, ஆடிட்டரை வேறு அவர்கள் பார்க்கவும், பிரதீபனுக்கு ஆத்திரம் வந்தது.

''ரொம்ப சரி!'' என்றான் ஒத்துக் கொள்வது போல ''ஆனால், நஷ்டம் வராது.''

அவர்களது கண்களில் வெற்றிக் குறியைக் காணவும், ஏதோ, இன்னொரு சிலுமிஷம் செய்யத் திட்டமிட் டிருப்பது புரிந்தது.

எனவே, ''நஷ்டமானால், நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், லாபம் வந்தால் அதையும் நானே எடுத்துக் கொள்ளலாமா?'' என்று கேட்டான்.

சற்றே திணறியபோது, ஆடிட்டரின் கை, தற்செயல் போல் ஒருவன் மீது பட, அவனும் உடனே ''சரித்தான் வச்சுக்க!'' என்று கூறவும், பிரதீபன் சுதாரித்தான்.

நிச்சயமாகத் தொல்லை தரும் திட்டம், ஏதோ இருக் கிறது.

யோசித்துவிட்டு, செக்யூரிட்டி தலைவரையும், ஃபோர்மனையும் கூப்பிட்டுப் பேசினான்.

இரண்டே நாட்களில், தங்களைப் பார்க்க வருகிற ஆட்களை உள்ளே விடுகிறதில்லை. அவர்களையே உள்ளே வருமுன் சோதனை போடுகிறார்கள் என்று ஏகப்பட்ட குறைகளோடு, அண்ணனும் தம்பியும் வந்து நின்றார்கள்.

''பெரிய வேலை முடிக்கும்போது, அப்படித்தான். என்னையே கூடச் சோதனை போடச் சொல்லியிருக் கிறேன். மேலே இடிக்கிற மாதிரி, என் பையில் எவ னாவது, எதையாவது போட்டு விட்டால்?'' என்று, பிர தீபன் பதில் சொல்லவும், ஒன்றும் சொல்ல இயலாமல் திரும்பிப் போனார்கள்.

இன்றைக்கு முதலாளி இடத்தில் இருந்து வேலை வாங்குகிறவனையே சோதித்தால், மற்றவர்கள் எம் மட்டும்?

அவர்களைக் கொஞ்சம் பின் தொடர்ந்து கவனிக் கும்படி ஃபோர்மனிடம் கூறியதற்கு, நல்ல பலன் கிடைத்தது.

மின்சாரக் கருவிகளில் வேலை செய்யும் இரண்டு ஆட்களை உள்ளே கூட்டிவர, சகோதரர்கள் ஏற்பாடு செய்திருந்தார்களாம்.

எல்லாக் கருவிகளும் சீராக இயங்குகின்றனவா என்று பரிசோதிப்பதாக, வெளியே சொல்வது, உள்ளே யாரும் அறியாத நேரத்தில், மின் இணைப்புகளைத் தப்புத் தப்பாக மாற்றிக் கொடுத்து விட்டு, அப்படியே, அந்த ஆட்கள் காணாமல் போய் விடுவார்கள்.

இங்கே, மின்சாரக் கசிவு ஏற்பட்டு, மொத்த யூனிட் டும் நாசமாகிப் போகும்.

''அருமையாத் திட்டம் போட்டாக்க, நம்ம ஆளுங் களை, உள்ளாரக் கொண்டாரவே முடியலியே... அப்படீன்னு தம்பிக்காரன், பொலம்பினதைக் காதாலே, கேட்டனுங்க, சின்னய்யா!'' என்றார் குமரேசு.

படுபாவிகள்! அவனிடம் கோபம் என்றால், அவ னுடனேயே மோதவேண்டும். அதை விட்டு... மின் கசிவு ஏற்படும்போது, பொருட்சேதம் மட்டுமா ஏற் படும்? மனித உயிர்கள் கூட, இவர்களுக்கு ஒன்று மில்லையா?

இந்த மாதிரி மனிதர்களிடம் போய், தந்தை, அவனை மாட்டி வைத்து விட்டாரே! இவர்களுடைய சகோதரி என்றால், அவளும், இவர்களைப் போலத்தானே, இருப் பாள்?

தரமறிந்து பழக வேண்டும் என்று, மக்களிடம் சொல் கிறவர், இருந்திருந்து... தலைவிதி என்பது இதுதான் போலும்!

தன் செயலின்றியே, இந்த மாதிரி ஆட்களிடம் மாட் டிக் கொள்வது!

வக்கீல் சொல்வது போல, இதிலிருந்து மீள்வதற்கான வழி ஏதோ இருக்கிறது என்ற நம்பிக்கை, பிரதீபனுக்கு. இப்போது ரொம்பவே குறைந்து போயிருந்தது. மறைந்தே விட்டது எனலாம்.

சரி, தொழிலை மிக நன்றாக நடத்தி, அதைக் காட்டிக் கடனும் வாங்கி, ஒரு பெரும் தொகையைக் கொடுத்து,

இந்தப் பிரச்சினையை ஓய்க்கலாம் என்று பார்த்தால், அதற்கும் வழி விடாமல் தொல்லை செய்கிறார்களே என்றிருந்தது, அவனுக்கு.

எப்படியும், அதிகப்படி செக்யூரிட்டி என்றால், அதுவும் அதிகப்படிச் செலவுதானே?

வக்கீல் ஞானசகாயம் அங்கிளை, அவர்களிடம் பேசச் சொல்ல வேண்டும் என்று முடிவு செய்தான், பிரதீபன்.

ஃபோர்மேனும் தலைமை நிர்வாகியும் அவனை நாடி வந்தார்கள்.

''சார், அடுத்த வாரம் வேலை முடித்துக் கொடுக்க வேண்டும். இன்றிலிருந்து ஒரு நாள் விட்டு, ஒரு நாள் 'நைட் டியூட்டி' பண்ணலாம் என்று ஃபோர்மேன் சொல் கிறார்'' என்றார் நிர்வாகி.

''எத்தனை இரவுகள் வேலை செய்ய வேண்டி யிருக்கும், குமரேசு?'' என்று வினவினான் முதலாளி.

''ரெண்டு நாள் போதும், சின்னய்யா. அப்பாலே, ரெண்டு பகலோட, மெஷின் வேலை முடிஞ்சு போவும். 'பாக்கிங்' ரெண்டு நாள். நாத்திக் கெழமைக்குள்ளார, அனுப்பிச்சுடலாம், சார்!'' என்றான் ஃபோர்மன்.

''சரி, நாளைக்கு 'நைட் டியூட்டி' என்று சர்க்குலர் அனுப்பி விடுங்கள், மேனேஜர். அதேபோல, அதிகப்படி கூலிக்குப் பணம் எடுத்து வரவும், காஷியரிடம் சொல்லி விடுங்கள்'' என்றான் பிரதீபன்.

தொழிற்சாலையில் எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டாலும், மறுநாள் வீட்டில் தங்கையைப் பார்த்து அவன் மனம் சங்கடப்பட்டது.

பிறந்ததில் இருந்து, செல்ல மகளாக வளர்ந்தவள். கூப்பிட்ட குரலுக்குக் காவலுக்கும் வேலைக்கும் என்று எத்தனையோ பேர் நடுவே வளர்ந்தவள். இரவு நேரத்தில் தன்னந்தனியே, மானசி இருந்ததே கிடையாது. இப் போது, எப்படி இருப்பாள்?

எத்தனையோ கஷ்டங்களுக்குப் பழகி விட்டாள்தான். ஆனாலும்... அண்ணன் மனம் தவித்தது.

''எல்லாத் தாழ்ப்பாள்களையும் போட்டுக் கொண்டு, பத்திரமாக இருக்கிறேன், அண்ணா'' என்று அவள் திடம் காட்டிச் சொன்னபோதும், அந்தத் திடம் அவனுக்காகக் காட்டப்பட்டது என்று உணர்ந்ததால், அவனுக்குக் கவலையாகவே இருந்தது.

எனவே, வேலைக்குக் கிளம்புமுன் எதிர் வீட்டுக்குச் சென்று, விவரம் சொன்னான். ''எல்லோரும் விழித் திருந்து வேலை செய்யும்போது, நான் போகாமல் முடி யாது, ஆன்ட்டி. ஆனால்... மனுவுக்குத் தனியாக இருந்து பழக்கம் இல்லை... இரவில்... அவள்... அவளைக் கொஞ்சம் ஒரு கண் பார்த்துக் கொள்ளுங்கள், ஆன்ட்டி'' என்றான் கெஞ்சுதலாக.

''ஐயோ, மானு ஏன்ப்பா, அங்கே தனியாகக் கிடக்க வேண்டும்? வினுவோடு சேர்ந்து இங்கேயே படுத்துக் கொள்ளட்டும். தங்கையை நினைத்துக் கவலைப் படாமல், நீ போய், நிம்மதியாக வேலையைப் பார்'' என்றாள் அன்னபூரணி கனிவாக.

பெரும் பளு இறங்கிய உணர்வு, அவனுக்கு. ஆனாலும் தயக்கத்துடன், ''உங்களுக்கு ஒன்றும் தொந்திரவாய் இராதே, ஆன்ட்டி!'' என்று கேட்டான் அவன்.

''இது என்னம்மா, தொந்திரவு? தோளில் போட்டுத் தட்டிக் கொடுத்தா தூங்க வைக்கப் போகிறேன்? வசு கூட, இப்போதெல்லாம் பாட்டி அறையில்தான் படுக் கிறாள். அதனால், இரண்டு தோழிகளும் கொஞ்ச நேரம் ஜாலியாக அரட்டை அடித்துவிட்டு, நன்றாகத் தூங்கு வார்கள். கவலையே படாதே!'' என்றாள், அன்பான அந்த எதிர்வீட்டுப் பெண்மணி.

''ஆமாம்ப்பா! கவலைக்குத் தேவையே கிடையாது. ஆனால், மானசிக்கு மட்டும், இரவு இங்கே வருமாறு போன் பண்ணிச் சொல்லிவிடு'' என்றாள் பாட்டியும் புன்முறுவலோடு.

வேலைக்குச் செல்லத் தயாராக வந்த வசுந்தரா, விஷயம் அறிந்ததும், கண்ணில் சிரிப்புடன், ''நல்ல வேளை, இரவு நேரம். இரண்டு வால்களும் சேர்ந்து, சமையல் பண்ணத் தொடங்கிவிட மாட்டார்கள்! வீட் டில் எல்லோரும் தை...ரியமாகத் தூங்கலாம்!'' என்று கிண்டலாகக் கூற, எல்லோரும் சிரித்தனர்.

கூடச் சேர்ந்து சிரித்தாலும், அன்றைய தீ பிரச் சினைக்குப் பிறகு, வசுந்தரா கொஞ்சம் இலகுவாகப் பழகுகிறாளோ என்று அவனது யோசனை ஓடிற்று.

முதல் சந்திப்பை அவள் மறந்திருக்க வாய்ப்பில்லை.

ஆனால், சகவாச தோஷமோ, மற்ற ஏதோ காரண மாகவோ செய்த ஒரே ஓர் அசட்டுத்தனம், மற்றபடி

இரவில் மருந்து வாங்கித் தந்தது. வினயாவுக்குப் பாடம் கற்றுக் கொடுப்பது என்று நல்லதுதானே செய்கிறான், பொதுவாக நல்லவன்தான் என்ற முடிவுக்கு வந்திருப் பாளோ என்று தோன்றியது.

எப்படியோ, அவள் சாதாரணமாகப் பழகுவதே, அவனுக்கு நிம்மதியாக இருந்தது.

அன்றைய இரவு வேலை, அவனுக்குத் திருப்திகரமாக இருந்தது.

இரவில் உடம்பை வருத்திப் பழக்கமே இல்லையோ, என்னவோ, வில்லன்களும் அந்தப் பக்கம் தலையைக் காட்டவில்லை.

அடுத்த 'இரவு வேலை'யும் இதே போல நடந்து விட்டால், முழுக்க முழுக்க அவன் பொறுப்பில் எடுத்த பெரிய வேலையை நல்லபடியாக நிறைவேற்றி விட லாம். இன்னும் நிறையப் பெரிய வேலைகள் கிடைக் கும். வருமானமும் பெருகும்!

இரவு முழுதும் விழித்து வேலை செய்தபோதும், உற்சாகத்துடனேயே திரும்பி வந்த பிரதீபனுக்கு, அவனது குரல் கேட்டு, மானசியோடு வெளியே வந்த எதிர்வீட்டினரின் முகங்களைப் பார்த்ததுமே, அப்படியே தலை தாழ்ந்து விட்டது.

மானசி எல்லாவற்றையும், எதிர் வீட்டினரிடம் சொல்லி விட்டாள். மற்றபடி, வசுந்தராவின் முகத்தில், இவ்வளவு பரிதாபம் தெரிய வாய்ப்பில்லை.

இரவு முழுவதும் கண் விழித்து வேலை செய்த களைப்பு முழுமையாகத் தாக்க, சோர்வுடன் வீட்டைத் திறந்து கொண்டு, உள்ளே சென்றான் அவன்.

காலை உணவுக்காக, அன்னபூரணி கொடுத்து அனுப்பியவற்றை அடுப்படியில் வைத்துவிட்டு, மானசி, அண்ணனிடம் வந்தாள்.

''இரவில் விழித்திருந்து வேலை செய்தால், பசிக்கும் என்று ஆன்ட்டி சொன்னார்கள். சாப்பிடுகிறாயா, அண்ணா?'' என்று கேட்டாள்.

''சாப்பாடு இருக்கட்டும் மனு'' என்றவனுக்கு அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை. ''சொல்லும்மா நம் கதையென்ன, ஏதேனும் அரிய பெரிய புராணக் கதையா, சொல்லுகிறவருக்கும், கேட்கிறவருக்கும் புண்ணியத்தை அள்ளித் தருவதற்கு? எனக்கு, அவர்களை நிமிர்ந்து பார்க்க முடியவில்லையே! அப்பாவைப் பற்றி, என்ன நினைப்பார்கள் என்று கூட யோசியாமல், அள்ளிக் கொட்டி விட்டிருக்கிறாயே!'' என்றான் கோபமும் வருத்தமுமாக.

தங்கையின் கண்கள் கலங்கின ''சாரிண்ணா. நானும் வேண்டும் என்று சொல்லவில்லை. ஏதோ, உன் உடைகள், கிளிப், வளையல்கள் போலப் பொருட்கள் பலதைக் குறிப்பிட்டு, எங்கே வாங்கியது என்று வினு கேட்டாள். எங்கெல்லாம் வாங்கினேன் என்று சொன்னேன். ஆனால், அங்கெல்லாம், அதிக விலை என்று சொன்னார்களே, என்றாளா... அப்படியே அப்பாவும், நீயும் என்ன வேண்டுமானாலும் வாங்கிக் கொள் என்று பணம் தந்தது... அன்றைக்கு சினேகிதிகளாக இருந்தவர்களோடு அங்கெல்லாம் போய்ப் பணத்தைக் கணக்குப் பாராமல் வாங்கியது எல்லாம் நினைவு வர, எப்படி இருந்தோம் என்று, எனக்கு ரொம்ப அழுகை

வந்து விட்டது. அப்புறம் அப்படியே எல்லாம் சொல்லி விட்டேன்...'' என்று முடித்தபோது, அவளது கண்களில் நீர் வடியலாயிற்று.

அதைப் பார்க்கவும், பிரதீபனுக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது.

பழைய உறவு, நட்பு எல்லாம் விலகிவிட்ட நிலையில், ஒருவருக்கு ஒருவர் என்று அண்ணனும் தங்கையுமாக மட்டுமாக வாழ்கிறபோது, இந்தச் சின்னப் பெண்ணிடம் கோபம் காட்டினால், எப்படித் தாங்குவாள்?

கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு ''அதில்லை, மனும்மா. நம் கஷ்டம் நம்மோடு இருக்கட்டுமே என்று நினைத்தேன். அப்பா நமக்கு அநியாயம் செய்திருக்க மாட்டார் என்ற நம்பிக்கை, ஞானசகாயம் அங்கிளுக்கு இன்னமும் இருக்கிறது. அப்படிப் பார்த்தால், அனாவசியமாக இப்போது எதற்காக அப்பாவைப் பற்றி... சரி, விடும்மா. எப்படியும், சொன்னதை இல்லை என்று மாற்ற முடியாது. யார் என்ன வேண்டுமானாலும் எண்ணி விட்டுப் போகட்டும். இன்னும்...'' என்று முடிக்காமலே நிறுத்தினான் அவன்.

கிழிந்த துப்பட்டா பற்றி, உடன் பிறந்த தங்கையிடம் கூட, எப்படிச் சொல்வது? அதுவும் நினைக்க நினைக்க, அவனுக்கே மிகவும் அவமானமாக இருக்கும்போது.

அன்றைய பணத் திமிருக்குத் தண்டனை என்று, வசுந்தரா நினைத்திருப்பாளா? அதுகூடப் பரவாயில்லாமல் இருந்திருக்கும். ஆனால், எவ்வளவு உயரத்திலிருந்து, எவ்வளவு கீழே இறங்கி விட்டான் என்பதை

எடுத்துக் காட்டுவது போல, அவளது பரிதாபப் பார்வைதான், அவனுக்கு மிகவும் அவமானமாக இருந்தது.

ஆனால், அந்தக் குன்றலை மௌனமாக அனுபவிப்பது தவிர, இதுபற்றி, அவன் எதுவுமே செய்வதற்கில்லை. இயன்றவரை, வசுந்தராவின் பார்வையில் படாமல் ஒதுங்கிக் கொண்டால், அந்தப் பார்வையைச் சந்திக்க நேராதல்லவா? இதைத்தான், இனிச் செய்ய வேண்டும் அவ்வளவே!

சுற்றிச் சுற்றி வந்து, இரவில் கண் விழித்து வேலை செய்த தொழிலாளர்களுக்கு உற்சாகமூட்டுவதும், மேற்பார்வை பார்ப்பதும், சமயத்தில் ஒரு கையாக வேலை செய்வதுமாக, இரவு முழுவதும் உட்காராமல் உழைத்ததன் பலனாக, இந்த மன உளைச்சலையும் மீறி, பிரதீபனுக்கு நல்ல உறக்கம் வந்தது.

இரண்டு மணி நேரம் அடித்துப் போட்டாற்போல நன்றாகத் தூங்கி எழுந்து, கிளம்பி அலுவலுக்குச் சென்றபோது, பெருமளவு தென்பும், திடமும் அவனுக்குத் திரும்பியிருந்தது.

அந்தத் தென்புடனேயே வேலையை முடித்து, முடித்த பொருட்களை ஒழுங்காக பாக் செய்து, அனுப்பி, தரமான வேலைப்பாடு, நேரம் தவறாமை இரண்டிற்கும் பாராட்டையும், கூடவே பணத்தையும் பெற்றபோது, பிரதீபனுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அவனது குறிக்கோள் நிறைவேறும் நாள், அதிக தூரத்தில் இல்லை!

உற்சாகத்துடனேயே, பிரதீபன் அன்று அலுவலகம் சென்றால், புதிதாகச் சிலர் தொழிற்சாலையின் உள்ளே வந்து நின்றனர்.

வந்தது மட்டுமின்றி, அளவெடுக்கவும் தொடங்கினர்.

சும்மாப் பார்க்கிறவன் போலப் போய் ''எதற்காக?'' என்று விசாரித்தபோது, இடிபோல ''சத்தியா இருக்கிற ஒனருங்க விக்கப் போகிறாங்களாம். புதுசாக வாங்கப் போகிறவங்களுக்காக அளவு எடுக்கிறோம்'' என்றார்கள்.

கொதித்துப் போயிற்று பிரதீபனுக்கு.

முத்தையன், ரத்தினவேலின் வேலை என்று புரிந்தது. ஆனால், இந்தத் தைரியம் எப்படி வந்தது? பிரதீபன் கோர்ட்டுக்குப் போனால், எல்லாம் அப்படியே நின்று போகும் என்று, அவர்களுக்குத் தெரியும் தானே?

ஆத்திரத்துடன் அவர்கள் அறைக்கே ''யார் சொத்தை, யார் விற்பது? நான் கோர்ட்டில் ஸ்டே வாங்கினால், ஒன்றுமே இல்லாமல் நடுத்தெருவில் நிற்பீர்கள்!'' என்று கோபமாகக் கத்தினான்.

ஆனால், அவர்கள் அமைதியாகப் பேசினார்கள் ''பாருப்பா, ஒனக்கும் வேண்டாம், எங்களுக்கும் வேண்டாம். நடுவிலே, உன் வக்கீலாண்டையே சொல்லிட்டு அப்பாலேதான், அளக்க ஆள் கூட்டியாந்தோம். எத்தின கோடி தர்றேனுங்கிறானுங்க தெரியுமா? கண்ணக் கட்டுது! அதான் பாத்தோம்! சரி, இந்தத் தொகையை ஆளுக்குப் பாதின்னே கூடப் பிரிச்சுக் கிட்டாலும், அத்தை வச்சு, நாங்க பெரிசாக் கடை, கிடை போட்டு நிறைய சம்பாரிக்கலாமில்ல? நீயும், தங்கச்சிக்கு நல்ல

படியாக கலியாணம் பண்ணலாம். மிச்சத்திலே, சின்ன தாத் தொழில் பண்ணலாம்! நீ வேணா, உன் வக்கீலு கிட்டக் கேட்டுப்பாரு. அவரோட பேசிட்டு, அப்பாலே சொல்லு'' என்றார்கள்.

அமைதியாகப் பேசுகிறவர்களிடம் என்னத்தைக் கத்துவது?

கூடவே அவர்கள் பேசியதும் உறைக்க, ஞான சகாயத்துக்கு போன் செய்தான்.

இது பற்றிப் பேசி, நேரில் வரச் சொல்லிக் காரையும் அனுப்பி வைத்தார், அவர்.

''சுபிக்குக் குழந்தை பிறக்கிற நாள் நெருங்குகிறதா, மாப்பிள்ளை வீட்டார் வருவதும் போவதுமாக, உண் டான வேலையைப் பார்க்கவே, நேரம் இல்லைப்பா. அதுதான், உன்னை இங்கே வரச் சொன்னேன். அது இருக்கட்டும். உன் விஷயம் பார்ப்போம்.

''பிரதீப், நீ கொஞ்சம் அமைதியாக இருந்து, இதை யோசித்துப் பார்க்க வேண்டும். மானுவுக்கு, இப்போது இருபது முடிந்து விட்டது. இன்னும் ஓரிரு ஆண்டுகளில், அவளுக்குத் திருமணம் செய்ய வேண்டும். என்னதான் கஷ்டப்பட்டு, சாதாரண வாழ்வு வாழ்ந்தாலும், அவளைச் சாதாரண இடத்தில் கொடுப்பாயா? மாட்டாய். பெரிய இடம் என்றால், அதற்குச் சரியாகச் செலவு பண்ண வேண்டும். நீ முத்தையன் குடும்பத்தோடு சண்டை போட்டு ஜெயித்து... மீண்டு வருமுன், அவளுக்கு முப்பது தாண்டிவிடும்.

''இந்த இடம் வாங்கும்போதே, விரிவாக்கத்துக்கு இடம் வேண்டும் என்று, தேவா பெரிய இடமாகத்தான்

வாங்கினார். இப்போது, வெறும் இடத்து மதிப்பே இருபது கோடிக்கு மேலே போகிறது.

''பாதியே என்றாலும், பத்து கோடி கையில் கிடைக்கும் என்றால், முத்தையன், ரத்தினத்துக்கு, அது பெரிதாகத் தோன்றுகிறது. அந்தப் பாதியை மட்டும் வாங்கிக் கொள்ள அவர்களுக்குச் சம்மதம்.

''நீ என்ன சொல்லுகிறாய்? நீ ஜெயிப்பாய் என்பதில் ஐயம் கிடையாது. ஆனால், எத்தனை ஆண்டுகளில், என்று உறுதியாகச் சொல்ல முடியாது. இவர்களுடனும் போராடி தொழிலையும் உயர்த்துவது என்றால், கட்டாயம் தாமதம் ஆகும். அதுவரை, மானுவை இப்படியே விட்டு விடுவதா என்று யோசி.

''அவளுடனும் கலந்து ஆலோசனை செய். மானுக்குட்டி குழந்தையல்ல. புத்திசாலியும்கூட, இப்போதைய நிலைக்கு, இத்தனை நாள், அவள் சமாளித்துப் போவதே, அதற்குச் சான்று!

''இருவருமே, நன்கு ஆலோசியுங்கள். அவசரப்பட்டு, எந்த முடிவையும் எடுக்க வேண்டாம். உணர்ச்சி வசப்படாமல் யோசியுங்கள். நல்லது, கெட்டது இரண்டையும், முழுமையாக ஆராய்ந்து, அப்புறமாக ஒரு தீர்மானத்துக்கு வாருங்கள். மேலே நடக்க வேண்டியதைப் பார்க்க, நான் துணை வருகிறேன்'' என்றார் அவர்.

திரும்பி வருகையில், பிரதீபனின் மனதில், மேலும் சுமையேறிப் போயிற்று.

ஞானசகாயம் சொல்வது போல, அவனுக்குத் தங்கைக்குச் செய்ய வேண்டிய கடமை இருக்கிறது. தந்தை இல்லாத நிலையில், முழுப் பொறுப்பும் அவனதே!

அதேசமயம், பெற்றவர் பேணி வளர்த்த தொழில்? அதன் பொறுப்பும் அவனதே அல்லவா? அந்த நிறு வனத்தின் உண்மையான விசுவாசிகளாக இருக்கும் இருநூறு பேருக்கும் மேலான தொழிலாளர்களின் பொறுப்பும், அவனதே அல்லவா?

முதலிலேயே அந்தக் குமரேசன் வந்து கேட்ட போது 'தொடர்ந்து நடத்துவேன்' என்றானே?

ஆனால், தங்கை?

குழம்பிய வண்ணமே வீட்டை அடைந்தால், வீட்டின் சுத்தம், புதுமையாக மனதைத் தாக்கியது.

மடித்து வைக்கப்பட்டிருந்த துவைத்த துணிகள், தயாராக இருந்த உணவு, கொஞ்சம் பொருட்களே என்றாலும், அவை நேர்த்தியாக வைக்கப்பட்டிருந்த விதம்!

அண்ணனின் வரவைக் கண்டு, நிமிர்ந்து முறுவலித் தவள், ஏதோ பாடம்தான் படித்துக் கொண்டிருந்தாள். ஆனாலும் எழுத்து பொருட்களோ, நோட்டுப் புத்தகமோ, எதுவும் கோணல்மாணலாகக் கிடக்கவில்லை.

வக்கீல் அங்கிள் சொன்னது போ, மானசி சின்னக் குழந்தை அல்ல! கெட்டிக்காரிதான்!

இரவு உணவின் பின், அன்றைய விவகாரம் பற்றி, பிரதீபன் தங்கையிடம் கூறினான். ''என்ன முடிவு எடுப்பது என்று, எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிற தும்மா, வக்கீல் அங்கிள் சொல்வதைப் பார்த்தால், விற்று விடலாமோ என்று தோன்றுகிறது. ஆனால் அப்பாவை, அந்தத் தொழிலாளர்களை நினைக்கும்போது, அதை

மனதார ஒப்பவும் முடியவில்லை. எல்லா விஷயங்களையும், உன்னிடம் சொல்லிவிட்டேன். என்ன செய்யலாம் என்று நீ நினைக்கிறாய்?'' என்று கேட்டான்.

சில கணங்கள் பேசாதிருந்து விட்டு, அண்ணனைப் பார்த்தாள் அவள். ''இருக்கட்டும் அண்ணா. இதற்கான முடிவை, நாம் இப்போது எடுக்க வேண்டாம். அவரவர் தனியாக யோசிப்போம். காலையில், அதுபற்றிப் பேசுவோம்'' என்றாள்.

அவனுக்கும் சரியாகவே பட்டது. அடுத்தவர் குறுக்கீடு இல்லாமல், சாதக, பாதகங்களை ஆராய்வது இன்னமும் நல்லதுதானே?

ஆனால், தங்கையின் முடிவுக்குத்தான் அதிக மதிப்புக் கொடுக்க வேண்டும் என்று தனக்குள் தீர்மானித்தான் பிரதீபன். ஏனெனில், திருமணம் அவளுக்குத்தானே!

9

மறுநாள் காலை காபியை அருந்தியபடி, அண்ணனும் தங்கையும் மறுபடியும் பேசினார்கள்.

''சொல்லும்மா, உன் கருத்து என்ன? பெரியவர்களை மறுத்துப் பேசலாமா என்று தயங்க நேராமல், இளையவர்கள் தைரியமாகக் கருத்துக்களை கூறுவதற்காக,

முதலில் பேசும் உரிமையைச் சின்னவர்களுக்குத் தர வேண்டும் என்கிறது, மகாபாரதம். அதன்படி, முதல் வாய்ப்பு. உன்னது. சொல்லு'' என்று இலகுவாகப் பேசினான் பிரதீபன்.

அவளும் தயங்கவில்லை ''அண்ணா, தொழிற்சாலை நிலத்தை விற்கலாம் என்பதற்கு, ஒரு முக்கியமான காரணம். எனக்குத் திருமணம் செய்வதற்கான பணத் துக்காக. அது, அவசியம் இல்லை, அண்ணா. எதிர்வீட்டு அக்காவைப் பார். படித்து, வேலை செய்து, எவ்வளவு சம்பாதிக்கிறாள்! அதே போல, என்னாலும் முடியும் தானே? இப்போது வினயா படிக்கும் எம்பிஏ வை நானும் படிக்கலாம்தானே? படிப்பேன் அண்ணா, படித்து, சம்பாதித்து, அதன்பிறகு பார்த்துக் கொள்ளலாம். இந்த இருபது வயதில் திருமணமோ, அதற்காக எதையேனும் விற்பதோ தேவையில்லை என்பது, என் கருத்து.

''அத்தோடு, இது நம் அப்பா தொடங்கிய தொழில். நீ புத்திசாலி. எதையும் விட்டுவிட மாட்டாய் என்று சொல்லியிருக்கிறார். அது தொழிலையும் சேர்த்து தானே? அத்தோடு, இந்தத் தொழிலை நம்பி வாழும் இரு நூறுக்கும் அதிகமான தொழிலாளர்கள்! அவர்களுக்கு வேறு வேலையை கிடைக்காது என்று இல்லை. ஆனால், கஷ்டப்படுவார்கள். மறுவேலை கிடைக்கும்வரை, ஒரு கஷ்டம். அந்த வேலை படியும் வரை, இன்னொரு கஷ்டம். இந்த வாழ்வு பழகும்வரை, நாம் எவ்வளவு கஷ்டப் பட்டோம்? தன் தொழிலாளர்கள், அது போலத் துன் புறுவது, அப்பாவுக்குப் பிடிக்காது.

''எப்படியும், அப்பா தொடங்கியதை, நீ இடையில் விடுவது எனக்குப் பிடிக்கவில்லை. அதனால், விற்க வேண்டாம், அண்ணா'' என்று முடித்தாள் தங்கை.

''என் சின்னத் தங்கையா, பேசியது?'' என்று மூக்கின் மேல் விரலை வைத்தான் உடன் பிறந்தவன். ''சின்னப் பிள்ளையைப் போட்டு, வீட்டு வேலை, சமையல் என்று வாட்டுகிறோம் என்று, அவ்வப்போது கவலையாக இருக்கும். பார்த்தால், எனக்கு அக்காவாகப் பேசுகிறாயே!'' என்று வியந்தான் பெரியவன்.

அண்ணனின் பாராட்டு, தங்கைக்குப் பெருமிதத்தை அளித்தது. புன்னகை புரிந்தவாறே ''பார்த்தால், எப்படியண்ணா, கேட்கும்?'' என்று கிண்டலடித்தாள் மானசி.

கூடச் சேர்ந்து சிரித்தாலும், தமையனுக்கு ஒரு கலக்கம் இருந்தது. அதை வெளிப்படுத்தி, ''மனு, நீ நன்றாக யோசித்தாய் தானே? அண்ணனுக்காகப் பார்த்துக் கொண்டு, இப்படிச் சொல்லவில்லையே? ஏனென்றால், இதிலிருந்து பணம் எடுத்துச் செய்வது என்றால், அங்கிள் சொன்னது போல, பல ஆண்டுகளே ஆகிவிடலாம்'' என்று கவலையோடு கூறினான்.

''போண்ணா! நான் சொன்னதை, நீ கவனிக்கவே இல்லை. சொல்வதைக் காது கொடுத்துக் கேளாமல், வெறுமனே பார்த்தால், அப்படித்தான்'' என்று கேலி பேசி இறுக்கம் தளர்த்திவிட்டு, மேலே சொன்னாள் ''அண்ணா, எதிர்வீட்டு வசுக்கா மாதிரி என்றேனே. கவனிக்கவில்லையா? அக்காவுக்கு மாப்பிள்ளைப் பார்க்கப் போவதாக, வினயா சொன்னாள். அக்கா மாதிரி, படித்து சம்பாதிக்கும் ஒருவரை! இருவரின் வருமானமும் சேர்ந்தால், வளமாக வாழலாமாம். மேலே மேலே உழைத்தால், ரொம்ப உயரம் போகலாமாம். வினு நிறையச் சொன்னாள். அதற்குமேல், என்னண்ணா வேண்டும்? என்னதான் சண்டை போட்டாலும், வினுவுக்கு, வசுக்காதான்

'ரோல்மாடல்' எனக்கும் அப்படித்தான் அண்ணா'' என்று மானசி கூறக் கூற, பிரதீபன் மனமும் நிம்மதி அடைந்தது.

அந்த வசுந்தராவால் எப்போதும் நல்லதுதான் நடக்கிறது. இப்படி ஒதுங்கி ஓடுவதை நிறுத்தி, அவளுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

''நீ சொல்வது சரிதான், மனு'' என்றான் தங்கையிடம்.

சற்று யோசித்துவிட்டு, ''இன்னொன்று கூட அண்ணா'' என்றாள் தங்கை.

''என்னம்மா?''

''வந்து... பொதுவாக, அவர்கள் பற்றி நாம் பேசுவது இல்லை. ஆனால், அங்கே.. இருக்கிற சிறுவன், நமக்குத் தம்பிதானே, அண்ணா. இந்த இருவரும், சொத்து; தொழிலை விடப் பணத்துக்காக அவசரப்படுவதைப் பார்த்தால், எதுவும் அவனுக்குப் போய்ச் சேரும் போலவே தோன்றவில்லை. அதனாலும், இந்த விற்பனை விஷயம் எனக்குப் பிடிக்கவில்லை, அண்ணா'' என்றாள் மானசி.

உச்சந்தலையில் ஓங்கி அறைந்தது போல இருந்தது, பிரதீபனுக்கு.

இந்த யோசனை, அவனுக்கு வரவில்லையே!

முன்பொரு தரம், இதுபோல ஓர் எண்ணம், அவனுக்கு வந்ததுண்டு. ஆனால் அந்தச் சிறுவனுடைய தாயைப் பற்றி நினைத்து, அதை அலட்சியப்படுத்தி விட்டான்.

அப்புறம், நினைத்துப் பார்த்ததே இல்லை.

மனதுக்குள் தந்தையிடம் 'சாரி' சொல்லிவிட்டு ''நீ சொன்னது, சரிதானம்மா'' என்றான் தங்கையிடம்.

ஆனால், மனதுள் வேறோர் உறுத்தல் உண்டாயிற்று. இந்த மாதிரி ஆட்களிடம் பொறுப்பைக் கொடுத்து விட்டு, அந்தப் பெண் என்ன செய்கிறாள். வெளியே, தலையைக் காட்டக் கூடக் காணோமே!

ஒருவேளை, அவள் நல்லவளாக இருந்து, இந்த அண்ணன்மாரின் ஆதிக்கத்தில் மாட்டிக் கொண்டு, திண்டாடுகிறாளோ?

எப்படியும், ஏதோ ஒரு சமயத்தில், சொத்தோ, பணமோ கொடுக்கும்போது, அந்தச் சிறுவன் பேரில் வைத்து, அதை யாரும் தொட முடியாதபடி ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மனதுள் குறித்துக் கொண்டான் பிரதீபன்.

விற்பதாக இல்லை என்ற முடிவு, சகோதரர்களுக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது.

கோடிக் கணக்கில் கையில் பணம் வரும் என்றால், அதை வைத்து சந்தோஷமாக வாழ்வதை விட்டு, இப் படிக் கஷ்டப்பட்டு உழைப்பேன் என்கிறானே! இவன் என்ன கிறுக்கனா என்று பொங்கிப் பொருமினார்கள்.

பிரதீபனிடம் எவ்வளவோ வாதாடிப் பார்த்தார்கள். அவர்களுடைய தங்கை பணம் கேட்பதாகக் கூடச் சொல்லிப் பார்த்தார்கள்.

ஆனால், பிரதீபன் முடிவை மாற்றிக் கொள்வதாக இல்லை என்று தெளிவானதும், செயலற்று விழித் தார்கள்.

மானசி சொன்னதைக் கேட்டதும், வக்கீல் ஞான சகாயத்துக்கு ஒரு விதத்தில் பெருமகிழ்ச்சியே! மிஞ்சிய பணத்தால், வாழ்க்கையைச் சற்று அலட்சியமாக எண்ணிய பிள்ளைகள் பண்படும் விதம் குறித்து, உள்ளூர பெருமைப்பட்டார்.

இன்னமும், அவருக்குத் தன் நண்பரிடம் அவருக்கு நம்பிக்கையே. ஆனால், இடையே இந்த நிலை ஏற்பட்டது குறித்து அவரது வருத்தம், இப்போது மறைந்து போயிற்று.

இந்தத் துன்பங்கள் எல்லாம், வளர்ச்சிக்கான வலிகளே விளைவு நல்லதாக இருக்கும் போது, வலியைப் பெரிதாக நினைக்கலாமா? மிகப் பெரிய வலிதான். ஆனால், பிள்ளை வேண்டாம் என்று யாராவது சொல்வதுண்டா?

முதல் முயற்சியின் வெற்றியால், மேலும் பல 'ஆர்டர்' கள் கிடைத்து, தொழில் வேகமாக வளரலாயிற்று. தொழில் துறை நல்லபடியாக நடக்கலாயிற்று.

தொழிலாளர்களிடம் குசும், செய்ய வழியின்றி, முத்தையன் சகோதரர்களிடம், யாரும நின்று கூடப் பேசுவதில்லை என்று ஆகிவிட, அவர்கள், பல் பிடுங்கப்பட்ட பாம்புகள் போல ஆனார்கள். பிரதீபனிடம் பேரம் பேச ஆள் அனுப்பினார்கள்.

எல்லாம் எங்களுக்கே என்றவர்கள் 'தேவநாதனுக்கு இரண்டு மனைவிகள். சொத்துக்களை விற்றுப் பணத்தை பாதி பாதியாகப் பிரித்துக் கொள்ளலாம்' என்று இறங்கி வந்தார்கள்.

''என்னப்பா சொல்கிறாய்?'' என்று கேட்ட வக்கீலிடம் ''வீடும், தொழிலுமாக, அப்பாவின் சொத்து மதிப்பில், மூன்றில் இரண்டு பங்கு வருகிறது, அங்கிள். இரண்டில் எதை விடவும் எனக்கு மனமில்லை. மற்றதையும் கூட, எனக்கு சரியாகப்படவில்லை. அவர்களுக்கோ, கைக்கு வரும் காசுதான் பெரிதாகத் தெரிகிறது. அப்படிக் கொடுக்கக்கூடாது அங்கிள். இப்போதைய வாழ்க்கை நிலை எங்களுக்குப் பழகி போய்விட்டது. அதனால், இப்படியே, இன்னும் கொஞ்ச காலம் ஓடட்டும். அதன்பிறகு பார்ப்போம்'' என்றான், பிரதீபன்.

ஆனால், தந்தை எழுதிக் கொடுத்திருந்த உயிலின் சாராம்சத்தால், அவர்கள் தன் தலைக்கு மேல் தொங்கும் கத்தி என்பதை உணர்ந்திருந்த பிரதீபன், சகோதரர்களிடம் எச்சரிக்கையுடனேயே இருந்தான்.

வீட்டை பொறுத்த வரையில், வசுந்தராவுக்கு நன்றி சொல்வது, கொஞ்சம் தள்ளிப் போயிற்று.

தங்களைப் பற்றிய விவரங்களை மானசி தெரிவித்த பிறகு, அவர்களோடு முன்போலப் பேசிப் பழக, பிரதீபன் தயங்கினான். குன்றல், கூச்சம், அவமானம்... இன்னோரன்ன உணர்வுகள் அவனை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தன. முக்கியமாக வசுந்தராவிடம்.

அவளிடம் ஏற்கனவே இருந்த குற்ற உணர்ச்சியும் சேர்ந்து கொள்ள, எதிர்வீட்டுப் பக்கம், தலை தூக்கிப் பார்க்கவே தயங்கினான்.

ஆனால், ஒதுங்கிப் போவதும், அப்படி ஒன்றும் சுகமாக இருக்கவில்லை. அண்ணா, அக்கா, ஆன்ட்டி, பாட்டி என்று தோன்றிவிட்டிருந்த உறவுச் சூழல் ரொம்பவே தேவைப்பட்டது.

பாட்டி வெளியே பார்த்தபடி உட்கார்ந்திருப்பதும், மிகவும் குறைந்துவிட, உள்ளூர சஞ்சலமாக இருந்தது. அன்பான பெண்மணி, எப்போதும் முறுவலும், அன்பான வார்த்தைகளுமாக, அந்த முதியவளைப் பாராதது, பெரும் குறையாகத் தோன்றலாயிற்று.

பாட்டியம்மா பெரிதும் படுக்கையிலேயே இருப்பதாக, மானசி சொல்லவும், அவனுக்கு மனம் பதறியது.

மற்றதை மறந்து, உடனே முதியவளைப் பார்க்கப் போனான்.

தளர்ச்சி அதிகமாக இருப்பதால், ஓய்வாக படுக்க வைத்திருப்பதாகச் சொல்லி, பாட்டியின் அறைக்கு, அன்னபூரணி, அவனை அழைத்துப் போனாள்.

சோர்ந்திருந்த முகத்தில், அவனைக் கண்டதும் மலர்ச்சி ஏற்பட்டது.

''வாம்மா!'' என்று அருகில் அழைத்தாள். ''மானு எங்களிடம் எல்லாம் சொன்னது, உனக்கு வருத்தமாப்பா? அப்புறமாக, ஆளையே காணோமே!'' என்று நேரடியாகக் கேட்டாள்.

''பழைய கதை. எதற்குப் பாட்டி அனாவசியமாய்? அடியோடு மறந்து வாழ்வது நல்லது என்று நினைத்தேன்'' என்றான் அவன் முணுமுணுப்பாக.

அவனைப் புரிந்து கொண்டவள் போல, லேசாக முறுவலித்தாள் முதியவள். அவனது கையைப் பற்றித் தட்டிக் கொடுத்து ''நீ கவலைப்படாதேப்பா, கடவுள் உனக்கு நிச்சயமாக வழி காட்டுவார். கண் சிமிட்டினாற் போல, அந்த நேரம் வரும்போது, எல்லாம் சட்டென்று நேராகிவிடும். இடைப்பட்ட துன்பம் கனவாக மறந்து,

நீங்கள் இரண்டு பேரும் நன்றாக இருப்பீர்கள்'' என்றாள், ஆசீர்வதிப்பது போல.

புன்னகை மலர, ''நீங்கள் சொல்லும்போது, அப்படித் தான் நடக்கும் என்று, தென்பாக இருக்கிறது, பாட்டி!'' என்றான் பிரதீபன்.

''நடக்கத்தானே போகிறது!'' என்றாள் பெரியவள் சர்வ நிச்சயமாக.

சந்தோஷமாக சிரித்துவிட்டு, பிரதீபன் விடை பெற் றான்.

வழியனுப்ப வந்த அன்னபூரணியிடம் ''உங்கள் மூத்த பெண்ணை முன்னுதாரணமாகக் கொண்டு, மனு படிக்கப் போகிறாளாம். இருந்தால், நன்றி சொல்லலாம் என்று நினைத்தேன். எனக்காக, ஒரு தேங்க்ஸ் சொல்லி விடுகிறீர்களா, ஆன்ட்டி?'' என்று கூறி விடை பெற் றான் அவன்.

உடல் பயிற்சிக்காக காலையில் சற்று தூரம் ஓடிவிட்டு, அப்படியே பால் வாங்கி வருவான். அன்று பாலோடு திரும்பி வரும்போது, வசுந்தரா எதிரில் வந்தாள் ''என்ன சார், நன்றி சொல்லக் கூட தூதுக்கு ஆள் பிடிக்கிறீர் களே...!'' என்று நகை முகத்துடன் வினவினாள்.

சட்டென விடியல், வெகு அழகாகத் தோன்றியது, அவனுக்கு.

இவளிடம் சொல்லலாம், சொல்வதைப் புரிந்து கொள்வாள் என்ற நம்பிக்கை வந்தது.

''வந்து வசுந்தரா... அன்றைக்கு நான் ரொம்ப மடத் தனமாக...'' என்று தொடங்கியவனை இடைமறித்து, அவள் பேசினாள்.

''நான் கூட இது பற்றி யோசித்தது உண்டு, பிரதீபன். என்னடா கர்ம வீரராகச் செயல்படும் எதிர்வீட்டு இந்த இளைஞருக்கும், அந்த கார்க்கார பையனுக்கும் எந்த விதமான ஒற்றுமையுமே காணோமே, என்று ஆச்சரியப் படுவேன்! அவ்வளவு மாற்றம், ஏற்கனவே நேர்ந்து விட்டது! அதனால், உங்களுக்குச் சம்பந்தமே இல்லாத பழசைப் பற்றி நினைக்கக் கூட வேண்டாம், பிரதீபன். விட்டுவிடுங்கள்'' என்றாள் தெளிவும் உறுதியுமாக.

ஆனால், அவனுக்கு விளக்கம் சொல்லியாக வேண்டி யிருந்தது.

அவனுக்குக் கிடைத்த தண்டனை, அதன் வலி!

''அதில்லை, வசுந்தரா. அன்று உனக்குக் கோபமூட்டி, நீ ஆத்திரமும் வெறுப்புமாக, ரூபாய் நோட்டைக் கிழித்து வீசினாயே, அந்த நேரத்தில்தான், அதன் பிறகுதான் அப்பாவுக்கு இதயத் தாக்குதல் தொடங்கியிருந்தது. அப்பா... அப்பாவின் உயிர் பிரிந்தது, உனக்குச் செய்த தப்பின் பலன் என்று, எத்தனையோ முறை எண்ணி எண்ணி வேதனைப்பட்டிருக்கிறேன். ஆனால் பெரிய தண்டனை கொடுத்துக் கடவுள் எனக்குப் புரிய வைத் திருக்கிறார்!'' என்றபோது, அவன் கண்ணில் வலி தெரிந்தது.

''ஊகூம், அதெல்லாமில்லை தீபன்'' என்று அவள் வெகு வேகமாக மறுத்தபோதும், அவன் முகம் தெளிய வில்லை.

''உண்மையில், உன் இடத்தில் மானசியை வைத்துப் பார்க்கும்போதுதான், செய்த தப்பு முழுதாகப் புரிந்தது'' என்றான் அவன் குன்றலுடன்.

இந்த மறுகலை, எப்படி மாற்றுவது?

யோசித்துப் பேசினாள் வசுந்தரா ''இப்படி, எல்லா வற்றையும் ஒன்றோடொன்று தொடர்பு படுத்திப் பார்க் கக்கூடாது, பிரதீபன். அப்படியென்றால், உங்கள் தந் தைக்கு ஒன்றும் ஆகாமல் உயிரோடு இருந்திருந்தால், நீங்கள் செய்தது தப்பே இல்லை என்று ஆகிவிடுமா? அத்தோடு... அத்தோடு...''என்று மேலே சொல்வதறி யாது தடுமாறியவளுக்குச் சட்டென ஒன்று தோன் றியது.

''இதை, இப்படிப் பாருங்களேன், தீபன். பெற்றவரின் இழப்பு, அந்தத் துன்பமும், உங்கள் தங்கைக்கும் சேர்த்து தானே? அவள் செய்த எந்தத் தப்புக்கு, இந்தத் தண்டனை என்று காரணம் காட்டுவீர்கள்?'' என்று அவள் கேட் கவும், அவன் முகத்தில் திகைப்பு பரவியது.

உண்மைதானே? மானசிக்கு எதற்காக, எந்தக் குற்றத் துக்காக இந்தத் தண்டனை?

சிட்டுக்குருவி மாதிரி, சிரித்த முகத்தோடு, பாட்டும், பரதமும், படிப்பும், சினேகிதிகளுமாக, சந்தோஷமாக இருந்த அறியாப் பெண்.

அண்ணன் சொல்கிறான் என்பதற்காக, உடல் நோக எத்தனை வேலைகளை, மறுக்காமல் செய்கிறாள்! உடல் நோக! மனம் நோக! தலைவிதி தவிர, இந்த துன்பத் திற்கு, வேறு என்ன காரணம் சொல்வது?

''ம், சொல்லுங்கள், பிரதீபன்! இந்த வேதனையை அனுபவிப்பதற்கு, அவள் என்ன தப்பு செய்தாள் என்று, நீங்கள் சொல்ல முடியும்? எதுவும் இல்லைதானே?''

இல்லைதான் என்பது போல, அவன் தலையசைக்க, வசுந்தரா தொடர்ந்து பேசினாள்.

''அவரவர் விதி முடிகிற நேரம், முடிந்துதான் தீரும் பிரதீபன். காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது என் பதுபோல், அதனால், இதனால் என்று இதற்கெல்லாம் காரணம் சொல்லக்கூடாது! என்ன, புரிகிறதா?'' என்று சிறு கண்டிப்புக் குரலில் கேட்டாள் அவள்.

கண்களின் வலி பெரிதும் மறைந்துவிட, வியப்புடன் அவளைப் பார்த்தான் பிரதீபன். லேசாக முறுவலித்து, ''நன்றாகப் புரிகிறது மேடம். மற்ற எதையும் விட, நீங்கள் ஒன்று சொன்னால், மறுத்துப் பேசாமல் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று மட்டும் ரொம்ப நன்றாகப் புரிகிறது!'' என்று சிறு கேலி போலப் பதிலும் சொன்னான்.

அதை ஏற்பதுபோலத் தலையசைத்து ''அப்படி யானால், கையில் இருக்கும் பால் தயிராகுமுன், அதைக் கொண்டு போய் மானசியிடம் கொடுத்துக் காய்ச்சச் சொல்லுங்கள்'' என்று அவள் போலி அதிகாரத்துடன் ஏவ, ''உத்திரவு தாயே!'' என்று அவன் பணிவாகத் தலை தாழ்த்த, இருவரும் சிரித்தபடியே வீடு திரும்பினர்.

தொடர்ந்த சில நாட்கள், தெளிந்த நீரோடையின் இனிய சலசலப்புடன் சந்தோஷமாக கழிந்தன.

வசுந்தரா இல்லாத நேரம் பார்த்து எதிர்வீட்டுக்குச் செல்வது மாறி, தினமும் ஒரு தரமேனும், பாட்டியைப் போய்ப் பார்த்து வருவது, பிரதீபனின் வழக்கமாயிற்று.

மானசியும், வினயாவும் இரவு நேரம் தவிர, இருவரும் ஒரே வீட்டிலேயே இருந்தனர்.

'எதிர்வீட்டு அக்கா போல' என்று உதாரணம் காட்டியதை மறவாமல், ஒருநாள் தன் மேல் படிப்பு பற்றி, மானசி அண்ணனிடம் விசாரித்தாள்.

''வினயா போல, நானும் படிக்கத் தொடங்க முடியுமா, அண்ணா? அல்லது, இந்த ஆண்டு கட்டாயம் வீணாகி விடுமா?'' என்று கவலையோடு கேட்டாள்.

தங்கையின் கேள்வி, பிரதீபனுக்கு மகிழ்ச்சியை அளித்தது.

தங்கை சும்மா ஒரு வேகத்தில் சூளுரைக்கவில்லை. உண்மையாகவே உணர்ந்துதான் சொல்லியிருக்கிறாள்!

''ஒன்றும் வீணாகாதும்மா. இன்று வினயா படிக்க வரும்போது, நீயும் ஒரு நோட்டுப் புத்தகத்தோடு வந்து விடு'' என்று சொல்ல, அவள் முகம் மலர்ந்தது.

''அப்படியே வினயாவைப் பிடித்துப் போய் எதிர் வீட்டு அக்காவிடமும் படி. 'க்வாண்ட்ஸ்' பகுதி, அந்த அக்காவுக்குத்தான் ரொம்ப நன்றாக வரும்'' என்றான்.

பாட்டியும் கொஞ்சம் தென்பாக எழுந்து உட்காரவும், எல்லோருக்குமே மகிழ்ச்சியாக இருந்தது.

இடையில் சம்பந்தம், அதிகப்படியாக ஒரு தரம் வந்து, தாயாரைப் பார்த்துவிட்டுப் போனார்.

தாயும், மனைவியும் சேர்ந்து நிறையச் சொல்லி இருந்ததாலோ என்னவோ, பிரதீபன் வாங்கிப் போன சாத்துக்குடிப் பழங்களை, முகம் சுளிக்காமலே வாங்கி, உள்ளே வைக்கும்படி மனைவியை ஏவினார் சம்பந்தம்.

''அப்பறம் தொழில் எப்படி நடக்கிறது?'' என்று பொதுவாகக் கேட்டார்.

அவருக்கு எந்த அளவு விவரம் தெரியும் என்று தெரியாததால், பிரதீபனும், ''இப்போது பரவாயில்லை, சார்'' என்று பொதுப்படையாகவே பதில் சொன்னான்.

''தலைவிதி! சில சமயம், நம்மை எங்கேயோ கொண்டு விட்டு விடுகிறது. ஆனால், நீங்கள் நல்ல குணம், கெட்டிக்காரர் என்று அம்மா சொன்னார்கள். எல்லாம் சரியாகி, பழைய நிலை சீக்கிரமே வந்துவிடும். கவலைப்பட வேண்டாம்'' என்று அவர் எழ, குறிப் புணர்ந்து, அவனும் விடை பெற்றுச் சென்றான்.

பரவாயில்லை! இந்த அளவுக்கு, எதிர்வீட்டுக்காரர் உட்கார வைத்துப் பேசினார் என்றால், அவனுக்கு ஆதரவாக, வீட்டில் பயங்கரமாகப் பேச்சு நடந்திருக்க வேண்டும்.

அதிலும், பாட்டியின் அபிப்பிராயம்தான், அவரை இவ்வளவு இளக வைத்திருக்க வேண்டும் என்பது நிச்சயம்.

ஆனால், பாட்டியைப் பேச வைத்தது, வசுந்தராவாக இருக்குமோ?

அப்படி இருக்க வேண்டும் என்று, பிரதீபன் ஆசைப் பட்டான்.

அந்த முறை வேலையின் பொருட்டு வெளியூருக்குக் கிளம்புமுன், வசுந்தராவுடைய தந்தை, அவர் வீட்டுக்கு வந்தார். தாயாரின் உடல்நிலை, சற்றுக் கவலையைத் தருவதாகச் சொன்னார்.

''அவ்வப்போது, எங்கள் வீட்டையும் சற்று எட்டிப் பார்த் துக் கொள்ளுங்கள், பிரதீபன். பெண்களாகத் தனியே இருக்கிறார்கள். அவர்களைத் தனியே விட்டுப் போகும்

படி, என் வேலை அப்படி. என் அம்மாவுக்கும், உங்களிடம் தனிப் பிரியம். பார்த்தால் சந்தோஷப்படுவார்கள். அன்று மாதிரி வீட்டில் ஏதாவது தேவை என்றால் முதலில் உங்களிடம் உதவி கேட்கச் சொல்லியிருக்கிறேன். கவனித்துக் கொள்ளுங்கள்'' என்று கூறி விடை பெற்றார், அவர்.

அவரது கண்கள் லேசாகக் கலங்கியிருப்பதைக் காண, பிரதீபனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

கட்டாயமாகப் பாட்டியைக் காண, அடிக்கடி வந்து போவதாக வாக்களித்தான் அவன். தேவையான உதவிகளைச் செய்வதாகவும்.

கொடுத்த வாக்கை நிறைவேற்றவும் செய்தான். சும்மாவே, அவன் செய்ததுதானே? இப்போது, உரிமையோடு என்ன வேண்டும் என்று அவனால் கேட்க முடிந்தது.

புது ஆர்டர் ஒன்றின் தொடர்பான பேச்சு வார்த்தைக்காக பிரதீபன் அன்று சீக்கிரமாகவே, தொழிற்சாலையிலிருந்து கிளம்ப வேண்டியிருந்தது.

ஒப்பந்தம் முடிவானபோது, அதற்குமேல், தொழிற்சாலைக்குச் சென்று பயனில்லை என்று, வீட்டுக்கே திரும்பிச் சென்றான்.

கல்லூரி 'ப்ராஜெக்ட்'டுக்காக ஏதோ வாங்கவென்று கடைக்குச் செல்லும் வினயாவோடு, தானும் செல்லப் போவதாக, மானசி கூறியிருந்தாள்.

திரும்பி வந்திருப்பாளா?

யோசித்தபடியே, ப்ளாட் பக்கம் திரும்பியவன், எதிர் வீட்டு வாயிலில், சுண்ணாம்பாய் வெளுத்த முகத்

துடன், உடம்பெல்லாம் உதறிக்கொண்டு நின்ற வசுந்த ராவைக் கண்டு திகைத்து ''என்னம்மா?'' என்று ஒரெட் டில் அவளை அணுகி, வினவினான்.

10

பிரதீபனை விழி உயர்த்திப் பார்த்த போதும், வெறு மனே வாயைத் திறந்து திறந்து மூடினாளே தவிர, வசுந்தராவால் உருப்படியாக எதையும் சொல்ல முடிய வில்லை.

கைகள் மட்டுமின்றி உடல் முழுவதுமே நடுங்க, கீழே விழுந்து விடுவாள் போல அவள் தள்ளாடவும், பிரதீபன் சட்டென, அவளைத் தன்னோடு சேர்த்துப் பிடித்து, அவளது வீட்டினுள் அழைத்துச் சென்றான்.

அவளை அணைத்தவாறே நின்று, ''வசுமா, என்ன விஷயம்? என்ன ஆயிற்று? சொல்லு'' என்று அவளை லேசாக் உலுக்கிக் கேட்டான்.

காற்றாகிப் போன குரலே என்றாலும், இப்போது அவ ளால் பேச முடிந்தது ''பா.. பாட்டி... ஐயோ, பாட்டி.''

''பாட்டிக்கு என்ன?'' என்றான் அவன் பதற்றத்துடன்.

''பா..ட்டி, இ... இல்லை... இறந்து...''

''வசுந்தரா!''

''ஆ.... ஆமாம், தீபன், என் கையைப் பிடித்து, ஏ...ஏதோ பேசி... பேசிக் கொண்டுதான் இருந்தார்கள். திடீரென்று... எல்லாம் அ...ப்படியே தொ..தொய்ந்து.. ஐயோ தீபன்.. ஐயோ தீபன்...'' என்று வலுவற்ற குரலில் அவள் கதறினாள்.

அவளை அப்படியே விட்டுவிட்டுப் பாட்டியின் அறைக்குள் ஓடினான், அவன்.

அரைக் கண் மூடித் தூங்குவது போல, அங்கே அவன் செய்வதற்கு எதுவுமில்லை.

ஆசீர்வதிப்பது போல, அன்று பெரியவள் பேசியது நினைவு வர, தொண்டை அடைத்தது, அவனுக்கு.

தனித்திருக்க முடியாதவள் போல, உள்ளே வந்து, அவனோடு ஒட்டிக் கொண்டு நின்றாள் வசுந்தரா.

''ஆன்ட்டி எங்கே?''

''வி.. வினுவுக்கு என்னவோ வாங்க வேண்டும் என்று.. பாட்டி கொஞ்சம் பரவாயில்லாமல் பேசிக் கொண்டு இருந்தார்கள். எனக்கும் 'ஷிம்ப்ட்' மாறி, நான் வீட்டில் இருந்ததால், பாட்டிக்குத் து..துணையாக என்னை விட்டுவிட்டு.. ஐயோ பிரதீபன். பாட்டியை உலுக்கிப் பார்த்தேன். முகத்தில் தண்ணீர் தெளித்துப் பார்த்தேன்... பிறகு பார்த்தால் மூ..ச்சு... ஒன்றுமே, ஒன்றுமே இல்லையே!'' என்று கேவினாள் வசுந்தரா.

தோளோடு சேர்த்து, அவளைத் தட்டிக் கொடுத்தான் பிரதீபன்.

அவனுக்குத் தந்தையின் நினைவு வந்தது. அவருக்கு நேர்ந்தது 'பெரிய அட்டாக்!' தன் நிலைமை புரிந்து,

மகனைத் தேடித் தேடி.. ஆனால், இதில் யாரும் எதுவும் செய்வதற்கு ஒன்றுமே கிடையாது!

போகிறவர்கள் என்றாலும், சரி, இருக்கிறவர்கள் என்றாலும் அப்படித்தான்!

''அப்பா, அம்மா செல் நம்பர் கொடும்மா!''

கெட்டவர்கள் என்றாலுமே, மரணம் நல்லதை மட்டும் நினைக்க வைத்துவிடும். எல்லோருக்கும் நல்ல உறவாயிருந்த பாட்டியின் பிரிவு, குடும்பத்தில் எல் லோரையும் அதிகம் பாதித்தது.

உற்றார், உறவினர் வந்து, சடங்கு சம்பிரதாயங்கள் எல்லாம் முடிந்து, அவரவர் இடம் நோக்கிப் பிரிந்து சென்றார்கள்.

உறவு என்று எதுவும் இல்லாவிட்டாலும், மானசியும் பிரதீபனுமே, மிகவும் வேதனைப்பட்டார்கள். தோன்றாத் துணையாக, எதிர் வீட்டினருக்கு, அவர்களால் ஆன உதவியெல்லாம் செய்தார்கள். உண்ண, அருந்த ஏதா வது செய்து கொண்டு போய்க் கொடுத்ததோடு, வற் புறுத்தி, உட்கொள்ளவும் வைத்தார்கள்.

சம்பந்தமே, அது பற்றி குறிப்பிட்டு நன்றி தெரிவிக் கும் அளவுக்கு, உதவினார்கள்.

வாழ்க்கைப் பாடு இருக்கிறதே!

மறுநாள், இரு வீட்டினருமே, அவரவர் தொழில், வேலை, கல்லூரி என்று கிளம்புவதாக இருந்தது.

அன்றிரவு, திடுமென சம்பந்தத்தின் குரல் உரக்கக் கேட்டது.

''இப்போது, இதுதான் முக்கியமா? நானே, தவித்துக் கொண்டு இருக்கிறேன்! இது வேறு, அலறல்!'' என்ற கத்தலை, ஏதோ தரையில் வீசப்பட்டு நொறுங்குவது போன்ற சத்தம் தொடர்ந்தது.

கண்ணீர் குரலில், வசுந்தரா ஏதோ சொல்வது, தெளி வற்றுக் கேட்டது. கூடவே அன்னபூரணியும்.

போய்ப் பார்க்கலாமா என்று பிரதீபன் யோசிக்கும் போதே, சம்பந்தம் தணிந்துப் பேச, விசிப்பும், அழுகை யும் தொடர்ந்தன.

பாட்டியின் மறைவோடு சேர்ந்த, உணர்ச்சிகரமான ஒரு குடும்ப விவகாரம். இதில், அடுத்தவர் தலை யிடுவது சரியாகாது என்று உணர்ந்து, நீர்த்திரையிட்ட கண்களுடன், அண்ணனும் தங்கையும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி வெகுநேரம் பேசாமல் அமர்ந்திருந் தனர்.

பிறகு படுக்க செல்லுமுன்னும், மறுநாள் கிளம்பும் வரையும் கூட, சிறு குரலில் பாட்டி, எதிர்வீடு, பற்றித் தான் இருவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

முந்திய நாள் கத்தியதற்கு ஈடு செய்ய முயற்சிப் பவர்போல, இரு மக்களையும், கல்லூரியிலும் வேலை இடத்திலும் கொண்டு போய் விட்டுவிட்டு, அதன் பிறகே, சம்பந்தம் கிளம்பிப் போனார்.

இடையில் ''முடிந்தால், கொஞ்சம் பார்த்துக் கொள் ளுங்கள், பிரதீபன்'' என்று அவனிடம் ஒரு வார்த்தை யோடு.

நல்லவேளையாகத் தந்தை தேவநாதனால் உருவாக்கப் பட்டிருந்த தலைமை நிர்வாகி, திடமும் திறமையும்

கூடவே விசுவாசமும் உள்ளவராக இருந்ததால், எதிர் வீட்டுத் துயரத்தில் பங்கேற்று, பிரதீபன் அதிகம் வரா திருந்தபோதும், தொழிற்சாலை நல்ல விதமாகவே இயங்கிக் கொண்டிருந்தது.

புதிய ஒப்பந்தங்களுக்கான வேலைகளும் தொடங்கி நடந்து கொண்டிருந்தன.

செல்போன், லாப்டாப் இரண்டின் மூலமாக அவன் கொடுத்து வந்த உத்திரவுகள், அப்பழுக்கின்றி நிறை வேற்றப்பட்டிருந்ததைக் காண, அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

அங்கங்கே தொழிலாளர்களோடு நின்று பேசியவாறே வேலை நடப்பதைச் சுற்றிப் பார்த்துவிட்டு, தொடரும் வேலைகள் பற்றி ஃபோர்மேனிடம் கூறிவிட்டு, நிர்வாகி யுடன் பிரதீபன் தன் அறைக்குத் திரும்பி வந்தான்.

நிதிப் பொறுப்பாளரையும் அழைத்து, மூவருமாக, தொடரும் வேலைகளுக்கான பணக் கணக்குகளைப் பற்றித் திருப்திகரமாகப் பேசி முடித்தார்கள்.

சற்று சீக்கிரமாக வீடு திரும்ப வேண்டியிருப்பதை எண்ணி, அவனது கையெழுத்துக்காகக் காத்திருந்த ஃபைல்களை அவசரமாகப் பார்த்துப் பிரதீபன் கையெழுத் திட்டுக் கொண்டிருந்தபோது, அவனது தலைவலி சகோதரர்களுள் மூத்தவன், தலைக்குமேல் தொங்கிக் கொண்டிருக்கும் கத்திகளில் ஒன்று, அவனிடம் வந்து சேர்ந்தான்.

எதிர்பார்த்ததுதான்.

ஆனால், இவ்வளவு நேரம் வராததால், வக்கீலிடம் அவ்வளவு தெளிவாகச் சொன்னதால், மேலே செய்வது

அறியாது ஒதுங்கி விட்டார்களோ என்று ஒரு நப்பாசை அவனுள் தோன்றியிருந்தது. அத்தோடு, தொழிலாளர் களிடமும், அவர்களது சிலுமிஷம் பலிக்கவில்லை தானே?

ஆனால், அவர்களது அடுத்த முயற்சியாக, ''எங்க தங் கச்சி, உன் கூடப் பேச வேணுமின்றா'' என்றான் முத் தையன்.

பிரதீபனுக்குச் சற்று அதிர்ச்சிதான்.

இன்றுவரை, அந்தப் பெண்மணி முகமோ, குரலோ காட்டியதில்லை. அண்ணன்மார் போல இல்லாமல், ஒதுங்கிப் போகிற குணமோ என்ற முடிவுக்குப் பிரதீபன் வருகிற நேரம், தலையை நீட்டுகிறாளே.

''இப்போது எனக்கு வேலை இருக்கிறது. அப்புறமாகப் பேசுகிறேன்'' என்றான் பிரதீபன் அடுத்த ஃபைலைப் பிரித்தபடி.

''என்ன, உன் சின்னம்மாகூடப் பேச ஒனக்குப் பயமா?'' என்று முத்தையன் ஏளனமாகக் கேட்கவும், அவனுக்குக் கோபம் வந்தது.

''ஷட் அப்'' என்றான் பிரதீபன் ஆத்திரமாக ''கல் யாணமே இல்லாமல், என் அப்பாவோடு உன் தங்கை வாழ்ந்ததாகச் சொல்லும், உனக்கே பயமில்லாதபோது, எனக்குப் பயம் வருவானேன்?'' என்று சீறினான்.

''அப்ப, உடனே பேசு'' என்று மடக்கினான் முத் தையன்.

என்னவோ உறுத்தியது, பிரதீபனுக்கு.

இந்த நிமிஷமே பேசுவது, அப்படி என்ன முக்கியம்?

''உன் தம்பி ரத்னவேல் எங்கே?'' என்று விசாரித்தான்.

''அத்தைப் பத்தி, நீ எதுக்குக் கேட்கிறே?'' என்று பதில் கேள்வி வந்தது.

முத்தையனின் சின்னக் கண்கள், இங்குமங்கும் அலைந்தன. அதாவது, நேரடிப் பார்வையைத் தவிர்க்கிறான், ஏன்?

அவன் முகத்தையே கவனித்தபடி ''ஒட்டிப் பிறந்தவர்கள் போல, எப்போதும் சேர்ந்தே வருவீர்களே, தம்பி இல்லாதவேளை பார்த்துத் தனித்து வந்திருப்பதைப் பார்த்தால், சந்தேகமாக இருக்கிறது. ரத்தினவேலுக்குத் தெரியாமல், உன் தங்கையும் நீயும் ஏதாவது, ரகசியடலா?'' என்று வினவினான் வயதில் இளையவன்.

''அடப்பாவி!'' என்றான் முத்தையன் ''ரத்தினம், என் தங்கச்சி கூடத்தான் இருக்குது.''

''ஏன்?''

''என்ன சும்மா நொணநொணங்கிறே? ஒன் கூடத் தனியாகப் பேச என் தங்காச்சி பயப்படும். பயத்திலே ஏதாச்சும் உளறிக் கொட்டிடக் கூடாது, பாரு. அதான் தம்பி, வூட்டிலே, செல்வி கூடவே தொணையிருக்குது.''

பயமென்ன, பயம்? ஒரு பெரிய மனிதனின் பலவீனத்தைப் பயன்படுத்தி, அவருடைய பிள்ளைகளை மோசம் செய்து, அவரது ஒட்டு மொத்தச் சொத்துக்களையும், தனக்கும் தன் பிள்ளைக்குமாக எழுதி வாங்கத் தெரிகிறது! இந்தம்மா, பயத்திலே உளறிக் கொட்டி விடுவாளாமா?

இருந்திருந்தது, அவர்களுடைய தங்கை!

அல்லது... இவர்களுக்குத் தெரியாமல், பிரதீபனோடு தங்கை தனிப்பட ஏதேனும் ஒப்பந்தம் பண்ணிக் கொள்வாளோ என்ற பயத்தில், கண்காணிக்கப் போயி ருக்க... இல்லை, அப்படித் தனித் திட்டம் தீட்டுவதானால், இவர்கள் யாரும் வீட்டில் இல்லாத, இந்த எத்தனையோ நாட்களில், அந்தப் பெண், அதை எளிதாகச் செய்திருக் கலாம்.

ஆனால் 'பயத்'தையும் அவனால் ஒத்துக் கொள்ள முடியவில்லை.

இவர்கள் ஏதோ திட்டம் போட்டு, அதன்படி அவளை ஆட வைக்கிறார்களா?

என்னப்பா, ஒன்றுமே புரியவில்லையே! இப்படிப் பட்ட மனிதர்களோடு, நீங்கள் எப்படியப்பா சகவாசம் வைத்தீர்கள் என்று, வழக்கம்போல மனதுள் புலம்பினான் பிரதீபன்.

கண்மூடி, மனதுள் தந்தையிடம் அவன் முறையிட்ட வினாடிகளைப் பயன்படுத்தி செல்லில் எண்களை அழுத்தத் தொடங்கினான் முத்தையன்.

''அடிக்குது பேசு'' என்று அவன் நீட்டிய செல்லை வாங்கி, அணைத்துக் கீழே வைத்தான் பிரதீபன்.

''என்ன நீயி...'' என்று ஆத்திரத்துடன் பேசத் தொடங்கியவனைக் கை உயர்த்தித் தடுத்து, ''இதோ பார்... இன்னும் அரை மணி நேரம், எனக்கு முக்கியமான வேலை இருக்கிறது. அதை முடித்த பிறகுதான், நான் யாருடனும் பேச முடியும். போய்விட்டு அரை மணி

நேரம் கழித்து வா'' என்று மறுபடியும் ஃபைலை எடுத்தான் பிரதீபன்.

''சின்னாத்தா என்கிற மருவாதியே, இல்லியே!'' என்றான் முத்தையன், கோபமாக.

''மண்ணாங்கட்டி!'' என்று பதிலுக்குச் சீறினான், பிரதீபன். ''இன்னொரு தரம் இப்படிச் சின்னாத்தா, கண்ணாத்தா என்று சொல்லிக் கொண்டு, வந்தால், அறைக்கு... தொழிற்சாலைக்கே வெளியே நிறுத்தி விடுவேன். போ, போப்பா! போய்விட்டு, அரை மணி நேரம் கழித்து வா. அப்புறமாக, உன் தங்கையுடன் பேசுகிறேன். அதற்கு முன்பாக வந்து தொல்லை செய்யாதே. இது, முக்கியமான வேலை'' என்றான்.

''இத்த நெலமா விக்கலாம்னாலும், விட மாட்டேன் என்கிறே, பாரு. என்னா கஸ்டப்பட்டு வேலை செய்கிறே! எனக்கே, ரொம்ப பா...வமா இருக்கு!'' என்று அந்த முதலை கண்ணீர் விட்டது.

பார்த்து முடித்த இடத்தில், அடையாளத்துக்கு விரலை வைத்துக் கொண்டு, பிரதீபன் நிமிர்ந்து பார்த்தான்.

''நீ பேசுகிற ஒவ்வொரு நிமிஷமும், என் வேலை நேரத்தை நீட்டிக் கொண்டே போகும், நினைவிருக்கட்டும்'' என்று அமர்ந்த குரலில் அவன் கூற, திறந்த வாயை டக்கென்று மூடிக் கொண்டு, எழுந்து சென்றான் முத்தையன்.

சரியாக அரை மணி நேரத்தில் வந்து விடுவான். கட்டாயமாக வருவான். ஆனால், அப்போதைக்கு, வெற்றி

பெற்ற உணர்வு தோன்றுவதை, பிரதீபனால் அடக்க முடியவில்லை!

சொன்னது போலச் சரியாக அரை மணி நேரத்தில், முத்தையன் வந்து, அவனிடம் செல்லை நீட்டினான்.

மறுத்துக்கொண்டே இருக்க முடியாது. எப்படியும், பேசித்தான் ஆக வேண்டும் என்றால், அதை இப்போது செய்வதில் பிரச்சினை இல்லை!

''சொல்லுங்கள்'' என்றான் சுருக்கமாக.

அந்தப் பெண் பேசத் தொடங்கியதும், ஸ்பீக்கர் ஒலிக்கவும், அதை நிறுத்தினான் பிரதீபன்.

''ஏஏஏ... என் தங்காச்சி பேசுறத, நான் கேட்கணும்பா, சத்தமா வையி'' என்று முத்தையன் பதறினான்.

எதற்கு இந்தப் பதற்றம்?

ஒன்றுமில்லாமல் இருக்கலாம். அல்லது...

எப்படியும், முத்தையன் விரும்புவது, தனக்குச் சாதகமாக இருக்காது என்ற நிச்சயத்தில் தலையசைத்து மறுத்துவிட்டு ''சொல்லுங்கள்'' என்றான் அவன் மறுபடியும்.

அவனது குரல், அங்கே ரீங்கரித்தது. அதாவது, எதிர் முனையில் ஸ்பீக்கர் ஆன் பண்ணப்பட்டிருந்தது. அதாவது, ரத்தினவேல் கேட்டுக் கொண்டிருக்கிறான்.

செலவுக்குச் சிரமமாக இருப்பதால், பணம் அதிகம் தேவைப்படுகிறது, என்றாள் அவள். ஏதாவது சொத்தை விற்று, ஆளுக்குப் பாதியாகப் பிரித்துக் கொள்ள, அவள் தயாராம். எப்படியும், முதல் மனைவியுடைய பிள்ளை

என்பதால், ஒரு நியாய புத்தியில் பாதியைத் தர, அவள் முன் வந்திருக்கிறாளாம்.

''இந்த புத்தி, சொத்தை முழுவதுமாக எழுதி வாங்கும்போது, இல்லையே?''

''அது.. அது'' என்று சற்றுத் திணறிவிட்டு, ''அது உங்க அப்பாதான் அப்படி எழுதி விட்டாரு'' என்றாள் அவள்.

''நம்ப முடியாது'' என்றான் பிரதீபன்.

''என்னாத்த நம்ப மாட்டே? செல்வி என்ன சொல்லிச்சு?'' என்று தவித்தான் முத்தையன்.

அவனை அலட்சியம் செய்து ''அப்புறம்?'' என்றான் பிரதீபன்.

''வந்து.. வந்து... பணம் வேணும்.''

''எதற்கு?''

''அது... செ... செலவுக்கு...ன்னு சொன்னேனே.''

அவளாகச் சொல்லவில்லை. யாரோ... பக்கத்தில் இருந்து, அவள் அண்ணன், இன்னொருவன் சொல்லிக் கொடுக்கிறான்? அவளென்ன, அவ்வளவு பேக்கா?

''என்ன செலவு?'' என்று வேண்டும் என்றே துருவினான் பிரதீபன்.

''என்ன செலவா? எத்தினியோ இருக்கும். துண்ண வாணாமா? உடுக்க வாணாமா? இன்னும்...''

''ஷ்!'' என்று முத்தையனை அடக்கிவிட்டு ''சொல்லுங்கள், என்ன செலவு?'' என்று அழுத்தமான குரலில் பிரதீபன் கேட்டான்.

சிறு தயக்கத்தின் பின் முத்தையன் பேச்சே, எதிர்முனையிலிருந்தும் எதிரொலித்தது.

''ஏன், இந்தச் செலவுகளை உங்கள் அண்ணன்மார் செய்ய மாட்டார்களா? அதற்காகத்தானே, செலவுக்கு உங்களிடம் தருவதாகச் சொல்லித்தானே, இங்கிருந்து பணம் எடுத்து வருகிறார்கள்? தருகிறார்களா? இல்லையா?''

''குடுக்குறோமே, குடுக்குறோமே!'' என்று முத்தையன் சொன்னதையே ''அ... அது தருகிறாங்க, தருகிறாங்க'' என்று அந்தப் பெண் குரலும் திருப்பிப் படித்தது.

அண்ணன்மாரின் ஆதிக்கத்தில் இருக்கும் அந்தப் பெண், அவர்கள் விருப்பம் போல ஆடுகிறாள் என்று, பிரதீபனுக்கு நிச்சயமாயிற்று.

''அப்புறம் என்ன?'' என்று சற்றுக் கடுமையான குரலில் கேட்டான்.

''ஒன்றும் இல்லை'' என்றவள், உடனே மாறி ''இல்லையில்லை. பையன் செலவுக்குப் பணம் வேணும்'' என்றாள்.

''அதென்ன செலவு?''

தங்கை பேசிய வார்த்தைகள் தெரியாததால், ''எது? எது? எதுப்பா? எந்தச் செலவு? நீ எத்த கேட்கிறே?'' என்று முத்தையன் பதற, வழக்கமான சிறு தயக்கத்தின் பின், ''அருளோட பள்ளிக்கூடச் செலவு, பள்ளிக்கூட வேன் செலவு... துணிமணி... இப்படி'' என்று அவன் தங்கை, பிரதீபனிடம் ஒப்பித்தாள்.

''எந்தப் பள்ளி, வகுப்பு எல்லாம், உங்கள் அண்ணன்களிடம் எழுதி அனுப்புங்கள். பள்ளியில் நான் கட்டி

விடுகிறேன். இதற்கு மேல், எனக்குப் பேச நேரமில்லை. வைத்துவிடுங்கள்'' என்று பேச்சை முடித்துவிட்டான் பிரதீபன்.

சாவி கொடுத்தால் ஓடுகிற பொம்மை மாதிரி, பக்கத்தில் இருந்து, அண்ணன் சொல்வதையே திருப்பிச் சொல்லுகிறாளே, இவளுக்கு என்ன சுய புத்தியே கிடையாதா என்று உள்ளூர எரிச்சல் மண்டியது, அவனுக்கு.

இந்த மாதிரி ஓர் அசமஞ்சமும், துடிப்பும் உற்சாகமுமான அப்பாவும்! சேர்த்து நினைத்துப் பார்க்கக் கூட பிரதீபனால் முடியவில்லை!

என்ன, என்ன சொன்னாள் என்று தொணதொணத்த முத்தையனிடம் ''வீட்டுக்குப் போய், தம்பி, தங்கையிடம் கேட்டுத் தெரிந்து கொள். இந்தக் கதையெல்லாம் உன்னிடம் விளக்கிக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை'' என்று தீர்மானமாகக் கூறிவிட்டு, மேஜையை ஒதுக்கலானான்.

சற்று நின்று பார்த்துவிட்டு முத்தையன் சென்றுவிட, செல்லில் மணி பார்த்தவனுக்கு சிறு எரிச்சல் வந்தது.

இன்று சற்றுச் சீக்கிரமாக வீட்டுக்குப் போய்விட வேண்டும் என்று நினைத்திருந்தான். இந்தத் தொல்லை பிடித்த குடும்பத்தால், நிறைய நேரம் வீணாகிவிட்டது.

இப்போதும், உடனே பஸ் கிடைத்தால், சரியான நேரத்துக்குப் போய்ச் சேர்ந்து விடலாம்.

தலைமை நிர்வாகியை செல்லில் அழைத்து, பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு, வேகமாக கிளம்பிச் சென்றான்.

அவனது அவசரத்தைப் பார்த்துவிட்டு ''வேண்டு மானால், என் வண்டியை எடுத்துப் போங்கள், சார். நான் வேறு எதிலாவது சேர்ந்து போய்க் கொள்ளுகிறேன்!'' என்றார் தலைமை நிர்வாகி.

மறுத்துவிட்டான் பிரதீபன் ''வேண்டாம், மானேஜர் சார். அப்புறமாக, அந்த சுகத்துக்கு மனம் ஏங்கத் தொடங்கி விடும். எதற்கு, அனாவசியமாக?'' என்று கூறிவிட்டு, நடந்து சென்றான்.

அவன் கண் மறையும் வரை பார்த்திருந்துவிட்டு, ஒரு வருத்தமான தலையசைப்புடன், நிர்வாகி, தன் வேலையைப் பார்க்கப் போனார்.

பாதி தூரம் ஷேர் ஆட்டோவிலும், மீதியை பஸ்சிலு மாகப் பயணம் செய்து, எண்ணியதை விடவும் சீக்கிர மாகவே, பிரதீபன் வீடு வந்து சேர்ந்துவிட்டான்.

மானசி தூங்கும் நேரம். அதிகாலையில் விழித்து எழுந்து, வீட்டு வேலைகளை முடித்துவிட்டுக் கல்லூரிக் குச் சென்று திரும்புகிறவள், சற்று ஓய்வெடுக்கும் பொழுது!

அவளை எழுப்பி விடாமல், பிரதீபன் மெல்ல வீட் டின் உள்ளே செல்ல வேண்டும்.

அல்லது, வெளியே காத்திருக்கலாமா என்று யோசித்தவாறு, சற்று மெதுவாகவே, மாடிப்படிகளில் ஏறி வருகையில், அவனது செல்போன் ஒலியெழுப் பியது.

ஏதோ, பொதுத் தொலைபேசி மூலம், யாரோ அவனை அழைத்திருந்தார்கள்.

முகமறியாத யாரோவுடன் பேச, அப்போது அவனுக்கு அவ்வளவாக விருப்பம் இல்லைதான்.

ஆனால், அழைப்பவர்கள் அறிந்தவர்களாகவே இருந்து, அவர்களுக்கு அவசியமும் இருந்துவிட்டால்?

செல்லை ஆன் செய்து, பேசுவது யார் என்று வினவினான்.

''நான் செல்வி பேசுகிறேனுங்க'' என்றது, எதிர் முனைக் குரல்!

அலுவலகத்தில், அவனது நேரத்தை வீணாக்கிய அசமஞ்சம்! தரமற்ற இரு அண்ணன்மாரின் அருமைத் தங்கை! அப்பாவின் பலவீனத்தை பயன்படுத்தி, அவரது உடைமைகள் அனைத்தையும் எழுதி வாங்கிய பேராசைக்காரி!

11



அந்த செல்வியோடு பேச மறுப்பதற்கான பல காரணங்கள் பிரதீபனுக்கு இருந்தன.

ஆனால், ஆறு ஆண்டுகளாக அவனுடைய தந்தையோடு வாழ்ந்தவள், அவள். சொல்ல வந்ததைக் கேட்க கூட முடியாது என்று, அவனால் அலட்சியப்படுத்த முடியாது.

அவன் முடிவெடுக்குமுன், அவள் பதறிவிட்டாள் ''ஹலோ, ஹலோ, அய்யாவோட புள்ளை தானுங்களே, பேசுகிறது?'' என்று பதட்டத்துடன் கேட்டாள்.

அய்யாவோட பிள்ளை!

என்ன மாதிரி அடையாளம், இது?

''பிரதீபன்தான் பேசுகிறேன். என்ன விஷயம்? எதுவானாலும் சற்று சீக்கிரமாகச் சொல்லுங்கள். நான், இங்கே ஒருவருக்காகக் காத்திருக்கிறேன். அவர் வந்ததும், போக வேண்டும்'' என்றான், எதையும் காட்டாத குரலில்.

ஒரு பெருமூச்சு விட்டு ''என்னாலேயும் ரொம்ப நேரம் பேச முடியாது தம்பி... த... தம்பினு கூப்பிட லாங்களா?'' என்று கேட்டாள் அவள்.

''இம்'' என்றான் அவன் சுருக்கமாக.

மறுத்தால், இன்னொரு பெயர் சொல்லியாக வேண் டுமே! ஏதோ, சொல்ல வந்ததைச் சொல்லி முடிக்கட்டும் என்பது, அவனுக்கு.

''பாருங்க தம்பி, இத்தை நான் சொன்னதா, வெளியே தெரியக்கூடாது. ஆனால், நீங்க, மேலே பணம் எதுவும் கொடுக்க வேணாம்'' என்றுரைத்து, அவனை அதிர வைத்தாள் அந்த செல்வி.

என்ன கதை இது? பணம் வேண்டும் என்று, அலு வலகத்தில், அவ்வளவு நேரம் அறுத்துவிட்டு... இப் போது வேண்டாமாமா? உத்தமி வேஷமா? இதில்தான், அப்பா ஏமாந்தாரா?

''பணம் வேண்டும் என்று அங்கே, அவ்வளவு நேரம் பேசிவிட்டு, திடீரென்று வேண்டாம் என்றால், இந்தத்

திடீர் ஞானோதயத்தை எப்படி நம்புவது?'' என்று நினைத்ததைக் கேட்டான் அவன்.

''ஞா... ஞானோதயம்னு சொன்னா, நல்ல புத்தியா, தம்பி? ஆனா, அது திடீர்னு வந்தது இல்லை, தம்பி. என்னைக்குமே, நான் பணத்துக்கு ரொம்ப ஆசைப் பட்டது கெடையாது...''

''அத்தனை சொத்துக்களையும் எழுதி வாங்கியவர்கள், இப்படிச் சொன்னால், கேட்க நன்றாக இல்லையே!'' என்று ஏளனமாகச் சொன்னான் பிரதீபன்.

இது என்ன சூழ்ச்சி? என்ன சதித்திட்டத்தின் தொடக்கம் என்று வேகமாக யோசித்தது, அவனது மனம்.

''அய்யோ கடவுளே!'' என்று பதறினாள் அவள். தொடர்ந்து ''நிசமாலும் சொல்லுறேன், தம்பி. எனக்குச் சொத்து பத்து எதுவும் வேணாம். அய்யாவோட பாது காப்பு மட்டுந்தான் வேணுமின்னு, நானாவே எழுதிக் குடுத்து, அய்யாவோட காலிலே விழுந்து, கெஞ்சிக் கேட்டதாலதான், அய்யா, என்னைய ஏத்துக்கிட்டாங்க. நான் எழுதிக் குடுத்தது, உங்க வூட்டிலேதான், பத்திரமா இருக்கும். எடுத்துப் படிச்சுப் பாருங்க தம்பி'' என்று வருத்தக் குரலில் கூறினாள்.

''வீடு முழுக்கத் தேடி, எங்களுக்குச் சாதகமாக எதுவும் அகப்படவில்லை என்பது உங்களுக்கும் தெரிந்துதானே, இருக்கும்? இல்லாத ஒன்றை, எப்படிப் படித்துப் பார்ப் பது? அதனால்தானே, இவ்வளவு தைரியமாகச் சொல்லு கிறீர்கள்?'' என்று கேட்டபோது, அவனது குரலில் கடுமை தெறித்தது.

''அய்யோ தம்பி, எல்லாத்தையும் வெவரமா, வெளக்கமாச் சொல்ல, இப்ப எனக்கு நேரமில்லயே! ஐயா சொல்லுவாக தம்பி, என் பிள்ள, ரொம்பக் கெட்டிக்காரன், அவன் எல்லாத்தையும் சரி பண்ணுவான், ஒன்னையும் பிள்ளையையும் கூடப் பாத்துக் கிடுவான்னு. அப்பப்போ எங்கையா சொல்லுவாக. புரிஞ்சுக்கோங்க தம்பி. இத்த போல, எதுனாச்சியும், நான் பேசுனதா வெளீல, லேசுபாசாத் தெரிஞ்சாக்கூட, அருள் பையனுக்கு ஆபத்து. இப்ப நான் உங்க கிட்டே பேசினதா நீங்க சொல்லி, யாரானும் கேட்டாக்க, நீங்களே யாரு மின்னாடியும் வச்சுக் கேட்டாக் கூட, நான் பேசவே, இல்லையின்னு சொல்லி, சத்தியமே பண்ணிருவேன். பண்ணித்தான் ஆவணும், இல்லாட்டி... யம்மாடி! இன்னொரு தபா நல்லாத் தேடிப் பாருங்க தம்பி. எங்கய்யாவும் ரொம்பக் கெட்டிக்காரங்க. கண்டவுங்க கையில மாட்டாமக் கொள்ளாம, எங்கனாச்சும் மறைச்சு... என்ன மாச்சும் இருக்கும், தம்பி... அத்தைப் படிச்ச பொறகானும்.. அய்யோ! யம்மாடி வ... வச்சிடுறேன்யா.''

அந்தக் குரலில் செய்கையற்ற, செய்வது அறியாத தவிப்பு, பிரதீபனைப் பாதித்தது. அச்சமும், ஆனால் இதை எந்த அளவுக்கு நம்புவது?

எந்த அளவு என்று என்ன கணக்கு? சொன்னது முழுதுமே கூட, நூறு சதவீதமாகவோ, வெறும் நாடகமாகவும் இருக்கக்கூடும். முகம் காட்டாத ரேடியோ நாடகம்! ஏனெனில், அவளது பேச்சை நம்புவதற்கான சிறு ஆதாரம் கூட, அவள் தரவில்லை!

ஏதேனும் இருந்தால்தானே, தர முடியும்?

சீட்டுக் கட்டு மாளிகை போல, அஸ்திவாரமே இல்லாமல், எவ்வளவு பெரிய மாளிகை கட்டிவிட்டாள்!

அப்பாவி மாதிரியான குரலை மட்டுமே மூலதனமாக வைத்து, அவனையே, சற்று ஆடிப்போக வைத்து விட்டாளே! கெட்டிக்காரி! அதில்லாமலா, அப்பாவை வளைத்துப் பிடித்தது மட்டுமில்லாமல், எல்லாச் சொத்தையும் எழுதி வாங்குவாள்?

இது இன்னொரு விதமான அணுகுமுறை! ஏமாற்று வேலை! அவ்வளவே!

கோர்ட், கேஸ் என்றாலே, தப்பு வழி செல்லும் அந்தக் குடும்பத்துக்கு, ரொம்பவும் தயக்கம். அத்தோடு, கோர்ட்டுக்குப் போனாலும், இப்போதைக்கு கைக்குப் பயன் வந்து சேராது. அதிகப் பணம் எடுக்கவும், வழி விட மாட்டேன் என்கிறான். அதனால், இப்படி அப்பா பெயரைச் சொல்லி, இளக்கப் பார்க்கிறாள்.

கெட்டிக்காரன்! புரிந்து கொள்வான்! உன்னையும் பிள்ளையையும் பார்த்துக் கொள்வான் என்றெல்லாம், தந்தை சொன்னாராமே!

அடேயப்பா! என்னவோ அவளுடைய அண்ணன் மார்தான் கெட்டவர்கள் போல, இவள் மிகவும் நல்லவள் போல, என்ன சாகசம்!

தந்தையைப் பற்றிச் சொல்லும்போது, அந்தக் குரலில், என்னவொரு தழுதழுப்பு! 'டப்பிங்' பண்ணப் போனால், கோடிகோடியாய்ப் பணம் குவியுமே! அதை விட்டு, அவனுடைய தந்தையைப் பிடித்து...

ஆனால், தேவநாதனைப் பற்றி, அவள் சொன்னது, அவரது குணத்தோடு, நன்றாக ஒத்துப் போனதுதான்,

அவனை உறுத்தியது. அது, ஒருவேளை ஆறு ஆண்டு களாகத் தந்தையைக் கவனித்து வந்ததில், அவள் கண்டுபிடித்ததாகவும் இருக்கலாம்.

அன்றி, முதலிலேயே கூடக் கணித்திருக்கலாம். இல் லாமலா, அவனுடைய தந்தை போல ஒருவரை, ஒருத்தி தன்வயப்படுத்தியிருக்க முடியும்?

ஆனால், அண்ணன்மார் பற்றி, அவள் இன்னா ரென்று பேர் சொல்லாமல் குறிப்பாய்ச் சொன்னது. பிரதீபனுக்குக் கொஞ்சம் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. ஒருவேளை, நூற்றில் ஒரு வாய்ப்பாக, அவள் பெயர் கூறாமல், பிறர் அறியாமல், அவனிடம் தெரிவிக்க முயன்றது உண்மையாக இருந்தால்... என்று அவனை யோசிக்கவும் வைத்தது.

படியிலேயே நின்று யோசித்த பிரதீபனைச் சாலை யில் சென்ற கார் ஒன்றின் ஹார்ன் ஒலி நடப்புக்குக் கொண்டு வந்தது.

கையில் இருந்த செல்லைப் பார்த்தவன் ஒரு கணம் யோசித்து, படியிறங்கிச் சென்றான். குடியிருப்பின் கீழ்த்தளத்தில் பொதுத் தேவைகளுக்காக ஒரு குழாய் இருந்தது. அதில் கைக்குட்டையை நனைத்து முகத்தைத் துடைத்துக் கொண்டு, நிமிர்ந்தால், தூரத்தில் வசுந்த ராவின் ஸ்கூட்டி வருவது தெரிந்தது.

வரவேற்கும் விதமான, லேசான புன்னகையோடு அவன் நிற்க, வாகனத்தை உரிய இடத்தில் நிறுத்தி விட்டு, அவனை நோக்கி வந்தாள் அவள்.

''இன்று சீக்கிரமாக திரும்பி வந்து விட்டீர்கள் போல?'' என்று கேட்டவாறு மாடிப்படியைப் பார்த்தவளின் நடை தயங்கியது.

''வசுந்தரா...'' என்று மெல்ல அழைத்தான் பிரதீபன்.

அவள் மௌனமாக அவனைத் திரும்பிப் பார்க்கவும், ''சில நாட்களுக்குப் பிறகு இன்றுதான் வெளியே... அலுவலகம் போய்விட்டு வருகிறாய். மொட்டை மாடிக்கு வாயேன். சற்று நேரம் காற்றாட நின்றுவிட்டு, அப்புற மாக வீட்டுக்குப் போகலாம்'' என்று அழைத்தான்.

சற்று வியந்து நோக்கியபோதும், ஓர் ஆறுதல் பெரு மூச்சுடன் அவனோடு படியேறிச் சென்றாள் அவள்.

வெக்கை முழுதாகக் குறைந்திராத நேரம் என்றாலும், ஒரு பக்கத்தில் பெரிதாக வளர்ந்திருந்த மாமரத்து நிழலும், வீசத் தொடங்கியிருந்த மாலை காற்றும் ஓரளவு குளிர்ச்சியைத் தந்தன. அங்கங்கே, பூங்கா, விளையாட்டுத் திடல் என்று, ரசித்துப் பார்ப்பதற்கு இடங்களும் இருந்தன.

அவரவர் கண்ணில் பட்டதைப் பற்றிக் குறிப்பிட்டு, பொதுப்படையாகச் சற்று நேரம் பேசிக் கொண்டிருந் தார்கள்.

திடுமென ''ரொம்ப நன்றி, பிரதீபன்'' என்றாள் வசுந் தரா ''பாட்டி இல்லாத வீட்டுக்குள் எப்படியடா போவது என்று ரொம்பக் கஷ்டப்பட்டுக் கொண்டே வந்தேன். இப்போது மனம் கொஞ்சம் லேசாக, ஒரு மாதிரி பரவா யில்லாமல் இருக்கிறது'' என்று கண்களில் நன்றியுடன் கூறினாள் வசுந்தரா.

''அனுபவம்'' என்றான் அவன், சுருக்கமாக.

சட்டென நினைவு வர ''ஓ! உங்களுக்கும் சமீபத்தில்தானே...'' என்று பரிவாகக் கூறியவளின் கண்கள் அகன்று விரிந்தன. ''ஐயோ பிரதீபன், நீங்கள் எனக்காகச் சீக்கிரமே வந்து, இப்படிக் காத்திருந்து, என்னை இங்கே கூட்டி வந்தீர்களா? ரொம்ப நன்றி தீபன்!'' என்றாள் அவள். உணர்ச்சி வசத்தால் தழுதழுத்த குரலில்.

பேசும்போதே, அவளது கண்களில் இரு பெரிய நீர் மணிகள் திரண்டு வழிந்தன.

அவள் புறமாக எழுந்த கைகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ''நன்றி சொல்லும் அளவுக்கு பெரிய காரியம் இல்லை. ஆனால், பெரிய இழப்பின் பின், முதன் முறையாக வெளியே அதிக நேரம் போய்வரும் இன்று எப்படி இருக்கும் என்று தெரிந்திருந்ததால், அதை நீ அனுபவிக்கக்கூடாது என்று நினைத்தேன்'' என்றவன், கைப்பிடிச் சுவர் மீது இருந்த அவளது கை மீது வருடினாற்போல, லேசாகத் தட்டிக் கொடுத்தான்.

ஆறுதல் அடைந்தவளாக முறுவலித்த வசுவின் முகம் மறுபடியும் வாடியது. ''பாவம் மதியம் வினு என்ன பாடு பட்டாளோ?'' என்றாள் அவள்.

''வினுவோடு கூடப் போய். அவளோடு சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுத்தான், மானசி வீட்டுக்குப் போயிருப்பாள். அதனால், வினயாவைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்!'' என்ற பிரதீபன் தொடர்ந்து கூறினான். ''அவ்வப்போது அலையடிக்கிற மாதிரி, மறைந்து போனவர்களின் நினைவு வந்து கொண்டே தான் இருக்கும். அந்த நேரத்தில், அவர்களைப் பற்றிய தாக, நல்ல விஷயங்களை... அதிலும், வேடிக்கைப்

பேச்சை நினைத்து மனதை ஆறுதல் படுத்த முயற்சிக்க வேண்டும்.''

''ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது, பிரதீபன். எப்படி சமாளிப்பது என்றே தெரியவில்லை. சமயத்தில் பாட்டி இல்லை என்பதே மறந்து, எதையாவது செய்து விடுகிறோம். அப்புறம் நினைவு வரும்போது, என்னமாக வலிக்கிறது, தெரியுமா? இன்று வினு, பாட்டிக்கு மாத் திரை போடுவதற்காக வென்னீர் எடுத்து வந்தாள். நேற்று, நான் ஒரு கூத்து அடித்து, அப்பாவிடமும் வாங் கிக் கட்டிக் கொண்டேன்.''

''நேற்று இரவா? அப்பா அதட்டல், உன் அழுகை! லேசாகக் கேட்டது. நானும் மனுவும் விழித்துதான் இருந் தோம்! ஒன்று சொல்லட்டுமா, வசு? அப்பா, ஆண் பிள்ளை! பெரியவர், பொதுவாக, அழுவதற்கு லைசன்ஸ் இல்லாத பிறவி! வருத்தத்தை, வேறு எப்படிக் காட்டு வார்? கோபமாகத்தானே? அவர் ஆத்திரம் காட்டினால்? பொறுத்துப் போய்விடுவதை விட்டுச் சின்னப் பிள்ளை மாதிரி, அதென்ன அழுகை?'' என்று சற்று கண்டிப்பது போலக் கேட்டான் பிரதீபன்.

''இல்லை, தீபன். எங்கள் வீட்டில், நேற்று நடந்ததே வேறு. நேறறு எம்ஃப்எம்மில் ஒரு பழைய பாட்டு வைத்தார்கள். பாட்டிக்குப் பிடித்தமான பாட்டு. அப்படி ஏதாவது பாட்டு வைத்தால், பாட்டிக்குக் கேட்கும் சக்தி கொஞ்சம் குறைந்துவிட்டது என்பதால், நன்றாகக் கேட்கும் விதமாகச் சத்தம் கூட்டி வைப்பேன். என் பழக் கப்படி, பாட்டிக்குப் பிடித்த பாட்டு வந்ததும், அனிச்சை செயல் போல, யோசிக்கவே இல்லாமல், ஒலியை

அதிகரித்துவிட்டேன். அதுவேறு, ஒரு சினிமாப் பாட்டா? பாட்டி இல்லாத நேரம், என்ன பாட்டும் கூத்தும் என்று, அவருக்குக் கோபம் வந்துவிட்டது? பிறகு, கர்நாடக இசையில் கீர்த்தனை மாதிரி வரும் பழைய சினிமாப் பாடல்கள் எதெது பாட்டிக்குப் பிடிக்கும், எப்படி ரசித்துக் கேட்பார்கள் என்பதை எல்லாம் அப்பாவிடம் எடுத்துச் சொல்லி, ஏன் ஒலியைக் கூட்டினேன் என்றும் சொன்னதும், அவரும் சேர்ந்து அழுதார்'' என்று வசுந்தரா வருத்தத்துடன் விவரம் சொன்னாள்.

''என் அப்பாவுக்கும் பழைய படப் பாடல்கள் ரொம்பப் பிடிக்கும், வசு. 'துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ' என்று ஒரு பாரதிதாசன் பாட்டு! பழைய சினிமா ஹிட்! வைத்து வைத்துக் கேட்பார்! அப்பா வீட்டுக்கு வந்துவிட்டார் என்றாலே, இந்த மாதிரிப் பாட்டுக்கள் முழங்கத் தொடங்கிவிடும். நிறைய நிறைய பழைய 'ஹிட்' பாடல்கள் சேர்த்து வைத்திருந்தார். பல பழைய பின்னணி பாடகர்களின்...'' என்று சொல்லிக் கொண்டே போன பிரதீபன் சட்டென விறைத்தான்.

மகன் புத்திசாலி! புரிந்து கொள்வான்!

'மன்னிக்க வேண்டுகிறேன்' என்று மட்டும் எழுதினாரே!

தேவநாதனின் அந்த 'மன்னிக்க வேண்டுகிறேன்' செய்த பிழைக்காக மகனிடம் மன்னிப்பை வேண்டுவதற்கான வெறும் கடிதம் அல்ல!

புத்திசாலி என்று அவர் பெரிதாக எண்ணிய மைந்தன் புரிந்து கொள்வதற்கான ஒரு முக்கியக் குறிப்பு!

12

''என்ன பிரதீபன்?'' என்று வசுந்தரா இரண்டாவது தடவையாகச் சற்று அழுத்தமாக அழைத்த பிறகுதான், அவளோடு உரையாடியபடி மொட்டை மாடியில் நின்று கொண்டிருக்கிறோம் என்பதே, பிரதீபனுக்கு நினைவு வந்தது.

அவளது பூவிரல்கள் கன்றிச் சிவக்கும் அளவுக்கு, அவளது கையை அழுந்தப் பற்றியிருப்பதும்! சற்று முன், மென்மையாகத் தட்டிக் கொடுத்த அதே கையால்!

''ஓ! சாரி!'' என்று பதறிப்போய் அவளது கரத்தை விடுவித்து, வளையம் போலக் கன்றியிருந்த இடத்தை வேகமாகத் தேய்த்து விட்டபடி, ''ரொம்ப வலிக் கிறதோ?'' என்று தவிப்புடன் கேட்டான் அவன்.

அவனது கவலை கப்பிய முகத்தைப் பார்த்ததும், வசுந்தராவுக்குச் சிரிப்பு வந்துவிட்டது இலகுவாக கையை விடுவித்துக் கொண்டு ''ஆமாம், எனக்கு அனிச்சம் பூமேனி, அதி மென்மையான சருமம்! கொஞ்சம் அழுத்திப் பிடிக்குமுன், தோல் வழண்டு, புண்ணாகிப் போய் விடும்! அதை விடுங்கள், தீபன்! உங்கள் முகத்தைப் பார்த்தால் நியூட்டன், ஐன்ஸ்டீன் மாதிரி ஏதோ அரிய,

பெரிய உண்மையைக் கண்டுபிடிக்கிற, அல்லது கண்டுபிடித்த வினாடியில் இருக்கிற மாதிரித் தோன்றியதே! என்ன உண்மை? சொல்லலாம்தானே? ஏதேனும் ரகசியம் என்றால், தயங்காமல் சொல்லி விடுங்கள். நான் தப்பாக நினைக்கவே மாட்டேன்'' என்றாள் அவள் சகஜமாக.

முகத்தில் ஓர் ஆறுதல் கலந்த புன்னகை அரும்ப, ''உன் வீட்டாருக்குத் தெரியாத ரகசியம், எங்களிடம் என்ன இருக்கிறது?'' என்றான் பிரதீபன்.

''ஆமாம்... அதுதான் நைட் டியூட்டி அன்று போட்டு உடைத்து, மானு உங்களிடம் வாங்கியும் கட்டிக் கொண்டாளே!'' என்று அவள் சீண்ட ''அதையும் போட்டுக் கொடுத்துவிட்டாளா?'' என்றவனின் முகத்தில் அசடு வழிந்தது.

''பின்னே? வினுவும், மானசியும் உயிர்த் தோழிகள் என்றால், சும்மாவா? வினுவால், அம்மாவிடம் சொல்லாமல் இருக்க முடியாது, அம்மா, என்னிடம்! அப்புறம், உங்கள் வீட்டில் ரகசியமாவது, இன்னொன்றாவது?'' என்று நகைத்தாள் அவள்.

இவளது கண்கள் எவ்வளவு பளபளப்பாக இருக்கின்றன என்று எண்ணியவாறே, ''பெண்களிடம் ரகசியம் தங்காது என்பது, சரிதான் போல!'' என்றபோது, அவன் குரலில் சீண்டல் இருந்தது.

''ஊகூம்! அந்தக் கதை இங்கே சொல்ல வேண்டாம். என் மனதில் இருக்கும் ரகசியத்தை இதுவரை நான் யாரிடமும் சொன்னதில்லை. இனி, சொல்லப் போவதும் இல்லை!'' என்றாள் அவள் பதிலுக்கு.

ஆச்சரியமாகப் பார்த்து ''அதென்ன ரகசியம்?'' என்று கேட்டான் அவன்.

''ஆகா! நீங்கள் கேட்பதற்காகத்தான், இவ்வளவு நேரம் கா..த்துக் கொண்டிருந்தேன்! உடனே சொல்வேனே! போங்கள் சார்! அதுதான், யாரிடமும் சொல்ல மாட்டேனே என்றேனே! அந்த 'யாரிடமும்'மில் நீங்களும் அடக்கம்தான். சரி... சரி, அதை விடுங்கள். உங்கள் கண்டுபிடிப்பு எப்படி? என்னிடம் சொல்லக் கூடியது தானா? இல்லையா?''என்று வினவினாள் வசுந்தரா.

''நானாகச் சொல்லாவிட்டாலும், சுற்றி வளைத்து வந்துவிடப் போகிறது. அதற்கு நானே சொல்லி விடுகிறேன். உன்னைப் போல நண்பர்களிடம் மறைத்தேன் என்கிற கெட்ட பேர் எனக்கு எதற்கு?'' என்று ஒரு சிறு குட்டு வைத்தான் அவன்.

புரிந்து முறுவலித்தாலும், மறுப்பாகவே தலையசைத்து ''வேண்டவே வேண்டாம். நல்ல பிள்ளையாக நீங்கள் சொல்லுங்கள்'' என்றாள் அவள்.

''அப்பா எழுதி வைத்த அந்த 'மன்னிக்க வேண்டுகிறேன்' பற்றி'' என்றான் அவன் யோசனையோடு.

''ஆமாம்! வாழ்க்கையையே தலைகீழாகப் புரட்டிப் போட்ட அத்தனைக்கும், எண்ணி இரண்டே வார்த்தைகளில் மன்னிப்புக் கேட்டிருந்தார் என்று, மானசி சொன்னாளே! அதை உங்கள் இருவராலும் நம்ப முடியவில்லை என்றும் சொன்னாள். அதில், வேறு ஏதேனும் குறிப்பு இருக்கும் என்று எவ்வளவு யோசித்தும், ஒன்றுமே புலப்படவில்லை என்றும்.. ஒருவேளை... இப்போது தெரிந்துவிட்டதா? நியூட்டன் கண்டுபிடிப்பு, அதுதானா?'' என்று ஆவலாகக் கேட்டாள் வசுந்தரா.

''கிட்டத்தட்ட அப்படித்தான்! அது மன்னிப்புக் கடிதம் அல்ல என்பது நிச்சயமாகிவிட்டது. மன்னிப்புக் கேட்கும் போர்வையில், அந்த இரு வார்த்தைகளால், அப்பா, எனக்கு ஒரு குறிப்பை காட்டியிருக்கிறார். மற்றவர்கள் கொஞ்சமும் அறிந்து கொள்ள முடியாதபடி! அது எதற்காக என்று, அந்த மர்மம் பற்றியும், இப்போது ஒரு சந்தேகம் வருகிறது. ஆனால், அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். முதலில் இதை பற்றிய விவரம் கண்டு பிடித்தாக வேண்டும். இது... புதையல் வேட்டை விளையாட்டில் போல, முக்கியமான எதையோ கண்டு பிடிப்பதற்காக அப்பா தந்திருக்கும் குறிப்பு இது! இது என்னவாக இருக்கக் கூடும்? திரைப்படப் பெயரா? புத்தகத் தலைப்பா? அல்லது, ஏதாவது பாடலா? அதைக் கண்டு பிடித்தால், அங்கே அடுத்த குறிப்பு இருக்குமா? எப்படியும் இந்த முதல் குறிப்பு ரொம்ப முக்கியம்...''

மனதில் தோன்றிய எண்ணங்களை, பிரதீபன் அப்படியே வெளியிட்டு வர, வசுந்தராவும் குறுக் கிடாமல் கவனத்துடன் கேட்டாள்.

சிந்தனையில் மறைந்த சிறு அமைதியின் பின்னர், ''இந்த மூன்றில் ஒன்றுதான் என்று எனக்கு நிச்சயம், வசு. திரைப்படப் பெயர்களை விரைவில் ஆராய்ந்து விடலாம்! ஆனால், புத்தகங்களும், பாடல்களும்? அவை எத்தனை லட்சங்கள் இருக்கக்கூடும்?'' என்றான் மலைப்பும் கவலையுமாக ''அன்றாட வேலைகளுக்கு இடையில் இதையும் ஆராய்வது என்றால், ரொம்ப நீண்ட காலப் போராட்டமாக அமையும் போலிருக்கிறதே!''

''உங்கள் அப்பா கதை புத்தகம், முக்கியமாகத் தமிழ்க் கதைகள் படிக்கிற வழக்கம் உண்டா?'' என்று, வசுந்தரா விசாரித்தாள்.

சட்டென அவன் முகம் தெளிந்தது ''இல்லை வசு! கிடையவே கிடையாதே! வீட்டுக்கு வந்த பிறகும், கையோடு கொண்டு வந்த ஃபைல்களைத் தான், அவர் பார்த்துக் கொண்டிருப்பார். பின்னணியில் ஒலிக்கும் பாடல்கள்தான், அவரது பொழுதுபோக்கு, இறுக்கம் தளர்விக்கும் மருந்து எனலாம். படிக்க நேரமே கிடையாது எனும்போது, இப்போது புத்தகங்களை முழுதாக விட்டு விடலாம்! அது ஒரு பாதி வேலை மிச்சம்! அடுத்து, பாட்டுக்கள்...'' என்றவன், தந்தையின் அறையைக் கற்பனை செய்து பார்த்துவிட்டு ''அதுவும் நிறையத்தான், வசு! பழைய எம்கேடி பாடல்களில் இருந்து, எஸ்.பீ.பி., சுசீலா பாடல்கள் வரை, சுவரில் பதித்த ஒரு கண்ணாடி அலமாரி நிறைய சிடிக்கள்! என்றாலும், தேடுவது கிடைக்கும்வரை, ஒன்று விடாமல், பார்த்துதான் ஆக வேண்டும்!'' என்றான் பிரதீபன் உறுதியான குரலில்.

''கவலைப்படாதீர்கள், பிரதீபன் நாம் நால்வரும்... ஏன் அம்மா கூட உதவி செய்வார்கள். ஐந்து பேருமாக, முதலில் இந்த மன்னிக்க வேண்டுகிறேன் பாடலைத் தேடுவோம். அப்புறம், அது தரும் விவரத்தை வைத்து, அடுத்த முயற்சிக்குப் போவோம்'' என்றாள் வசுந்தரா.

''ரொம்ப நன்றி, வசு! நீ சொல்வதைப் பார்த்தால், அதிக பட்சமாகவே, ஒரு வாரம் பத்து நாட்களில் வேலை முடிந்துவிடும்போல இருக்கிறதே!'' என்று சந் தோஷமாக கூறியவனின் முகம் சட்டென இருண்டது.

''என்ன பிரதீபன்?''

முஷ்டியாய் இறுகிய விரல்களைப் பிடிவாதமாகத் தளர்த்தியபடி, அவன் சொன்னான் ''இது எல்லாமே,

சும்மா ஓர் ஊகம்தான், வசு. ஒன்றுமே இல்லாமல் கூடப் போய்விடலாமே'' என்றான் மரத்த குரலில்.

''போகாது!'' என்று, அவன் கையில் அழுந்த ஒரு தட்டுத் தட்டி, உறுதியாகச் சொன்னாள் வசுந்தரா. ''உங்கள் அப்பா, எவ்வளவு நிச்சயமாக, நீங்கள் புத்திசாலி, புரிந்து கொள்வீர்கள் என்று சொல்லியிருக்கிறாரே! அவர் அவ்வளவு உறுதியாகச் சொன்னதே, இது வெறும் ஊகமல்ல. உள்ளே என்னவோ இருக்கிறது என்று தெளிவுபடுத்தவில்லையா? மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாமல் தைரியமாக இருங்கள், தீபன்!''

ஊடுருவுவது போல, அவளை ஆழப் பார்த்தான் பிரதீபன், ஆறுதலான ஒரு சிறு மூச்சு வந்தது.

பிறகு, ஒரு சின்ன முறுவலுடன், ''நீ சொன்னால் மறுத்துப் பேசாமல் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று தான் முன்பே முடிவு செய்தாயிற்றே!'' என்றான் இலகுவாக!

''பரவாயில்லையே! நல்ல விஷயங்கள் கூட, நினைவிருக்கிறதே!'' என்று அவள் கூற, இருவரும் சிரித்த முகமாகவே, கீழிறங்கிச் சென்றனர்.

அடுத்த வேலை, பிரதீபனுக்குத் தயாராக இருந்தது.

அவர்களது பழைய வீட்டுக்குப் போய், ஆடியோ சிடிக்களை அள்ளிக் கொண்டு வர வேண்டும். அது ஒன்றும் எளிதல்ல என்று, பிரதீபன் உணர்ந்தே இருந்தான்.

அதுவும், அதிகப் பணம் கொடுக்க மறுத்திருக்கும் இந்த நேரத்தில், முத்தையனும் ரத்தினவேலும் நிச்சயமாக முட்டுக்கட்டை போடுவார்கள்.

என்ன திடீரென்று என்றும் யோசிப்பார்கள்.

அவர்கள் அறியாமல், வீட்டினுள் செல்வது கடினம். வீட்டின் உள்பகுதியை இரு பூட்டுக்களால் பூட்டி, ஒரு பூட்டின் சாவி, அந்த சகோதரர்களிடம் இருக்கிறது. அவர்கள் வீட்டினுள் புகாமல் தடுப்பதற்காக,, 'பார் நாங்களும் போகவில்லை' என்று காட்டுவதற்காகப் பிரதீபன், தானாகவே இந்த ஏற்பாடு செய்ய வேண்டி யிருந்தது.

இந்தச் சில மாதங்களாக, இதற்காக, அவன் வருத்தப் பட்டதே கிடையாது. அந்த வீட்டிற்குள் அவர்கள் உள்ளே வர முடியாமல் தடுத்தது குறித்து, அவனுக்குப் பெருமை தான்!

ஆனால், இப்போது சங்கடப்பட்டான்!

இவன் சிடிக்களைக் கேட்கப் போய், அவர்கள் ஏதே னும் சந்தேகப்பட்டு, ஒட்டு மொத்தமாக எல்லாவற்றை யும் நாசம் பண்ணி விடக்கூடாதே!

ஆனால், எப்படியும் சிடிக்களைக் கொண்டு வந்தே ஆக வேண்டும்!

சற்று யோசித்துவிட்டு, பிரதீபன். செல்வியுடைய சகோதரர்களைக் கூப்பிட்டு அனுப்பினான்.

ஐயப் பார்வையுடன், அவர்களும் வந்தார்கள். ''இன் னாப்பா விஷயம்?'' என்று கேட்டார்கள்.

''பெரிதாக ஒன்றும் இல்லை. நீங்கள் கேட்டது பற்றித் தங்கையிடம் பேசி கொண்டிருந்தேன். அவள் கொடுக்கச் சொல்கிறாள்'' என்று தூண்டிலில் புழுவை மாட்டினான்.

பெரியவன் முகத்தில் கவனம் கூடவும் ''அவள் சொல்கிறாள், என்னண்ணா, நாம் இரண்டே பேர்.

அவர்கள் நாலு பேர். சின்னப் பையன் வேறு. தொழிற் சாலை வருமானம் தாங்கும் என்றால், ஐந்தோ, பத்தோ ஆயிரம் கூடக் கொடுக்கலாமே என்றாள். ஆனால்...'' என்ற பிரதீபனின் பேச்சில், ரத்தினவேல் குறுக்கிட்டான்.

''பொம்பள புள்ளைக்கு வூட்டில ஆவற செலவு புரியுது. ஆனா, அஞ்சும் பத்தும் எந்த மூலைக்கு?''

''அதற்கு மேல் என்றால் முடியாது..'' என்று கடுமை யாகப் பேரம் செய்து, மாதாமாதம் மேலே இருபதாயிரம் ரூபாய் கொடுப்பதற்கு, அரை மனதாகக் காட்டி, பிரதீபன் ஒத்துக் கொண்டான்.

''தங்கச்சிக்கு டாங்க்ஸ் சொல்லுப்பா!'' என்று அவர் கள் உற்சாகத்துடன் எழுகையில், ''அப்புறம் இன் னொன்று'' என்று தொடங்கினான்.

மறுபடியும் முத்தையன் முகத்தில் தோன்றிய கவ னத்தை கவனியாதவன் போலப் பேசினான் ''அந்த வீட்டில் பெரிய டீவி, சின்ன டீவி, ம்யூசிக் சிஸ்டம், எல்லாம் சும்மாக் கிடக்கிறது. பயன்படுத்தாமல் போட்டு வைத்தால், வீணாகி விடுமாம். உங்களுக்கு வேண்டி யதை எடுத்துக் கொண்டு...''

''உனுக்கு என்னா வோணும்?''

தோளைக் குலுக்கி ''எனக்கு என்ன வேண்டும்? அப்பா வாங்கிப் போட்டது, வீணாகக்கூடாது. மற்றபடி, இங்கிருந்து பஸ்சில் வீட்டுக்குப் போய்ச் சேருமுன், இரவாகி விடுகிறது. இரவு வேலைகளில் தங்கைக்கு உதவி செய்துவிட்டு படுத்தால், காலையில் எழுந்து கிளம்பி வரத்தான் சரியாக இருக்கிறது. இதில், டீவியில் படம், சீரியல் என்று எதை உட்கார்ந்து பார்க்க முடியும்?'' என்றான் அலுப்பாகப் பிரதீபன்.

''அப்பனா, உனக்கு டீவி பிரயோசனம் இல்ல!'' என்ற தம்பியை அடுத்து, ''அதான், இந்தத் தொழிலை விட்டுடலாம்னாலும் கேட்க மாட்டேங்கிறியே!'' என்று முத்தையன் பழைய பாட்டைத் தொடங்கினான்.

''ஊகூம், அப்பா தொடங்கிய தொழில். விட முடியாது. இப்போதும், அப்பா வாங்கிய பொருள் வீணாகக் கூடாது என்றுதானே, அவைகளை எடுத்துப் போய் பயன்படுத்தலாம் என்கிறேன்'' என்று கத்தி மேல் நடக்கிற எச்சரிக்கையோடு பிரதீபன் பேசினான்.

''அண்ணே'' என்று தொடங்கிய ரத்தினவேலைக் கையமர்த்திவிட்டு எதையோ தீவிரமாக யோசித்த முத்தையனின் முகம், விரைவிலேயே தெளிந்தது.

''என்னண்ணே?''

''ஒண்ணுமில்லடா, தம்பி. இன்னாத்துக்கு அந்த வூட்டுக்குள்ளாரப் போவ நெனைக்குதுன்னு யோசிச்சுப் பார்த்தேன். அதான், இணுக்கு விடாம தேடிப் பாத்தும், அன்னைக்கு ஒண்ணுமே கெடைக்கலையே! பூட்டின வூட்டுக்குள்ளார இன்னைக்கு மட்டும் என்னா கெடைக்கும்? மச்சான் புள்ள, நெசமாத்தான் பேசுது போல!'' என்றான் முத்தையன்.

''அண்ணே!'' என்று விட்ட இடத்திலிருந்து, ரத்தினவேல் மறுபடியும் தொடங்கினான். ''மச்சான் புள்ளக்கித்தான், படம் பாக்கவே நேரம் இல்லியாமே! டீ.வி.ங்களை, நாம வச்சுக்கலாமா? என் ஆளுகிட்ட ஒண்ணைக் கொடுத்தேன்னு வையி. நாஞ் சொன்னதையெல்லாம் கேட்பா! மத்தவனுங்கள, அண்ட விட மாட்டா!''

தலையில் அடித்துக் கொண்டான் முத்தையன்.

பிரதீபனிடம் திரும்பி ''அங்க, உனுக்கு இன்னா வேணும்?'' என்று கேட்டான்.

'தாதி மனம் நீர்க் குடத்தே' என்பது போல, தந்தையின் ஆடியோ சிடி வரிசைகள் கண்ணுக்குள்ளேயே நின்ற போதும், எதுவும் தோன்றாதவன் போலத் தோளைக் குலுக்கினான் பிரதீபன்.

''போய்ப் பார்ப்போம். எனக்கும் பயன்படக்கூடிய எதுவும் கண்ணில் பட்டால் பார்க்கலாம்'' என்றான், பெரி தாக அக்கறை காட்டாத குரலில்.

அதன்பிறகு, பெரிய தடைகள் எதுவும் நேரவில்லை.

முத்தையன் சகோதரர்களோடு பழைய வீட்டுக்குள் சென்றபோது, பிரதீபனின் நெஞ்சுக்குள் பந்தயக் குதிரை ஓடத்தான் செய்தது. ஆனால், வெளியே காட்டிக் கொள் ளாமல், அடக்கிக்கொண்டு, பழைய நினைவுகளில் ஆழ்ந்தவன் போல, அங்கங்கே நின்று, நின்று வீட்டில் சற்று நேரம் சுற்றினான்.

பழைய நினைவுகள் வந்தது, உண்மையும்தான். கொஞ்சம் கஷ்டப்பட்டுத்தான் சமாளிக்க வேண்டியிருந்தது.

டீ.வி.யை எடுத்துப் போவது பற்றிய வேலையை ஒருவன் பார்த்தபோதும், அடுத்தவன், பிரதீபன் கூடவே சுற்றினான், உள்ளூர ஐயம்தான்!

ஆனால், இடையில் சிஸ்டத்தைப் பார்த்துவிட்டு, ''இது களைக் கொஞ்சம் கொண்டு போனால், பாட்டுக் கேட்டுக் கொண்டே, மானசி வேலை பார்க்கலாமே! பழக்கம் இல்லாத வேலை செய்யும்போது, கஷ்டம் தெரியாது!'' என்று திடீ ரென்று ஐடியா தோன்றியது போலக் காட்டி, மியூசிக் சிஸ் டத்தோடு, பிரதீபன் சிடிக்களை அள்ளிக் கொண்டு சென்ற தில், அவனுக்கு ஒரு சின்ன சந்தேகம் கூட வரவில்லை!

வசுந்தராவின் யோசனைப்படி வேலை செய்ததில், உரிய சிடியை வெகு விரைவிலேயே கண்டு பிடித்து விட்டார்கள்.

ஆனால், குறுக்கிச் சுருக்கி, தேவநாதன் எழுதியிருந்த விதமும், எழுதியவற்றைப் பத்திரப்படுத்தியிருந்த விதமும், அவருடைய மக்களைக் கலங்க வைத்தன.

இரு சிடிக்களுக்கு இடையே உராய்வைத் தவிர்ப்பதற்காக வைக்கப்படும் ஃபோம் ஷீட்டை அகற்றிவிட்டு, அந்த இடத்தில் உள்ளடங்கும் விதமாக மடித்து, தன் கையால் எழுதிய இரண்டு காகிதங்களை, அவர் வைத்திருந்தார்.

அண்ணன் தங்கை இருவருமே தடுத்தும், எதிர் வீட்டுக் குடும்பம் பிறகு வருவதாகக் கூறி, அவர்களுக்குத் தனிமையைத் தந்து, விலகிச் சென்றது.

ஒருவகையில் தேவைப்பட்ட தனிமைதான். தந்தையைப் பற்றியதாயிற்றே! கூடவே, அவருடைய இன்னொரு குடும்பம்!

உள்ளூர நன்றியோடு, காகிதங்களைப் பிரித்துப் படித்தார்கள்.

13

கிடைத்த இரு காகிதங்களுள் ஒன்று, தேவநாதன் எழுதிய இறுதி உயில்!

தேவையான முறையில், நம்பகமான சாட்சிக் கையெழுத்துக்களுடன் தெளிவாக இருந்தது.

பிரதீபன், மானசியுடைய இரு வழித் தாத்தா பாட்டி களின் பணமும், தேவநாதனின் முயற்சிகள் அனைத் திலும் முதலீடு செய்யப்பட்டிருப்பதால், சொத்துக்கள், தொழில் எல்லாம் அவர்கள் இருவருக்கும் மட்டுமே என்று உரிமைப்படுத்தப் பட்டிருந்தன! கையாளும் உரிமை, பிரதீபனுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.

முகம் மாற, ''அண்ணா, அந்தப் பையன் அருள்?'' என்று மானசி கேட்டாள்.

செல்வியின் பேச்சு நினைவு வர, ''அப்பாவுக்கு நம்மிடம் உள்ள நம்பிக்கை!'' என்றான் பிரதீபன்.

அடுத்த காகிதம் அவரது தன்னிலை விளக்கம்.

போரூரை அடுத்து, தோட்டத்துடன் கூடிய வீடு ஒன்றைத் தேவநாதன் வாங்கியிருந்தார். அதைச் சுத்தம் செய்யும் பொறுப்பைச் செய்த பெண்ணுடைய மகள் செல்வி, மோசமான அண்ணன்மார். தாயின் மறைவுக்குப் பிறகு, அவளது நிலைமை சகிக்க முடியாததாக ஆயிற்று. ஒரு கடிதம் எழுதிக் கொடுத்துப் பாதுகாப்புக் கேட்டாள்.

அந்தக் கடிதத்தை, ஒற்றையான இன்னொரு சிடியின் காகித உறையின் உட்புறமாக, எழுத்துத் தெரியாதபடி, மாற்றி ஒட்டி வைத்திருப்பதாகத் தெரிவித்தவர், அந்த உறவு பற்றிப் பெரிதாக விளக்கம் எதுவும் கூறவில்லை.

''அப்படியானால், கடிதம் பற்றி அந்தப் பெண் சொன் னது மெய்தான் போல!'' என்றாள் மானசி, வியப்புடன்.

அவள் சொன்ன எல்லாமே மெய்யாக இருந்தால்?

ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு, மேலே படித் தனர்.

''அப்போது, உங்களிடம் சொல்ல முடியவில்லை. நீங்கள் பழகிய வட்டத்தில் தலை குனியக்கூடாது என்று நினைத்தேன். அப்போது உங்களால் புரிந்து கொள்ள முடியாது என்பது வேறு. இன்னும் கொஞ்சம் முதிர்ச்சி ஏற்படட்டும் என்று நினைத்தபோதுதான், அந்த மோச மான அண்ணன்மார் சிறையில் இருந்தும், ஊர் சுற்றலில் இருந்தும், அங்கே வந்து சேர்ந்தனர். நிலைமை, அவர் களுக்குப் பிடித்துப் போயிற்று.

''பத்திரிகைச் செய்தி கொடுக்கப் போவதாக இரு வருமாக என்னை பிளாக்மெயில் செய்யத் தொடங் கினர். அவர்களை நான் கையாண்ட முறை தவறு. பல முறை பணத்தைக் கொடுத்து அவர்களை அடக்கினேன். இது சரியல்ல என்று நான் உணர்ந்து மறுத்தபோது, அருளைக் கொன்று விடுவதாக, அவர்களது அடுத்த மிரட்டலில், இருவருமே நடுங்கிப் போனோம்.

''இரண்டு ஆண்டுகளின் தவிப்பு, உடம்பை, முக்கிய மாக இதயத்தைப் பாதித்தது போலும். உடல்நிலை தெரிந்ததும், உயில் எழுதச் சொன்னார்கள். அவர்கள் பெயருக்கு எழுதினால், நீ கோர்ட்டுக்குப் போகக் கூடும் என்று அஞ்சியே, எல்லாவற்றையும் அருள், செல்வி பெயருக்கு எழுதினார்கள். பிள்ளை, மனைவி என்றால் உயில் செல்லும் என்றும் எண்ணினார்கள்.

''தங்கையைத்தான், பிள்ளை பெயரைச் சொல்லி மிரட்டி பிடியில் வைத்துக் கொள்ளலாமே!

''நம் வீட்டில் எனக்குக் காவல், முத்து. மருத்துவர் எனக்குத் துணையாக அனுப்பியது போல, அது ஒரு நாடகம்!''

மானசியைப் பார்த்து ''அதுதான், ஒரு கேள்வி கேட்கு முன், அந்த முத்து அப்படி விழுந்தடித்து ஓடியிருக் கிறான்! ஏமாற்று வேலை என்று பிடித்து விடுவோம் என்ற பயம். படுபாவி!'' என்றான் பிரதீபன்.

''இதயம் தொடர்பாக வேறு ஒரு டாக்டரிடம் பரி சோதனைக்குச் சென்றபோது, அவரிடம் அவகாசம் கேட்டு, அங்கே உட்கார்ந்து முத்துவுக்குத் தெரியாமல் இந்த உயிலை எழுதி, அவரிடமே சாட்சிக் கையெழுத் தும் வாங்கினேன். இன்னொரு கையெழுத்து, ஒரு மருந்துக் கடைக்காரர். முத்துவுக்குப் போக்குக் காட்டி அனுப்பிவிட்டுக் கையெழுத்து பெற்றேன். வம்பு வழக்கு பிடிக்காவிட்டாலும், இருவருமே உயிலுக்கு சாட்சியாக இருப்பார்கள்.

''நான் உயிரோடு இருக்கும் வரைதான், அருளைக் காட்டி மிரட்ட முடியும். எனக்கு பிறகு, இந்த உயில் வெளிவந்தால், அருளுக்கு ஆபத்து நேர வழியில்லை என்பது எனக்கு. அதனாலேயே என் மறைவு வரை வெளியே தெரிய வேண்டாம் என்று, உண்மை உயிலை இப்படி மறைத்து வைத்தேன்.

''அட்டையாக முத்து கூடவே இருந்ததால், நம் வக்கீல் ஞானத்திடம் கூட, என்னால் தெளிவாக எதையும் பேச முடியவில்லை. உனக்கு ஒரு மன்னிப்புக் கடிதமாகத் தான், குறிப்பையேக் கொடுக்க முடிந்தது. எப்படியாவது, கண்டு பிடித்து விடுவாய் என்கிற நம்பிக்கை! ஆசை!

''ஒரு வகையில்... என்னை மன்னித்து விடு, தீபுக் கண்ணா! மனும்மா, நீயும்.

''அத்தோடு, மனு போல மற்றவர்களும் தீபும்மா, உன் பொறுப்பே!'' என்று கடிதம் முடிந்திருந்தது.

சில ஆண்டுகளாகத் தந்தை பட்ட பாடு உணர்ந்து மானசி கண்ணீர் வடிக்க, அவரது கடைசி நேரத் தவிப்பு புரிந்து, பிரதீபனும் கலங்கினான்.

ஆனாலும், தன்னிடம் தந்தைக்கு எவ்வளவு நம்பிக்கை!

உயிலைப் பதிவு பண்ணி, உற்சாகத்துடன் வேகமாக வேலை செய்தார், ஞானசகாயம். பழக்கமான போலீஸ் அதிகாரிகள் மூலம், முத்தையன் சகோதரர்களைப் பல் பிடுங்கிய பாம்புகளாக்கி, ஊரைவிட்டு விரட்டவும் ஏற்பாடு செய்தார்.

''பேத்திக்கு பெயர் சூட்டு விழா, வரும் ஞாயிறன்று. குழந்தை பிறந்து நாற்பதாவது நாளில் வைத்திருக்கிறோம். தைரியமாக அழைக்கிறேன். இரண்டு பேரும் கட்டாயம் வாருங்கள். உயில் விஷயம் வெளியாகிவிட்டால், யாருடைய விருந்துபசாரத்திலும், இனிக் குறைவு இராது!'' என்று நண்பர் மக்களிடம் சிரித்தார்.

ஒரு கணம் திகைத்துவிட்டு, சின்னவர்கள் சேர்ந்து முறுவலித்தனர். குழந்தை பிறந்ததை, அவர்களிடம் சொல்லக்கூட இல்லாத காரணம், அவர்களுக்கு இப்போது புரிந்தது. இப்போதுதான் அவர்கள் உலகம் தெரிந்தவர்கள் ஆயிற்றே!

உரிய பரிசுடன், சந்தோஷமாகப் போய் வந்தார்கள்.

அடுத்து பிரதீபன், செல்வியை அழைத்துப் பேசினான்.

விளையாட்டுக் காட்டுவதாக அருளை அழைத்துக் கொண்டு, மானசி எதிர் வீட்டுக்குச் சென்றுவிட, செல்வி மனம் விட்டுப் பேசினாள்.

''ஐயா மேலே தப்பு கிடையாது, தம்பி. எல்லாத்துக்கும் காரணம் நான்தான். ஐயா அங்க வரும்போது, மேசை மேல போட்டோப் படம் வைத்திருப்பாங்க. நீங்க நாலு பேருமா எடுத்த படம். பாத்துக்கிட்டே இருப்பேன். அப்படி பார்க்கிறபோது...

''தப்புதான். பேராசைதான். அம்மா எடத்திலே நான் நிற்கிற மாதிரி... மனசுல அப்படிப் பெருமையா இருக்கும்! ஆனா, நான் சத்தியமா, அதுக்காக அப்ப நான் எதுவும் பண்ணலையய்யா!'' என்று அச்சத்துடன் அவன் முகத்தைப் பார்த்தாள்.

முகத்தில் எதையும் காட்டாமல் ''சரி சொல்லுங்கள்'' என்றான் அவன்.

''எங்க அம்மா செத்துப் போச்சு. அண்ணனுங்களிலே, ஒருத்தன் செயிலிலே. பெரியவன் எங்கே போனானின்னே தெரியாது. துணை இல்லாத, குப்பத்திலே வாழ முடியாது, தம்பி. அந்த மாதிரித் துன்பம் பொம்பளையாப் பொறந்தாத்தான் தெரியும். தெனமும் செத்துப் பொழச்சேன். அப்போதான்...''

''அந்த யோசனை வந்திச்சு. சொன்னாப்போல, ரொம்பப் பெரிய பேராசைதான். ஆனா, விட முடியல. அந்தக் கடுதாசி எழுதிக்கிட்டுப் போய் நெலமையைச் சொல்லிட்டு, ஐயா கிட்டே கொடுத்தேன். ஐயா... நல்ல பையனாப் பார்த்துக் கலியாணம் முடிச்சு வக்கிறதாத் தான் சொன்னாக, ஆனா, ஐயாவுக்கே தெரியாம, எத்தினியோ நாளு, வீட்டுப் பின் கட்டுப் படியிலே படுத்துத் தூங்கிட்டுப் போயிருக்கேன். இத, யாரு ஒத்துக்கு வாங்க? அத்தோட...

''என் மனசத்தான் மொத்தலயே சொன்னேனே! சாமி படத்து முன்னாலே, கழுத்துக்கு ஒரு மஞ்சக் கயிறு, ஐயா

ஆளுங்க பாதுகாப்பு போதும்னு ஐயா காலிலே வுளுந் தேன்.

''மூணு வருசம், ரொம்ப சந்தோசம். ரொம்பய்யா. மூணு சென்மத்து சந்தோசம்! உங்க ரெண்டு பேரையும் பத்தி, ஐயா நெறையாச் சொல்லுவாக ரொம்பக் கெட்டிக் காரவுங்க... நல்ல புள்ளைங்கம்பாக. சின்னப் புள்ளைங்க. இன்னும் கொஞ்சம் பொறுப்பு வந்ததும், உன்னப பத்தி சொல்றேனும்பாங்க. இன்னும்...'' என்று நெஞ்சடைக்க அவள் ஒரு கணம் பேசாதிருந்தபோது, அன்று தந்தை அவளிடம் என்ன சொல்லியிருக்கக் கூடும் என்பது, பிரதீபனின் மனதிலும் படமாய் விரிந்தது.

சற்றுப் பொறுத்து ''மேலே சொல்லுங்கள்'' என்றான் மெதுவாக.

அவள் மறுபடியும் தொடங்கினாள் ''எனக்கு வேற என்ன வேணும்? தம்பிக்கு நம்பத் தோணுமோ என்னமோ, அந்தக் கடிதாசைக் கூட, ஐயாவோட பேக்கிலே, உள் ளாரப் பையிலே, நான்தான் வச்சேன். மெய்யாலும்தான். ஏன்னா, அந்த நேரத்திலே எனக்குச் சனி பிடிச்சு, ஒண்ணுக்கு ரெண்டா, என் அண்ணன்மாரு ரெண்டு பேருமே வந்து சேர்ந்தாங்க. அவனுங்களால, எங்க ஐயா பட்ட கஷ்டம்! பாவிங்க! கடைசில, எங்கையா உசிரையே குடிச்சிட்டானுங்களே!'' என்று சத்தமின்றிக் கண்ணீர் சொரிந்தாள் அவள்.

சற்றுப் பொறுத்து ''உங்களுக்கு இப்போது என்ன வேண்டும்?'' என்று பிரதீபன் கேட்டான்.

''இந்தப் பையன் அருள, நல்லாப் படிக்க வச்சா, அது போதும், தம்பி?''

''என் அப்பாவுக்கு மூன்று பிள்ளைகள். அருள் படிப்பு, வாழ்க்கை எல்லாம் நல்லபடியாக நடக்கும். நான் கேட்டது, உங்களுக்கு என்ன வேண்டும் என்று.''

அவனைப் புரியாமல் பார்த்தாள் அவள். ''எதுவும் வேண்டாமின்னு, ஐயாகிட்டயே, எழுதிக் குடுத்திருக்கேனே, தம்பி! மனசார எழுதினதுதான், தம்பி. அதனாலே, சொத்து பத்து ஒண்ணும் எனக்கு வேண்டாம்'' என்றாள் தெளிவாக.

''இனி எல்லாப் பொறுப்புக்களையும் என்னிடம் விட்டு விடுங்கள். நான் பார்த்துக் கொள்வேன் என்று அப்பா சொன்னதை மட்டும் நம்புங்கள்'' என்றவன் எழுந்து ''வாருங்கள் எதிர் வீட்டில் ரொம்ப சினேகிதம். அறிமுகப் படுத்தி வைக்கிறேன்'' என்று, அவளை கூட்டிச் சென்றான்.

அன்னபூரணியை அழைத்து ''இவர்கள் அன்னபூரணி ஆன்ட்டி. ஆன்ட்டி, என் அப்பாவுடைய இரண்டாவது மனைவி'' என்று அறிமுகம் செய்வித்தான்.

மீண்டும் பழைய வீட்டுக்குச் செல்ல, முடிவு செய் தார்கள். பெரும்பாலும் பழைய வேலையாட்களே மறுபடி யும் வேலைக்கு வந்தார்கள்.

ஆனால், முதல் உயில் விவகாரத்தால், ஊரெல்லாம் விஷயம் தெரிந்து விட்டபோதும், பெருமளவு அதனாலேயே, இந்த பெரிய வீட்டில் செல்வியை வசிக்கச் செய்வது சரியல்ல என்று ஞானசகாயம் அபிப்பிராயப்பட்டார்.

முதலில், இந்தப் பழைய வேலையாட்கள் அவளை மனதார மதிக்க மாட்டார்கள். அவர்களுக்கு கஷ்டமாக இருக்கும் என்றார்.

தந்தையுடைய உயிர் நண்பரும், அவர்களுடைய உண்மையான நன்மை விரும்பியுமான அவரது கருத்

துக்கு மதிப்புக் கொடுப்பது நல்லது என்று அனுபவத்தில் அறிந்திருந்த பிள்ளைகளும், வக்கீலின் கருத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

அத்தோடு, போரூர் வீட்டில் வாழ்வதே, செல்விக்கும் ஆறுதலாக இருந்தது.

எனவே, அந்த வீட்டையே அவளுக்கு உரிமையாக்கி, நல்லபடியாக வாழ்வதற்கும், பிரதீபன் ஏற்பாடு செய்து கொடுத்தான்.

சொந்த வீட்டுக்குக் கிளம்புமுன், எதிர் வீட்டில் அண்ணனுக்கும் தங்கைக்கும் விருந்து கொடுத்தார்கள்.

கையோடு எடுத்துப் போவதற்காக, அன்னபூரணி முறுக்கும் ரசகுல்லாவும் செய்து கொடுத்தாள்.

மூடியிட்ட பாத்திரங்களில், அவைகளைக் கொண்டு வந்து கொடுத்த வசுந்தராவிடம் பிரதீபன் தனியே பேசினான்.

''இப்போதேனும் உன் ரகசியம் சொல்லலாமில்லையா?'' என்று கேட்டான்.

ஒரு தரம் கண்களை மூடித் திறந்து ''இப்போதுதான் சொல்லவே கூடாது'' என்றாள் அவள்.

ஏதோ உறுத்த ''வருத்தமான விஷயமா?'' என்று விடாமல் வினவினான் அவன்.

சற்று திடுக்கிட்டு ''ஏன் கேட்கிறீர்கள்?'' என்று பதிலுக்குக் கேட்டாள் அவள்.

''ம்ம்ம்... முகத்தைப் பார்த்தால், ஏதோ வருந்துவது போலத் தோன்றியது. என்ன காரணம் என்று தெரிந்தால்...'' என்றான் அவன், அவளையே பார்த்து.

''ச்சு, என்ன நீங்கள்?'' என்று அலுப்பாய்ச் சொன்னாள் அவள் ''கொஞ்ச காலமே என்றாலும், இவ்வளவு

நட்பாகப் பழகி விட்டுப் பிரிந்து போகிறீர்களே, அந்த வருத்தம்தான் இராதா? துருவித் துருவிக் கேட்கிறீர் களே!'' என்று வெளியே செல்லத் திரும்பினாள்.

''நட்பாக மட்டும்தானா?'' என்றது, அவனது மனம் அவ்வளவுதானா?'' என்று கேட்டது உதடு.

தலை திருப்பி அவனைப் பார்த்தவளின் கண்கள், கிண்டலாகச் சிரித்தன. ''பின்னே? நடு ராத்திரியெல் லாம் கடைக்குப் போய் எவ்வளவு உதவிகள் செய்தீர்கள்! இன்னும் மொட்டை மாடிக்குப் போய் கதை பேசி, மனதை மாற்றி... இந்த இடத்துக்கு அடுத்து வருகிறவர் கள் இந்த உதவிகளைச் செய்வார்களா? அதைவிட, இதை யெல்லாம் எங்களிடம் எதிர்பார்த்தால் என்ன செய்வது, சார்? அந்தக் கவலைதான் மண்டையை உருட்டி, ஒரே தலைவலி! நீங்கள் என்னவென்றால்... ஏய் வினு! அழுதது போதும். அவளைக் கொஞ்சம் சந்தோஷமாகப் போக விடு! இன்னும் நின்று கொண்டிருந்தால், அப்பா திட்டப் போகிறார்!'' என்று மானசியைக் கட்டிப் பிடித்து அழுது கொண்டிருந்த தங்கையை அதட்டி, பிடித்து இழுத்துக் கொண்டு போனாள்.

பிரியா விடை பெற்று, சொந்த வீட்டுக்குச் சென்ற மறு நாளே, அண்ணனும் தங்கையும் மறுபடியும் குடியிருப் புக்கு திரும்பி வந்தனர்.

நேரே வீட்டுக்குள் வந்தவர்களை ஆச்சரியமும் மகிழ்ச் சியுமாக, சம்பந்தம் குடும்பத்தினர் வரவேற்றனர்.

வீட்டுக்குள் வருகிறவர்களை, ஏன் வந்தாய் என்று நேரடியாகக் கேட்பதற்கு நம் விருந்தோம்பல் கலாச்சாரம் இடம் தராதல்லவா?

வரவேற்று, அருந்தப் பானம் கொடுத்து உபசரித்த பின் ''என்ன விஷயம்? எதையும் விட்டுப் போய்விட்டீர் களா, பிரதீபன்?'' என்று சம்பந்தம் விசாரித்தார்.

''ஆமாம் அங்கிள்'' என்று தாயின் அருகே நின்ற வசுந்தராவைப் பார்த்தான் பிரதீபன்.

கன்னம் சிவந்தபோதும், அவள் தந்தையைக் கவலை யுடன் பார்ப்பதைக் கவனித்துவிட்டு, ''அங்கிள் நான் சொல்வதை, நீங்கள் கொஞ்சம் பொறுமையோடு கேட்டு, யோசித்து, அதன் பிறகு பதில் சொல்ல வேண்டும்'' என்ற பீடிகையோடு, தொடங்கினான்.

''பாருங்கள் அங்கிள், அந்த வீட்டை விட்டு வரும் போது, எங்களது சொத்து, சுகம் எல்லாவற்றையும் இழந்து, வெற்று ஆட்களாக, ஒன்றுமில்லாமல் இங்கே வந்ததாக நினைத்தோம். ஆனால், அதே வீட்டுக்குத் திரும்பப் போய் ஒரே நாளில், முழுதாக ஒரு நாள் கழியும் முன்பாகவே, உண்மையான சொத்து சுகத்தை இப்போதுதான் இழந் திருக்கிறோம் என்று, எங்களுக்குப் புரிந்து போயிற்று!'' என்று நிறுத்தி, எல்லோரையும் பார்த்தான்.

தோளில் தலை சாய்த்த மகளை, அன்னபூரணி மகிழ்ச்சி யோடு அணைக்க, ஒன்றும் புரியாமல் ஒருவர் மாற்றி, ஒருவரைப் பார்த்து வினயா விழிக்க, சம்பந்தத்தின் முகத்தில், உண்மை புலப்படுவதற்கான அறிகுறி லேசா கத் தென்படலாயிற்று.

''ஆமாம் அங்கிள்! எங்களுக்குத் தேவையான மிகப் பெரிய சொத்து. உங்கள் வசுந்தராதான், உங்கள் எல்லோ ரின் பிரிவுமே கஷ்டமாகத்தான் இருக்கிறது என்றாலும், அவள் இல்லாமல், என்... எங்களால் வாழ முடியாது. அங்கிள், தயவு பண்ணி, வசுவை எனக்குத் திருமணம்

செய்து தருவீர்களா?'' என்று தன் மனதைப் பதவிசாகத் தெரிவித்தான் பிரதீபன்.

வினயா கண்களை அகல விரிக்க, ''ஆமாம் அங்கிள். வசுக்கா வந்தால்தான், அந்த வீடே வீடு மாதிரி இருக்கும்! சரி சொல்லுங்கள், அங்கிள்'' என்று மானசியும் கொஞ்சுதலாக கேட்டாள்.

விருந்தாளிகளை மட்டுமின்றி, வீட்டினரையும் ஒரு தரம் கூர்ந்து பார்த்தார் சம்பந்தம்.

தொண்டையை லேசாகக் கனைத்துக் கொண்டு, ''என்ன பூரணி, சும்மா நிற்கிறாய்? நேற்று செய்த ரசகுல்லா இருக்குமே! நல்ல சேதி சொல்கிறவர்களுக்குக் கொடுக்க இனிப்பாக எடுத்து வா!'' என்று கூறி, எல்லோர் மனதையும் மகிழ வைத்தார்!

கலகலப்பான பேச்சின் நடுவே வசுந்தராவை நெருங்கி ''எனக்கு மறைத்து, உன்னிடம் ரகசியம்! அதை மேடம் சொல்ல மாட்டீர்களாக்கும்! சொல்லு, இதுதானே, உன் ரகசியம்?'' என்று தணிந்த குரலில் பிரதீபன் வினவினான்.

விழிகள் மலர, அவனை ஏறிட்டாள் வசுந்தரா, கண்ணோரம் சுருங்கத் தலை சரித்து நோக்கி, ''இல்லை என்று சொன்னால் 'ஙே' என்று அசடு மாதிரி விழிப்பீர்கள். அதனால், ஐயோ பாவம் என்று ஒத்துக் கொள்கிறேன்'' என்று நகைத்தாள் அவள்.

''சுற்றி எல்லோரும் இருக்கிற தைரியம்! ஒரு நாள் தனியாக மாட்டப் போகிறாயல்லவா? அப்போது, சொல்லிப் பார், தெரியும்!'' என்று அவனது மிரட்டலில், அவளது கன்னங்களில் ரோஜாக்கள் மலர்ந்து விகசித்தன!

தமிழ்நேசன் மின்நூலகம்
www.tamilnesan1981.blogspot.in



வைவகை பெருகி வருமோ...

ரமணிசந்திரன்